

கல்கி
KALKI 23.11.97 ரூ. 4.00
கவர் ஸ்டோரியை ஒட்டி, வாசகர்களுக்கு ஒரு 'தேசிய ஒருமைப்பாடு' போட்டி - உள்ளே!
கல்கத்தா → சென்னை →
விசாகப்பட்டினம்...



பாபாவுக்கு ஏன் இந்தப் படாடோபம்?

இம்மாதம் 23ந் தேதி எழுபத்திரண்டாவது ஜயந்தி காணும் பகவான் ஸத்திய ஸாயி பாபாவுக்கு அண்மையில் தங்க ரதம் சமர்ப்பிக்கப்பட்டபோது, "ஏனிந்தப் படாடோபம்?" என்று கேட்டவர்கள் உண்டு. அவர்களில் மிக, மிக, மிக முக்கியமானவர்... பாபாவேதான்! ரதத்தில் ஆரோஹணித்த அன்று அவர் ஆற்றிய உரையிலிருந்து...

நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிடினும் சரி; இது போன்ற விழாக்களில் எனக்கு விருப்பமேயில்லை. பகவானுக்குச் சமர்ப்பிக்க வேண்டியது மாசுபடாத அன்பொன்றே. அந்த அன்பே கடவுள். அன்பிலேயே வாழுங்கள். அதனையே தெய்வத்திற்கு அளியுங்கள்.

தங்க ரதம் எனும் இந்தப் பெரிய பளுவை என் மேல் ஏன் சுமத்த வேண்டும்? இது போன்றவற்றுக்கு நான் ஒரு போதும் ஆசைப்பட்டதில்லை. இவற்றுக்குப் பதிலாக நீங்கள் சமூக நலத் தொண்டுகளுக்காக எவ்வளவு வேண்டுமாயினும் செலவிடுதல் நல்லது.

இங்கேயும் சரி, எங்கேயும் சரி, உங்கள் இஷ்ட மூர்த்திக்கு நீங்கள் அளிக்க வேண்டியது தூய அன்பே. எங்கேயுமே தங்க ரதம் போன்ற காணிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டாம். இப்படிப்பட்ட காணிக்கைகளை விரும்புபவர் தெய்வீகமானவராக இருக்க முடியாது.

இனி இங்கே பக்தரெவரும் ஸ்வர்ண ஆபரணங்கள், ஸ்வர்ண ரதம், அலங்காரத்தேர் போன்ற எதுவும் கொண்டு வர வேண்டாம். இது போன்ற பொருட்களை விற்று மக்களுக்குக் குடி நீர் கிடைப்பதற்குச் செலவிட்டால் சிலாக்கியமாக இருக்கும்.

தொடக்கத்திலிருந்தே நான் பாரத நாட்டு மரபின்படியான மூன்று விஷயங்களிலேயே என் சங்கற்பத்தைச் செலுத்தியிருக்கிறேன். அன்பளிப்பாகவே மக்கள் யாவருக்கும் அன்ன பானம் வழங்குவது, வித்யை (கல்வி)

வழங்குவது, வைத்தியம் வழங்குவது என்ற மூன்றினை இந் நாடு தொன்றுதொட்டுச் செய்து வந்திருக்கிறது.

வித்யை தலையை (அறிவை)க் குறித்தது. வைத்தியம் இதயத்தைக் குறித்து. இவ்விரண்டும் இங்கு அன்பளிப்பாகவே வழங்கப்படுகிறது. முதல் வகுப்பில் சேருவதற்குக் கூட பெருத்த நன்கொடை தர வேண்டியதாக இன்றைக்கு வெளியில் இருந்தாலும் இங்கு மட்டும் கட்டணமேயில்லாது கல்லூரி முடிவு வரை வைத்திருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் என்னுடையதே என்பதே என் உணர்வாக இருப்பதால் அன்பளிப்பாகக் கல்வி தருவதில் நான் விசேஷமாக ஒன்றும் கண்டுவிடவுமில்லை! எல்லோரும் என்னுடையவர் என்பதனால் என்னால் முடிந்த எல்லாம் செய்கிறேன்.

நான் கொடுப்பது, ஏற்பது இரண்டும் அன்பு ஒன்றே.

எனக்கும் உங்களுக்கும் பரஸ்பர அன்பு தான் உறவு. இதயத்தோடு இதயத்தின் தொடர்பே நம்மிடை நிலவுவது.

எனவே (தங்க ரதக் காணிக்கைக்குக் காரண புருஷரும், ஐம்பதாண்டுகளுக்கு மேல் பக்தி பூண்டொழுகி வருபவருமான மதுரையைச் சேர்ந்த) சுப்பிரமணியம் செட்டியார் என்ன நினைத்தாலும் சரி, இந்த ரதத்திற்கு எவரேனும் விலை கூறினாரானால் அதை விற்று, கிடைக்கும் தொகையை மேலும் பல கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக* செலவிடுவதில் மகிழ்ச்சி காண்பேன்.


செட்டியார் தமது வாழ்நாளில் இந்த ரதோற்சவம் காண வேண்டும் என்பதை ஒரே அபிலாஷையாகக் கொண்டு, அதே பணியாக இருந்து, உழைத்து, நிறைவேற்றமும் கண்டு, மிகுந்த அன்போடு அதனைச் சமர்ப்பிக்க வந்தார். அந்த அன்புள்ளத்தைத் திருப்திப்படுத்தவே அதில் ஏறி அமர்ந்து கொண்டேன். இல்லாவிடில் அதன் அருகிலேயே போயிருக்க மாட்டேன்.

இனி இதுபோன்ற உத்தேசத்திற்கு எவரும் இடம் கொடுக்க வேண்டாம். இஷ்ட மூர்த்திக்கும் உங்களுக்கும் உள்ள உறவு இதயத்திற்கு இதயத் தொடர்புதானேயன்றி இது போன்ற வெளிப் படாடோபத்திற்கு அதில் இடமில்லை. ■

— ரா. கணபதி

** இரண்டாண்டு முன்பு, புட்டபர்த்தி உள்ள அனந்தப்பூர் மாவட்டத்தில் 731 கிராமங்களுக்கும் ஏழு நகரசபைப் பட்டணங்களுக்கும் பாபாவின் அறக்கட்டளையினர் முன்னூறு கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றியது வாசகர்களுக்கு நினைவிருக்கும். சென்ற அக்டோபர் 11ந் தேதி அத் திட்டம் ஆந்திர மாநில அரசின் வசம் அன்பளிப்பாக ஒப்படைக்கப்பட்டது.*

வியாபாரத்துக்கு ஒரு வழி!



"பெங்களூரில் மாவலி என்ற ஹோட்டலுக்கு ஒரு சமயம் போயிருந்தேன். திடீரென்று சமையல் அறைப் பக்கம் போகலாமென்று எண்ணம் தோன்றியது. போனேன். தோசை சுடுபவர் வாயில் துணியைக் கட்டியிருந்தார். எதுவும் மௌன விரதமா என்று சமையல்காரரைக் கேட்டேன். 'இல்லை ஐயா, நாங்கள் வேலையிடையே பேசும்போது ஆக்கும் பொருள் மீது எச்சில் விழுந்துவிடுமல்லவா! அதனால்தான் வாயைக் கட்டியிருக்கிறோம்' என்றனர். அந்த ஹோட்டலுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. மிச்சமான மாவு அயிட்டங்களையோ - தங்கிப் போன பலகாரங் களையோ மறு உற்பத்தி செய்து விடுகிறோம் நாம். அவர்கள் அப்படிச் செய்யாமல் மீதமாகும் உணவுப் பொருட்களை சுற்றி யிருக்கும் ஏழைகளுக்கு அளித்து விடுகின்றனர். அது மட்டமல்ல. அவர்கள் வைத்திருக்கும் தட்டுகள் அழுக்காக இருந்தால் நூறு புதிய தட்டுக்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார் அந்த ஹோட்டல் அதிபர்! ஹோட்டலை சுத்தமாகவும் தரமாகவும் வைத்திருந்தாலே சிறப்பாக வியாபாரம் நடைபெறும்."

— பாலு ஜுவல்லர்ஸ் ஐயப்பன், தி.நகரில் புதிதாகத் திறக்க உள்ள 'ஸ்ரீ ஷண்முகா பவன்' ஹோட்டல் அறிமுக விழாவில் பத்திரிகையாளர் சாலி கூறக் கேட்டவர் : ஜம்பு

காதில் விழுந்தவை



● தமிழ்நாடு காங்கிரஸில் உள்ள தம்முடைய எதிர்ப்பாளர்களையெல்லாம் அரவணைத்துச் செல்லும் முயற்சியில் இறங்கியிருக்கிறாராம் தங்கபாலு. அந்த அடிப்படையில் பிரபு கோஷ்டிக்கு இளைஞர் காங்கிரஸ் பொறுப்பைக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டதாம். ஆனால், பிரபு அவ்வளவு சுலபமாக வளைந்து கொடுப்பதாகத் தெரியவில்லையாம். "இவர் தலைவராக வருவதற்கு எங்களவர் மிகவும் உதவியாக இருந்தார். ஆனால் தங்கபாலுவோ காரியக் கமிட்டி உறுப்பினர் பதவிக்கு பிரபு போட்டியிட்டபோது, காலை வாரி விட்டார்; அதை மறப்பாரா ஐயா" என்றார் பிரபுவின் அணுக்கத் தொண்டர் ஒருவர்.

● 'இந்த வாரம் எந்தச் செய்தியும் பரபரப்பானதாக இல்லையா? அமைச்சரவையில் மாறுதல் வருகிறது! என்று போட்டுக் கொள்ள வேண்டியதுதான்' என்று பரபரப்பு பத்திரிகையாளர்கள் தமாஷாகப் பேசிக் கொள்வதுண்டு. இப்போது நிஜமாகவே அமைச்சரவையில் மாறுதல் வரும் என்று சொல்கிறார்கள். குறிப்பாக பத்மநாபா கொலை வழக்கில் சுப்புலட்சுமி விடுதலையான பிறகு இது பற்றி பலமாகவே பேச்சு அடிபடுகிறது. மேலும், ஜெயின் கமிஷன் சர்ச்சையைத் தொடர்ந்து மந்தமாகச் செயல்படும் சில அமைச்சர்களை நீக்கிவிட்டு, டைனமிக்கான ஆட்களை அமைச்சரவையில் சேர்ப்பது பற்றி முதல்வர் மும்முரமாக யோசித்துக் கொண்டிருக்கிறாராம்.

● ஜெயின் கமிஷன் அறிக்கை லீக் ஆனதைத் தொடர்ந்து 'கலைஞர் ராஜினாமா செய்ய வேண்டும்' என்றெல்லாம் கோஷம் எழுவது ஒரு பக்கம் இருக்க; ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்து விடுமோ என்கிற நிலைமையும் மறுபுறம் இருக்கிறதல்லவா! இதைத் தொடர்ந்து தமிழக சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடையே கருத்துப் பரிமாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஜெயின் கமிஷனின் அரசியல் விமர்சனங்கள் எப்படியிருந்தாலும் அரசுக்குத் தொடர்ந்து முழு ஆதரவு கொடுத்துச் செயல்பட வேண்டும் என்று பெரும்பான்மையோர் கருத்து வெளியிட, பட்டும் படாமலும் இருப்பது நல்லது என்றும் சிலர் கருத்துச் சொன்னார்களாம். "ஏற்கனவே நாங்கள் சொல்வதைக் கேட்க மாட்டார்கள். அரசியல் சூழ்நிலை இப்படியிருந்தால் கேட்கவா வேண்டும்?" என்று சொன்னார் அமைச்சரின் அரசியல் உதவியாளர் ஒருவர்.

● தமிழ்நாடு காங்கிரஸில் தமக்குத்தான் செல்வாக்கு என்பதைக் காட்டுவதற்காக வாழப்பாடி பேரணி நடத்துகிறார் அல்லவா? "இந்தப் பேரணி ஏற்பாடுகளுக்குக் கணிசமான நிதி உதவி மட்டுமல்ல; கூட்டத்தைக் காட்ட தமது தொண்டர்களை அனுப்பவும் ஜெயலலிதா முன் வந்துள்ளார்!" என்று கிசுகிசுக்கிறார் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர்.■

— தில்லப்பா



'சின்னப் பொய்களை அழகாகச் சொல்லத் தெரியும்...'

பிரஷர் குக்கர் தோன்றி கேஸ் ஸ்டவ் தோன்றாக் காலத்திலிருந்து மக்களிடையே பரவலாக அறிமுகமாகிவிட்டன பொங்கல், தீபாவளி, புத்தாண்டு மற்றும் பிறந்தநாள் வாழ்த்து அட்டைகள்.

என்றாலும், ஒரு ரிப் வான் விங்கிள் மாதிரி (அல்லது நம்ம கும்பகர்ணன் மாதிரியோ) ஒரு பத்து வருடங்கள் தூங்கிவிட்டு, வாழ்த்து அட்டைகள் விற்கும் கடைக்கு விஸிட் அடித்தால், பிரமிப்பில் மயக்கம் போட்டு விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படியொரு வெரைடி - டிசைன்களிலும் வாசகங்களிலும் - அவற்றின் தனித்தன்மைகளிலும்.

அப்பாவுக்கு, அம்மாவுக்கு, மனைவிக்கு, கணவனுக்கு, மகனுக்கு, மகளுக்கு அனுப்ப தனித்தனியான வாழ்த்து அட்டைகள். அவ்வளவு ஏன், மாமனார், மாப்பிள்ளை, மருமகன் மற்றும் (தமிழில் பல்வேறு உறவு முறைகளைக் குறிக்கும்) அங்கிள், ஆண்ட், நீஸ், கஸின் ஆகியோருக்கெல்லாம் அனுப்புவதற்கும் ஸ்பெஷல் வாழ்த்து அட்டைகள் வந்துவிட்டன. (நாம் பார்த்த வரையில் மாமியாருக்கென்று மட்டும் இப்படி அச்சடிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகள் இல்லை. மருமகள்கள் மேல் அத்தனை நம்பிக்கை!)

குழந்தையின் பிறந்தநாள் விழா வாழ்த்து அட்டைகளிலும் ஒரு வயதுக் குழந்தைக்கு, இரண்டு வயதுக் குழந்தைக்கு என்று ஒவ்வொரு வயதிற்கும் பொருந்தும் வகையில் வாழ்த்து அட்டைகள். நிறைமாத கர்ப்பிணிக்கும் (''Countdown Begins'' என்று வாசகம்!) இரட்டைக் குழந்தை பிறந்ததற்கும் கூட ரெடிமேட் வாழ்த்து அட்டைகள். ஒரே பிரசவத்தில் மூன்று, நான்கு குழந்தைகள் பிறந்தால்? இதற்குப் பொருத்தமாகவும் வாழ்த்து அட்டைகளை விரைவில் வெளிக்கொண்டு வருவார்கள் என்று நம்பலாம். (அல்லது இப்படிப்பட்ட அதிகப்படி ரிலீஸ்களுக்கு ஏற்ற மாதிரியான வாழ்த்து அட்டைகளும் ஏற்கெனவே ரிலீஸாகி விட்டதோ என்னவோ.)

''எல்லாவித வாழ்த்து அட்டைகளுமே வேகமாக விற்றுத் தீர்க்கின்றன. முக்கியமாக, அக்டோபரிலிருந்து ஜனவரி வரை வாழ்த்து அட்டைகளின் விற்பனை மிக அதிகம். தனி நபர்கள் வாங்கும்போது வாழ்த்து அட்டையில் உள்ள வாசகங்களைத்தான் முக்கியமாகக்





கவனிப்பார்கள். அதே சமயம் நிறுவனங்கள் மொத்தமாக வாழ்த்து அட்டைகளுக்கு ஆர்டர் கொடுக்கும்போது வாழ்த்து வாசகங்கள் மிகவும் எளிமையாக, எந்தவித கவிதைத்தனமும் இல்லாமல் இருப்பதையே விரும்புவார்கள்" என்றார் பிரபல நூல் விற்பனை நிறுவனமான 'லாண்ட் மார்க்'இன் உரிமையாளர் ஹேமு சுப்ரமணியன்.

"முன்பெல்லாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத வாழ்த்து அட்டைகள் பல இப்போது நம் நாட்டில் ஜரூராக விற்பனையாகின்றன. கர்ல் பிரண்ட், பாய் பிரண்டுக்கெல்லாம் தனித் தனி வாழ்த்து அட்டைகள். சில வருடங்களுக்கு முன்னால் வரை காதலர் தினத்திற்கு (வாலன்டின் டே) வாழ்த்து அட்டை என்பது நினைத்துப் பார்த்திராத ஒன்று. ஆனால் இப்போது இது வெகு பரவலாக நடைமுறைக்கு வந்து விட்டது" என்றார் அவர்.

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டதா? அல்லது மேலை நாட்டுப் பழக்கங்களை காப்பியடிப்பதில் ஏற்பட்டுள்ள தீவிர ஆர்வமா? அல்லது கடிதம் எழுதுவதைவிட வாழ்த்து அட்டை அனுப்புவதுதான் கௌரவம்(!) என்ற எண்ணமா? வாழ்த்து அட்டைகளின் விற்பனை ஏறுமுகத்தில் இருப்பதற்கு இவற்றைத் தவிரவும் சில முக்கிய காரணங்கள் இருப்பது அவற்றை வாங்குவதற்காக அங்கு வந்திருந்த சிலரிடம் பேசிப் பார்த்தபோது புரிந்தது.



"கடிதம் எழுதுவது என்றாலே எனக்குக் கைவராது. அந்த விஷயத்தில் என்னைப் போன்ற ஒரு சோம்பேறியை நீங்கள் பார்க்கவே முடியாது" என்று பாவமன்னிப்பு கேட்கும் குரலில் கூறத் தொடங்கினார் ராகவ் ரெட்டி. "அதுவும் என்னுடைய அன்பை வார்த்தைகளால் வெளிப்படுத்தவே எனக்குத் தெரியாது. நெஞ்சைத் தொடும் அச்சிட்ட வாழ்த்து வாசகங்களைப் படிக்கும்போது, 'இதுதான் நான் வெளிப்படுத்த விரும்பி, முடியாமல் போன உணர்வு' என்ற எண்ணம் தோணுது. நேரமும் மிச்சம், என்ன எழுதுவதென்று மூளையைக் கசக்கிக் கொள்ளவும் வேண்டாம் என்பதால்தான் வாழ்த்து அட்டைகளை வாங்குகிறேன்" என்றார்.

"நாலு வயசுக் குழந்தைக்கு நான் என்னதான் பிறந்த நாள் வாழ்த்தை கடிதத்தில் எழுதினாலும் புரிஞ்சிக்க முடியாதே" என்றார் மோகன சுந்தரம். சிங்கப்பூரில் இருக்கும் தமது பேத்திக்கு அனுப்புவதற்காகத் தகுந்த வாழ்த்து அட்டை ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தார். "கலர்புல்லா ஒரு க்ரீடிங்கார்டை வாங்கி அனுப்பினால் அதிலுள்ள பளிச் வண்ணங்களையும், கார்ட்டூன் உருவங்களையும் பார்த்தாவது 'ஐ, தாத்தா என் பர்த்டேக்கு அனுப்பியிருக்காரு'ன்னு சந்தோஷப்பட்டுக்குவா" என்றார்.

நுனி நாக்கு ஆங்கிலத்தில், தயக்கமின்றி ஒரு காரணத்தைக் குறிப்பிட்டார் ராகினி. இரு வருடங்களுக்கு முன் திருமணம் செய்து கொண்டவராம். "கணவனுக்குத்தான் என்றாலும் சிலவற்றையெல்லாம் எழுத்து மூலமாகப் பிறந்தநாள் வாழ்த்தில் வெளிப்படுத்த முடியாது. ஆனால் அப்படிப்பட்ட வாசகங்கள் அச்சிடப்பட்ட வாழ்த்து அட்டைகளைத் தேர்வு செய்தால் அந்தப் பிரச்னை தீர்ந்தது" என்றவர், புன்னகையுடன் தாம் தேர்வு செய்திருந்த வாழ்த்து அட்டையை நம்மிடம் காட்டினார். அதிலிருந்த ஆங்கில வாழ்த்தின் தமிழாக்கம் இதுதான்: "எலி பிடிப்பதில் உதவத் தெரியும்; குடும்பத்தினரிடம் அன்பு காட்டத் தெரியும்; சின்னப் பொய்களை அழகாக சொல்லத் தெரியும்; என் தேவை உணர்ந்து முத்தமிடத் தெரியும் - உங்களைக் கணவராக அடைந்தது என் அதிர்ஷ்டம்."

பெரும்பாலான வாழ்த்து அட்டைகளில் (முக்கியமாக நண்பர்களுக்கானதில்) மேல் அட்டையில் பாதி வாசகமும், உள்ளே (ஒரு திடீர் திருப்பம் ஏற்படும்படியான) அந்த வாசகத்தின் மீதிப் பகுதியும் இருக்கின்றன. "அன்பே, இந்த வருடம் எப்படியும் உன்னை மம்மியாக்க வேண்டும் என்று ஆசை" என்று தொடங்கும் வாசகம், உள்ளே "மம்மியாக்கி (அதாவது எகிப்திய மம்மி) உன் உடலை வாழ்நாள் முழுவதும் பாதுகாக்க வேண்டும்" என்கிறது!

"நண்பா, நான் உனக்கு எந்த இன்சல்ட் செய்யும் வாசகம் கொண்ட வாழ்த்து அட்டையையும் தேர்ந்தெடுக்கமாட்டேன்" என்று மேலே காணப்படும் வாசகம், "ஏனென்றால் உன்னைப் போன்ற முதியவர்களிடம் அப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்" என்று

"லீவு லெட்டரும் தராம... தகவலும் சொல்லிவிடாம ஆறுநாள் வேலைக்கு மட்டம் போட்டு இருக்கீங்க.. காரணம் கேட்டா வீரப்பன் கடத்திட்டுப் போய் வச்சிருந்தான்னு சொல்றீங்களே! என்னை என்ன இளிச்ச வாயன்னு நினைச்சுட்டீங்களா?"

— ஜெ. ஸ்டீஃபன்

முடிகிறது!

வாசகங்கள் மட்டுமல்ல, வேறு சில இணைப்புகளும் கூடுதல் கவர்ச்சியை வழங்குகின்றன. மாமனார் அனுப்புவது போன்ற வாழ்த்து அட்டை ஒன்றில் "ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்க வேண்டியதை உள்ளே காணலாம்" என்ற வாசகம். உள்ளே திறந்து பார்த்தால் அங்கே சின்னதாக ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி. கீழே "உங்களைப் போன்ற அருமையான ஒரு மாப்பிள்ளை" என்ற வாசகம்!

புதிதாகச் சில வந்துள்ளன.

வாழ்த்து அட்டையைப் பிரித்தால் "ஹாப்பி பர்த்டே டூ யூ" இசை வெகு இனிமையாக ஒலிக்கிறது. மீண்டும் அதை மூடினால்தான் நிற்கிறது.

"என்னால் உன் பிறந்த நாள் விழாவில் இம்முறை கலந்து கொள்ள முடியாதுதான். அதனால் என்ன, பிறந்த நாள் கேக்கில் இதையும் சேர்த்துக் கொள். நான் இருப்பதாக நினைத்துக் கொள்" வாசகங்களின் கூடவே சின்ன சைஸில் ஒரு வண்ண மெழுகுவர்த்தி.

ஊடலுக்குப் பிறகு கூடவும், உரிய நேரத்தில் வாழ்த்து அனுப்ப மறந்ததற்காக மன்னிப்பு கேட்கவும், கூட 'வாழ்த்து அட்டைகள்' வந்து விட்டன...!

"**எ**ட்டு ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரை வாழ்த்து அட்டைகள் விலையிடப்படுகின்றன. தொடர்ந்து ஏறுமுகத்தில்தான் இருக்கிறது இந்த மார்க்கெட். ஹால்மார்க், ஆர்ச்சீஸ், வின்டேஜ் போன்ற பிரபல அமெரிக்க வாழ்த்து அட்டை தயாரிப்பு நிறுவனங்கள், இங்குள்ள சில நிறுவனங்களோடு டை-அப் வைத்துக் கொள்கின்றன. டிசைன், வண்ணம், வாசகங்கள் எல்லாமே அமெரிக்காவில் தயாரானவைதான். டிரான்ஸ்பரன்ஸிகள் ரெடிமேடாக வந்துவிட, அச்சிடப்படுவது மட்டும் இங்கே நடக்கிறது" என்றார் அஸ்வின். இரு ஆண்டுகளுக்கு முன் அடையாறில் தொடங்கப்பட்டு பிரபலமடைந்து வரும் நூல் விற்பனை நிலையமான 'ஒடிஸி'யின் இயக்குனர். நடுவே சில மாநில மொழி வாசகங்கள் அடங்கிய வாழ்த்து அட்டைகளும் விற்பனைக்கு வைத்து, போணி ஆகவில்லையாம்!



முழுப் பணமும் கொடுத்துத்தான் பொதுவாக இது போன்ற விற்பனை நிலையங்கள் வாழ்த்து அட்டைகளை வாங்குகின்றன. எனவே விற்பனை ஆகாவிட்டால் நஷ்டம் இவர்களுக்குத்தான் (பாதிக்கு பாதி லாபம் என்று நாம் கேள்விப் பட்டதை வைத்துப் பார்த்தால் நஷ்டம் வராது என்பது வேறு விஷயம்).

விற்பவர்களுக்கு நஷ்டமில்லை சரி.... ஆனால் வாங்குவோருக்கு...? நமது எல்லா உணர்வுகளையும் வெளியிட அட்டைகளைத் தேட ஆரம்பித்தால் மனிதர்களுக்கிடையே பேச்சும் பரிமாற்றமும் குறைந்து போகாதா? இதையும் யோசிக்க வைக்கின்றன இந்த வாழ்த்து அட்டைகள்.

பி.கு. : நாய்க்குக் கூட பிறந்த நாள் வாழ்த்து அட்டை வந்துவிட்டது! படித்துப் புரிந்து கொள்கிற 'ஜீனோ'க்கள் வந்து விட்டனவா என்பதுதான் தெரியவில்லை! ■

— ஜி.எஸ்.எஸ்.

வண்ணப்படங்கள் : யோகா

மாடல் : தீபாராம்



"சென்னையிலேயே பர்மிஷன் வாங்கிட்டு வந்தவங்க, எங்க முதலைப் பண்ணையைப் பத்தி நல்லவிதமா சொல்றோம்னுதான் சொன்னாங்க. கடைசியில இப்படி சிக்கல்ல மாட்டி விட்டிருக்காங்க... முதலைகளுக்கு 'பீஃப்' (மாட்டிறைச்சி) போதலைன்னு இவங்க யார் சொல்றதுக்கு? எங்க டாக்டர் சொல்லணும். இல்லே அவங்க மூலமா நாங்க சொல்லலாம். அதை விட்டுட்டு கண்டபடி யாரோ சொன்னதை வச்சுட்டு சன் டீ.வி. இப்படி செஞ்சா எங்க புகழ் பெற்ற ஃபாரஸ்டோட பேர் என்னாவது...? ஜனங்க என்ன நினைப்பாங்க?"

அடுக்கடுக்காய்ப் பொறிந்து தள்ளியவர் பொள்ளாச்சி இந்திராகாந்தி உயிரியல் சரணாலய உயர் அதிகாரி (D.F.O)

அவரின் கோபப் பின்னணி - 'முதலைகள் தவிப்பு' சன் செய்தி – சிறப்புப் பார்வை (31.10.97 இரவு)

கோவையிலிருந்து 100 கிலோமீட்டர் தொலைவில் அமராவதி அணைக்கு அருகே அமைந்துள்ளது இந்த முதலைப் பண்ணை. 407 முதலைகள் உள்ள இப்பண்ணைக்கு பார்வையாளர் கட்டணம் வெறும் 50 காசுகள்தாம்!



• ஜக்காரியா



• கருப்புசாமி

'அமராவதி ஃபாரஸ்ட் ரேஞ்சர்' ஏ. கருப்புசாமியை அங்கு சந்தித்தோம்.

"இந்த உயிரினங்களைப் பொறுத்த மட்டில் நிதிப் பற்றாக்குறை ஏதும் அரசு எங்களுக்கு வைப்பதில்லை. உணவுப் பற்றாக்குறை, பசியால் வாட்டம்ன்னு சாதாரணமா யாரும் சொல்லிவிட முடியாது... ஏன்னா இது சாப்பிட்டாலும் சாப்பிடா விட்டாலும் அப்படியேதான் கிடக்கும். எங்கள் முத



• 'முதலைகள் தவிப்பு' ... பசியால் வாட்டம்... உயிரிழக்கும் அபாயம்...!
– சன் டீ.வி

• அப்படி ஒன்றுமில்லை... இது சீப் பப்ளிசிட்டி தேட சன் டீ.வி செய்த வேலை...
– வனத்துறை அதிகாரிகள்



இறைச்சியை வீசி எறிகிறார்கள். அந்த நேரத்தில் அடித்துப் பிடித்து உணவுக் காக ஓடி வரும் முதலைகள் காயமுறுகின் றன. சில சண்டை போட்டுக் கொண்டு கால் (கை?) இழக்கின் றன... இந்த அமளியில் நோஞ்சான் முதலை களுக்கு உணவே கிடைக் காமல் போய் அவை காலப் போக்கில் உயிரை விட்டால்...?

இந்த மாதிரி உணவை வீசி

முதலைகளின் கண்ணீரில் ஏமாந்த(தா) சன் டீ.வி?


லைகள் எவ்வளவு புஷ்டியாக இருக்கின்றன என்று நீங்களே போய்ப் பாருங்கள்...!"

முதலைகள் வயது வாரி யாகப் பிரிக்கப்பட்டு, தண்ணீர்த் தொட்டிகளில் விடப்பட்டு, சுற்றிலும் கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்தது. (ஒன்றாக இட் டால் சிறியதைப் பெரியது தின்று விடுமாம்!) அங்கு உணவு இட்டுக் கொண் டிருந்தார்கள் இரண்டு ஊழியர்கள்.


முதலைகளை நோக்கி

யெறிந்து ரகளை ஏற்படுத்துவதற்கு பதில் முறையாக ஓர் இடத்தில் 'பரிமாற'க்





- முதலையினத்தில் பட்டினிச் சாவு 0.01 சதவீதம் கூடக் கிடையாது...
  – முதலை டாக்டர் ஜக்காரியா.



அட, இதப் பாருங்கப்பா!

தற்செயலான நிகழ்வுகளின் அசாதாரண ஒற்றுமை வியப்பூட்டுபவையாயிருக்கும்.

நாடகங்களில் நிகழும் படுகொலைகளைப் போன்ற சோக நிகழ்வு, அமெரிக்க ஜனாதிபதிகளாய்ப் புகழ் பெற்ற ஆபிரஹாம் லிங்கன் மற்றும் ஜான்பிட்ஸ் ஜெரால்ட் கென்னடி இவர்களுக்கும் நேர்ந்தது. இவர்கள் வாழ்வில் காணப்படும் ஒற்றுமை நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.



1. லிங்கன் 1860ல் அமெரிக்க ஜனாதிபதியானார்.
கென்னடி 1960ல் அமெரிக்க ஜனாதிபதியானார். (இடைவெளி 100 ஆண்டுகள்)

2. லிங்கனைக் கொன்ற ஜான்பூத் 1839ல் பிறந்தவன்.
கென்னடியைக் கொன்ற ஆஸ்வால்ட் 1938ல் பிறந்தவன். (இடைவெளி ஏறத்தாழ 100 ஆண்டுகள்)

3. லிங்கனைத் தொடர்ந்து ஜனாதிபதியான ஆண்ட்ரு ஜான்ஸன் 1808ல் பிறந்தவர்.
கென்னடியைத் தொடர்ந்து ஜனாதிபதியான லிண்டான் ஜான்ஸன் 1908ல் பிறந்தவர். (இடைவெளி சரியாக 100 ஆண்டுகள்)

4. இருவருக்குப் பின்னும் துணை ஜனாதிபதிகளாயிருந்த – ஜான்ஸன் என்ற பெயருடையவர்களே ஜனாதிபதியாயினர்.

5. இருவரும் நீக்ரோக்களின் குடியுரிமையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள்.

6. இருவரும் ஒரு வெள்ளிக்கிழமையில் தத்தம் மனைவியரின் கண்ணெதிரே படுகொலை செய்யப்பட்டனர்.

7. இருவரும் வெள்ளை மாளிகையில் வசிக்கும்பொழுது ஒரு புதல்வனை இழந்துள்ளனர்.

8. இருவருமே பின்மண்டையில் துளைத்த ஒரு குண்டால் உயிர் துறந்தனர்.

– என். ரமணி

கூடாதா...?

"இந்த மாதிரி வீசி எறியும்போது அவை ஓடி வரும் விதத்தைப் பார்த்துத்தான் அவற்றின் பசியைக் கணிக்கிறோம்..." என்கிறார்கள். (அட கொடுமையே!)

"டாக்டர் பரிந்துரைப்படி தினம் 57 கிலோ மாட்டிறைச்சியும் 20 கிலோ மீனும் தருகிறோம். குட்டிகளுக்கு மட்டும் தனியாக இறைச்சியை சிறிது சிறிதாக நறுக்கி சிமெண்ட் டேபிளில் வைக்கிறோம். அவையும் தேவையான அளவு சாப்பிட்டு விடுகின்றன..." என்றனர்.

பெரிய முதலைகளை – அதுவும் நூற்றுக் கணக்கில் ஒரு சேரப் பார்க்கும்போது பயங்கரம் தான் தெரிந்தது. அதுவும் உணவுக்கு அடித்துக் கொண்டு... ஒன்றுக்கொன்று கால், கழுத்தைக் கடித்து... இரத்தம் சிந்த... ஒருபுறம், மறுபுறம் பயங்கரம், பரிதாபம்!

யானை, முதலை வைத்தியத்தில் 34 வருட அனுபவமுள்ளவர் டாக்டர் ஜக்கரியா. அவர் நமது சந்தேகங்களை நிவர்த்தி செய்தார்.

"இந்த முதலை இனத்தைப் பொறுத்தவரை தன் இனத்தை தானே சாப்பிடும் குணாதிசயம் கொண்டது. அந்த முரட்டு இயல்பு காரணமாகத்தான் ஒன்றையொன்று கடித்துக் கொள்கிறது. பசியினால் அல்ல... மலைப்பாம்பு, புலி, முதலை போன்ற மிருகங்கள் தேவையான உணவு மட்டும் சாப்பிடும் வகை. எனவே இவற்றின் எண்ணிக்கைக்கும் எடைக்கும் ஏற்ற விகிதாசார முறையில் உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு முதலையும் தனக்குத் தேவைப்படும் உணவுக்கு மேலாக எதையும் உட்கொள்ளாது."

"அப்படி முதலைகளுக்கு நாளொன்றுக்குத் தேவைப்படும் உணவு விகிதம்...?"

"80 கிலோ எடையுள்ள முதலைகளுக்கு, அவற்றின் எடையில் 0.5 சதவீதம் உணவு போதுமானது. ஒரிரு வயது வரையிலான குட்டிகளுக்கு இதுவே ஒரு சதவீதமாக மாறுகிறது."

"ஒரு வேளை, பட்டினி கிடக்க நேர்ந்தால் எத்தனை நாள் வரை தாக்குப் பிடிக்கும்...?"

"பட்டினிச் சாவு என்பது இந்த வர்க்கத்திற்கே கிடையாது என்றுதான் நான் சொல்வேன். அப்படியே இருந்தாலும் அது 0.01 சதவீதம்கூடத் தேறாது. மேலும் பட்டினி என்னும் விஷயம் நாடி பார்த்துத் தெரிந்து கொள்ளும் சமாசாரம் அல்ல. நோய் வாய்ப்பட்டால்கூட சோர்வு தட்டலாம். இது மனிதனுக்கும் பொருந்தும்."

"முதலைக் கண்ணீர் என்கிறார்களே...?"

"தண்ணீருக்குள் இருக்கும்போது முதலையின் கண்களில் Third Membrane மூடிவிட்டாலும் பார்வை தெரியும்... வெளியே வந்தவுடன் கண்களின் உள்ளே நிரம்பிய நீர் வடிந்து கொண்டிருக்கும். இதுதான் 'முதலைக் கண்ணீர்! இது நிச்சயமாய் அழுகையல்ல...!"

சன் டீவி இந்தக் கண்ணீரில்தான், கரைந்து ஏமாந்து போனதோ...? ■

படங்கள், கட்டுரை: **கா.சு. வேலாயுதம்**


தமிழ்ல அர்ச்சனை பண்ணினா என்ன... நான் இந்த டிரெஸ்லதான் கோயிலுக்கு வருவேன்...
ஏதோ கமிஷன் அறிக்கை 'லீக்' ஆயிடுச்சாமே..? எங்ககிட்டே குடுத்திருந்தா கட்டிக் காத்திருப்போமில்லே..?
ஐயையோ! டீசல் விலை அஞ்சு பைசா குறைஞ்சுருக்குதுன்னேன்... அதுக்கே இப்படி மயக்கமாயிட்டாளே!

ஸ்டில்லைப் பார், சிரி!


இந்த சந்தனக் கட்டையைத் தமிழக முதல்வருக்குப் பாதி, கர்நாடக முதல்வருக்குப் பாதி வெட்டி அனுப்ப லாமா...?
சேலையச் சுத் திக்கிட்டா அம்மா வோட கூட்டணி யாயிடுமா..? புலிகளுக் கும் உங்களுக்கும் தொடர்பு இல்லைன்னு உத்தரவாதம் கொடுங்க...

புத்தக வரலாற்றில் புதிய புரட்சி

சலுகை, சலுகை மேல் சலுகை,
இலவச நூல், தவணை முறை ஆகிய அனைத்தும் உண்டு

வர்த்தமானன் பதிப்பகம் வழங்கும்
மாபெரும் இதிகாசங்கள் முன் வெளியீட்டுத் திட்டம்

வியாசபாரதம் 3 தொகுதிகள் 2000 பக்கங்கள் - வால்மீகி இராமாயணம் 4 தொகுதிகள் 2000 பக்கங்கள்

ரூ. 800 மதிப்புள்ள இந்நூல்கள் ரூ. 400 மட்டுமே!	5.12.97க்குள் பதிவு செய்வோருக்கே இச்சலுகை, மேலும் 25.11.97க்குள் பதிவு செய்வோருக்கு **ஸ்ரீமத்பாகவதம்** 2 தொகுதிகள் - 908 பக்கங்கள் ரூ. 180 இலவசம்

வியாச பாரதம்

எளிய தமிழ் உரைநடையில் - மூன்று தொகுதிகள் - 2000 பக்கங்கள்

வேதவியாசர் செய்த மகா பாரதமும் வால்மீகி முனிவர் செய்த இராமாயணமும் இதிகாசங்கள் எனப்படும். வேதங் களில் சொல்லப்படும்கருத்துக்கள் அனைத்தும் இதில் இடம்பெறுவதால், வியாசபார தத்தை ஐந்தாம் வேதம் என்பர். கதையை வழங்கிய வியாசரே நூலின் இடையிடையே தோன்றி விளக்கம் தரும் சிறப்புடையது, வியாச பாரதம்! நூற்றுக்கணக்கான மாந்தர்கள் உலா வரும் ஸ்வர்ண மாளிகை, வியாச பாரதம்! ஏராளமான கிளைக் கதை களையுடைய ஓர் ஆல விருட்சம் வியாச பாரதம்!நள தமயந்தி வரலாறு, சத்தியவான் சாவித்திரி வரலாறு, இராமன் வரலாறு, துஷ்யந்தன் - சகுந்தலை வரலாறு போன் றவை புகழ் வாய்ந்தவை. அரிச்சந்திரன், குசேலன், கந்த பெருமான், பரசுராமர் போன்றோர் வரலாறும் இதில் இடம் பெற்றுள்ளன.



இவை தவிர, மனித வாழ்க்கையை நெறிப்படுத்த எழுந்தது, இந்நூல்! அற வழியில் நடக்க மனிதனைச் சிந்திக்க வைக்கிறது. இன்பமும் துன்பமும் மூடரைத் தான் பற்றும்! அறிவாளி களை அவை நெருங்கா. எக்காரணத் தைக் கொண்டும் கடவுளைக் கைவிடக் கூடாது. பயன்களைப் பாராது கடமை யைச் செய்ய வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை உலகுக்குப் பறை சாற்றுகிறது பாரதம்! இந்நூலைப் படிப்பவர் நெஞ்சில் ஓர் அமைதி ஏற்படும் மற்றவரை ஏமாற்றக் கூடாது என்ற எண்ணம் மேலோங்கும். தன்னை ஏமாற்றாமல் இருக்க விழிப்புடன் செயல்படத் தூண்டும். உலோபம், பொறாமை, கோபம் போன்ற தீக்குணங்கள் நீங்கும். தியானம், அமைதி, அன்பு போன்ற நற்குணங்கள் துலங்கும்.

ஊழி பெயரினும் தான் பெயரா உயர்வுடைய இந்நூல் உங்கள் இல்லந்தோறும் பொலிவதாக. இதுவரை பாரதத்தைப் பற்றித் தமிழில் தோன்றிய எல்லா நூல்களையும் விட இதுவே சிறந்தது என்பதை வாசகர் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து மகிழ்வர் என்பது திண்ணம்.

வால்மீகி இராமாயணம்

எளிய தமிழ் உரைநடையில் - நான்கு தொகுதிகள் - 2000 பக்கங்கள்

இராமாயணம் வட மொழிக் காப்பியங்களுக்கு எல்லாம் ஆதி காவியம் எனத் தரும் சிறப்பு வாய்ந்தது. நான் மறையால் அறியத்தக்க பரம புருஷன் இராமராக அவதரிக்கவே, நான்மறையும் வால்மீகியின் திரு நாவிலிருந்து இராமாயண வடி வம் கொண்டு வந்தது என ஆன்றோர் கூறுவர்.

அறம் பொருள் இன்பம் என்பவற்றில் அறத்தை இராமரும், பொருள் இன்பங்களை இராவணனும் தங்கள் இலட்சியமாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இராவணன் கடுந்தவம் புரிந்து தேவர்களையும் தலை மிதித்து நிற்கும் ஆட்சிப் பேற்றை வரமாகப் பெறுகின்றான். இராமரோ தம் வாழ்க்கையையே ஒரு பெரும் தவமாகச் செய்து அறத்தைக் கடைப் பிடித்து, உலகத்தைக் காப்பதே தம்முடைய வாழ்வின் பயனாகக் கருதிச் செயல் புரிகின்றார். இராமருக்கும் சீதைக்கும் இடையே உள்ள அன்புக்குச் சமமான அன்பு உலக இலக்கியங்களில் காண்பது அரிது. அந்த அன்பே தருமத்தின் அரணாகிறது.



கதையில் வரும் மற்ற மாந்தரும் உயிர் ததும்பி நிற்கிறார்கள். அண்ணனுக்குப் பணிவிடை செய்வதில் நிகரற்று விளங்கும் **இலக்குவன்**, அண்ணன் சொல்லைச் சட்டமாக ஏற்றுச் செயல்படும் **பரதன்**, தாயன்பே உருவான **கோசலை**, ஞானியான **சுமித்திரை**, செருக்கு வாய்ந்த **கைகேயி**, சற்றே காமத்தால் ஏமாந்து தருமத்தால் கட்டுண்டு துடிக்கும் **தயரதன்**, தூய்மை உள்ளத்தில் குடிகொண்ட இராமபக்தியால் செய்ய முடியாத செயல்களைச் செய்த **அனுமன்**, இணையற்ற தோழனான **சுக்கிரீவன்**, நெறியற்ற வழியில் சென்ற இராவணனைத் துறந்து இராமனைச் சார்ந்த **விபீஷணன்**, தவறென்று தெரிந்தும் அண்ணன் என்ற பாசத்துக்குக் கட்டுப்பட்டு உயிர் துறந்த **கும்பகருணன்** ஆகிய இவர்கள் போன்ற எண்ணற்ற பாத்திரங்களை மறக்கவொண்ணா வகையில் தோற்றுவித்துள்ளார் வால்மீகி. இத்தகைய மாந்தர் வாயிலாகக் கவி உலகப் போக்கையும், மனித இதயங்களின் மர்மங்களையும், அழிவில்லாத தருமத்தையும் ஒருங்கே விளக்குகிறார்! இல்லந்தோறும் இருக்க வேண்டிய தெய்வீக நூல்களில் இதுவும் ஒன்று!

வியாச பாரதம் 3 தொகுதிகள்	ரூ. 400
வால்மீகி இராமாயணம் 4 தொகுதிகள்	400
	800
முன் வெளியீட்டுச் சலுகை	200
	600
Integrated Enterprises (India) Ltd **தரும் உதவித் தொகை**	200
சலுகை விலை	ரூ. 400 மட்டுமே!

நினைவில் கொள்க :
முன்பதிவு செய்யக் கடைசி தேதி : 5.12.97.
25.11.97 க்குள் பதிவு செய்வோர்க்கு சலுகையுடன்
"ஸ்ரீமத்பாகவதம்"
இலவசமாகக் கிடைக்கும்.
நூல்கள் வெளியாகும் தேதி : 8.1.98

இந்தச் சலுகை விலையான ரூ.400யினை **இரு தவணையாகவும்** செலுத்தலாம். அதாவது ரூ. 200 மட்டும் அனுப்பிப் பெயரினைப் பதிவுசெய்துகொள்க January 98 முதல் வாரத்தில் நூல்கள் அனைத்தும் VPP யில் அனுப்பப்படும். மீதத்தொகை ரூ. 200 + தபால் செலவு ரூ. 30 சேர்த்துத் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

M.O./D.D. அனுப்ப வேண்டிய முகவரி

VARTHAMANAN PATHIPPAGAM

ARR Complex, 141, Usman Road,
T. Nagar, Chennai-17. Near Panagal Park.
☎ : 8257995

நேரில் பதிவு செய்வோர் கவனத்திற்கு

எமது அலுவலக வேலை நேரம்
9 a.m. - 7 p.m.
உணவு இடைவேளையின்றி

லேட்டஸ்ட்

கிரிக்கெட்: குடுமிபிடி சண்டை, அடிதடி, ரகளை. செப்டம்பர் 21-ம் தேதி நடக்க இருந்த இந்திய கிரிக்கெட் போர்ட் உறுப்பினர்க...க்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு, சம்பத்தில் ஒரு வழியாக, சென்னையில் நடந்து முடிந்தது. ஆகஸ்ட் வரை நகமும் சதையுமாக இருந்த கடந்த காலத் தலைவர்கள் பிந்தராவுக்கும் டால்மியாவுக்கும் டடாய் வந்து விட, இரு கோஷ்டிகளுக்கும் துவந்த யுத்தம்! தமக்கு ஆதரவு தரும் உறுப்பினர்களுக்கு வெளிநாடு டூர்களில் அணி மேனேஜர் பதவி, அந்தந்த மாநிலங்களில் முக்கிய மேட்சுகள் நடத்த அனுமதி எனப் பலவிதமாக ஆசை காட்டின இரு தரப்பும். கடைசியில் டால்மியா கோஷ்டி ஜெயித்து விட்டது!

ராஜ்சிங் துர்காபூர் தலைவராகவும், ஜெயந்த் லிலே செயலராகவும் தேர்தெடுக்கப்பட்டனர்.



சினிமா: அதிகபட்சம் அமெரிக்காவில் படமாகும் ஷங்கரின் 'ஜீன்ஸ்', படத்தில் ஐஸ்வர்யாராய்க்கு அப்பா வேடத்தில் நடிக்க எஸ்.பி.பி.யைக் கேட்டிருக்கிறார் ஷங்கர். ஆனால் கால்ஷீட் கிடைக்காததால், நம்புங்கள்- எஸ்.வி.சேகர்! சேகருக்குப் படுசந்தோஷம். படத்தில் ஐஸ்வர்யாவுக்கு அப்பா, சேகரென்றால் பாட்டி யார் தெரியுமா? லட்சுமி!

விழா: ''தமிழ் ரசிகர்கள்தான் என் மகனைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று நாதழுதழுக்க, கண்கலங்கக் கேட்டுக் கொண்டார் குஞ்சுமோன். மகன் அறிமுகமாகும் 'கோடீஸ்வரன்' தொடக்க விழா. ''எபி, நடிப்பில் கோடீஸ்வரனாக இருக்க வேண்டும்!'' என்று 'அர்த்தத்தோடு' மம்முட்டி பேசியது தவிர, பிறரெல்லாம் குஞ்சுமோனுக்கு ஜால்ரா கானம் இசைத்தனர்- வழக்கம்போல்.

''கதை என்னங்க?''- ஓர் அஸிஸ்டென்ட் டைரக்டரிடம் கேட்டபோது, அவர் திருவாய் மலர்ந்தது: ''நாலு ஃபைட்டு, அஞ்சு பாட்டு சார். சிம்ரன் தாராளமா நடிக்கப் போறாங்க!'' ■

— ஸ்பீக்கர்

கமல் கவனத்துக்கு..!

மருதநாயகம் பற்றிய கதையை வெளியிட்டாலும் வெளியிட்டோம், அதற்குப் பல்வேறு திருத்தங்களைக் குறிப்பிட்டு கடிதங்கள். அரைப்பக்க சரித்திரத்தில் இத்தனை முரண்பாடுகள் என்றால், பாவம் கமல், எப்படித்தான் சமாளிக்கப் போகிறாரோ!

* மருதநாயகம் தூக்கிலிடப்படவில்லை. பீரங்கி வாயில் கட்டி வைத்து சுடப்பட்டார்! அவர் சதைத் துண்டுகள் மண்ணில் விழாமல் கழுகுகள் கொத்திச் சென்றன!

ஒட்டன்சத்திரம்,
செ.ரா. ரவி.



* பிறப்பால் 'மருதநாயகம்' என்றாலும் வீர மரணம் அடைந்தது 'கம்மந்தான் கான்சாகிப்' என்ற பெயரில்தான். 'கமாண்டர்' என்பதே கம்மந்தான் என்று மருவி வழங்கியது. இவன் இறை வணக்கத்தில் இருந்தபோது பேடிகளால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டான். அவன் தலையும் இதர உறுப்புக்களும் தனித்தனியாக வெட்டப்பட்டு ஊருக்கு ஒன்றாக பார்சல் செய்யப்பட்டது. இவ்வாறு அவனை நேருக்கு நேர் சந்திக்க சக்தியற்ற ஆங்கிலேயர், வஞ்சகமாகத் தீர்த்துக் கட்டினர்.


எலந்தகுடி, கே.எம். ஜக்கரியா.

* கான்சாகிபு இந்துவாகப் பிறந்து முஸ்லிமாக மாறினான் என்பதை நான் ஓர் ஆய்வாளன் என்ற முறையில் நிராகரிக்கிறேன்.

''விகடமிடுவோர் குலகாவன்-வெற்றி விசையாலிம் குலம் விளங்கவரு தீரன்'' என்னும் வரலாற்றுக் கதைப் பாடல் வரிகள், ''வெற்றி மிக்க ஆலிம் குலம் விளங்க வந்த வீர''னாக கான்சாகிபை நமக்குத் தெளிவாக அறிமுகப்படுத்துகின்றன.

மதுரை மக்களால் போற்றப்படக் கூடிய தலைவனாக விளங்கிய காரணத்தால் கான்சாகிபு, மதுரை மக்களால் 'மதுரை நாயகம்' என்று அன்புடன் அழைக்கப்பட்டு, அதுவே காலப்போக்கில் மருத நாயகமாக உருமாறி இருக்க வேண்டும்.

சென்னை 14, ஹமு. நத்தர்சா





1997 நவம்பர் 23
ஈசுவர கார்த்திகை 8
மலர் : 56
இதழ் : 17

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஜெயின் கமிஷன்; 'ஜெ'யின் கண்டிஷன்!

'ஜெயலலிதாவால் தமிழ்நாட்டுக்கு ஒரு நன்மையாவது நடந்திருக்கிறதா...?' என்று அடிக்கடி கேட்கும் அருயைக்காரர்களை வாயடைத்துப் போகச் செய்துவிட்டார் புரட்சித் தலைவி! தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கே மாபெரும் நன்மை நிகழ வழி செய்திருக்கிறார்!


'ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையிலேயே ஆதாரம் இருக்கிறது. கருணாநிதி புலிகள் ஆதரவாளர் என்பது உறுதியாகிறது. எனவே அவர் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும்' என்கிறார் ஜெ. கருணாநிதி மட்டுமல்ல, மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அவரது கட்சியினரும் ராஜினாமா செய்ய வேண்டுமாம்!

நேர்மைத் தராசாக, தர்மத்தின் தலைவியாக நின்று பேசும் ஜெ, தமக்கு மட்டும் வேறு அளவுகோல்களையா வைத்துக் கொள்வார்...? ஒரு நாளும் அப்படிச் செய்ய மாட்டார்.

தமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புலிகள் இயக்கத்துக்குக் கோடி கோடியாகப் பணம் கொடுத்து உதவியதை ஜெயலலிதா இவ்வளவு சீக்கிரம் மறந்திருக்க மாட்டார்.

ராஜீவ் காந்தி மரணத்துக்குக் காரணமான புலிகளுக்கு ஆதரவாகத் தாமும் பேசியது உண்டு என்று ஒப்புக் கொள்பவர், தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை இனி தங்கத் தட்டில் வைத்துக் கொடுத்தாலும் கண்டு விரலால் கூட சீந்தமாட்டாரே!

ஆக, தமிழகத்தில் தி.மு.க.வோ, அ.தி.மு.க.வோ ஆட்சியமைப்பதென்பது இனி இந்த ஜன்மத்தில் ஆகாத காரியம்!



கள்ளத் தோணி கட்சிக்காரர்களோ, 'அம்மாவே சொல்லிட்டாங்க' என்று ஆட்சி ஆசைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, கைகட்டி வாய் பொத்திக் கொள்ள வேண்டியதுதான்!

ம.தி.மு.க.வுக்கே இந்த கதியென்றால், வெளிப்படையாகப் புலிகளை ஆதரிக்கும் பா.ம.க. பற்றிச் சொல்லவே வேண்டாம்.

டெல்லியிலும் இதே போல்தான் இருக்கிறது நிலைமை!...


புலிகளை ஆதரித்த தி.மு.க.வை கூட்டணியில் சேர்த்துக் கொண்டிருக்கும் ஐக்கிய முன்னணி அரசுக்கு மட்டும் ஆட்சியில் நீடிக்க என்ன தார்மிக உரிமை இருக்கிறது? ஜெ இங்கு பேசி வாய் மூடுவதற்குள் அங்கு குஜ்ரால் ராஜினாமா செய்திருக்க வேண்டாமோ!

ஐ.மு. போனால் போகிறது; காங்கிரஸுக்கு ஒரு வாய்ப்புத் தந்து பார்க்கிறோம் என்று வாக்காளர்கள் நினைத்து விடுவதற்கில்லை... இந்திரா காந்தி காலத்திலேயே புலிகளுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் அளித்து கொம்பு சீவிவிட்ட கட்சியாக்கும் அது! அந்தப் பாரம்பரியத்திலிருந்து பிறழாமல் ராஜீவ் காந்தியும் ஆரம்ப காலத்தில் புலிகளுக்குப் பால் வார்த்தவர்தானே...!

எனவே கேசரியும் கூட்டாளிகளும் கட்சியைக் கலைத்து விட்டு சர்க்காவில் நூல் நூற்கத்தான் போகவேண்டும்!

இதுதான் சாக்கு என்று ஜனதா தளம் சப்பு கொட்டிக் கொண்டு ஆட்சி அமைக்க ஓடி வந்து விட முடியாது... ஜனதா தளத் தலைவர் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோதுதானே ராஜீவ் காந்திக்கான சிறப்புப் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது? இதிலிருந்தே அக்கட்சியின் புலிகள் ஆதரவு நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டாமோ?... இந்தியர்கள் இனி சக்கர சின்னத்தை உதைத்துத் தள்ளியே ஆக வேண்டும்!

சந்திரசேகர் தாடியைத் தடவிக் கொண்டு நாற்காலிக் கனவு காண ஆரம்பித்தால்... 'ஸாரி! ரொம்ப ஸாரி!' என்று ஜெ. அவருக்கு நினைவூட்ட மாட்டாரா என்ன...? "உங்கள் ஆட்சிக்



காலத்தில்தான் ராஜீவ்காந்திக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அது போதுமானதாக இல்லாததால்தான் அவர் கொல்லப்பட்டார்... அதனால் உங்கள் கனவெல்லாம் தப்புக் கணக்கு, போங்கள்!" என்று சந்திரசேகரை வீட்டுக்கு அனுப்ப மாட்டாரோ?

'த.மா.காவை மறந்து விட்டீர்களே! புதிய கட்சி... ராஜீவ் மரணத்துக்குப் பிறகுதான் உருவாகியிருக்கிறது. மாநில அளவிலும் தேசிய அளவிலும் தலைவர்கள் அதில் உண்டு... எனவே த.மா.கா. ஆட்சி அமைத்து தமிழகத்தையும் மத்திய அரசையும் நிர்வகிக்கலாம்' என்கிற ரீதியில் ஆர்வக் கோளாறு கேஸ் ஒருத்தர் சொல்கிறார்...

ஜெயின் கமிஷன் அறிக்கையில் ப. சிதம்பரம் பெயர் அடிபடுகிறதே என்று அவர் யோசிக்க வேண்டாமோ...? ஜெயலலிதாவின் தார்மிகக் கோபம் பற்றி அவருக்குத் தெரியாது போலும். இப்படி ஒரு யோசனை சொன்னதற்காகப் பொசுக்கிவிடப் போகிறார்!

'எல்லாத்தையும் விடுங்க! பா.ஜ.க. இருக்குது. புலிகளா...? அதுக்கு என்ன ஸ்பெல்லிங்? என்று கேட்கக்கூடிய கட்சி... ஆட்சி வாய்ப்புத் தந்து பார்க்கலாம்...' என்றால், அங்கேயும் ஜெயலலிதாவின் தார்மிக வாதம் வந்து முட்டுக்கட்டை போடும்... காந்திஜியின் மரணத்துக்குக் காரணமாயிருந்த ஆர்.எஸ். எஸ்ஸுக்கும் பி.ஜே.பிக்கும் நெருக்கம் அதிகமாயிற்றே...!

இப்படியே அம்மையார் வாதப்படி ஒதுக்கிக் கொண்டே போனால், நாட்டை ஆள்வதற்கு ஒரு கட்சி கூட இருக்காதே...? ஜெயலலிதாவால் நன்மை என்ன வந்தது? என்று கேட்பீர்கள்.

அத்தனை கட்சிகளும் தகுதியிழப்பதால் இனியாவது புதிய கட்சிகள் தோன்றி, சிறந்த தலைமை உருவாகி பாரதத்தைப் புனருத்தாரணம் செய்யும் அல்லவா...! அப்படி நடந்தால் அந்தப் புண்ணியம் முழுக்க ஜெயலலிதாவுக்குத்தான். 'அரசியல் காரணங்களுக்காக, வோட்டுப் பிடிக்கும் ஆசையினால் தீவிரவாத அமைப்புகளை ஆதரிக்க வேண்டாம்' என்று ஆரம்பத்திலிருந்தே தொண்டை கிழிய எச்சரித்த பத்திரிகைகள் அந்தப் புண்ணியத்தில் பங்கு கேட்க முடியுமா என்ன! ■



• மக்கடை ஒப்பீடு!

• ப. ராமகிருஷ்ணன், ஆவணத்தாங்கோட்டை.


? எழுத்தாளர்கள் சுபாவின் சினிமா உலக காலடி பதிப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! வழுக்கி விழாதபடி அழுத்தமாக ஊன்றட்டும்! வாழ்த்துக்கள்.

• த. சங்கர், திண்டுக்கல் - 1.

? சிம்ரனுக்கும் கவிதையா...?

! சிம்ரனின் இடைக்கு நாயர் டீக்கடையை உவமை காட்டிய கல்லூரி மாணவனை எண்ணி ஒருகணம் அதிர்ந்து போனேன்! அண்ணனுக்கு கோடம்பாக்கத்தில் வளமான எதிர்காலம் காத்திருக்கிறது...! (கடவுளே! கடவுளே!)



• மறுபடி கெடு...!

• ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் - 1.

? உ.பி.யில் மேலும் பதினான்கு காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் பா.ஜ.க.வில் இணையலாம் என அத்வானி கூறியுள்ளாரே...?

! அசிங்கங்களைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை என்கிற நிலை வந்த பிறகு எண்ணிக்கையிலே என்ன இருக்கிறது...?



• இன்னமும் மிச்சம்...!

• தேனம்மாள் ராமசாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

? மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பத்திரிகைகள் பரிசுப் போட்டி நடத்துகின்றனவே.... இதற்குத் தடைவிதிக்க அரசு முன் வருமா...?

! அயல் மாநில லாட்டரிகளுக்குத் தடைவிதிக்கத்தான் தமிழக அரசு முயற்சி செய்கிறதே தவிர, தமிழக அரசு நடத்தும் லாட்டரியை அல்லவே..! அப்புறம் இங்கு பத்திரிகைகள் நடத்தும் லாட்டரிக்கு எப்படி தடைவிதிக்குமாம்!

• வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? அடுத்தப் பிறவி என ஒன்று இருந்தால் என்.எஸ். கிருஷ்ணனாகப் பிறக்க ஆசை என்று தாமரைக்கனி சொல்லியுள்ளதைப் பற்றி..?

! வில்லன் ரோலை விட நகைச்சுவையாக நடிப்பது ரொம்பக் கஷ்டம். முயன்று பார்க்கட்டும்!

• எம். இராஜேந்திரன், லால்குடி.

? தமிழகத்தில் மழையால் வெள்ளம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகியுள்ளனவே?

! உயிர்கள் பலியானது ரொம்ப வருந்தத்தக்கது தான். அனுதாபங்கள். ஆனால், ஒன்றேகால் லட்சம் ஹெக்டேரில் தண்ணீர் தேங்கி பயிர்கள் நாசமாவது ஆயிரக்கணக்கான விவசாயிகள் செத்தும் சாகாத நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

• இரா. திலீப், திருச்சி - 14.

? சென்னைக்கு மழை போதுமா... இன்னும் கொஞ்சம் வேணுமா?

! மழையைக் கூட ஒரு மாதிரி சமாளிச்சுடலாம்; ஆனா தொடர்ந்து ரெண்டு நாள் மின்தடை ஏற்பட்டுச்சு பாருங்க.. அதுதாங்க எல்லாருக்கும் பெரிய தலைவலி; வேதனை! மின்வாரியத்துக்கு ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் அவசியந்தாங்க!

• சுப. அண்ணாமலை, ஒட்டன்சத்திரம்.

? இனி வை.கோவுக்கு என்ன சின்னம் தந்தால் பொருத்தமாயிருக்கும்...?

! அடுத்த கேள்வி - பதில் பார்க்கவும்!

• கே. பெருமாள், கூனியூர்.

? ஜெ + வை.கோ + சாமி =?...

! பெரிய சைஸ் கோழி முட்டை!

வை.கோவுக்கு இனி என்ன

பாசன வாய்க் கால்கள், ஏரி-குளங்கள் பராமரிப்பு தவிர, வடிகால்கள் பராமரிப்பிலும் தமிழக அரசு மிகவும் பின்தங்கியிருப்பதையே இது உணர்த்து கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சகம் சுறுசுறுப்பு காட்டட்டும்.

● ஆர். இருதயராஜ், கும்பகோணம்.

? எம்.ஜி.ஆர். ஆட்சி அமைப்போம் என்று அ.தி.மு.க.வினர் கூறுகின்றனரே? எம்.ஜி.ஆர். என்ன அவ்வளவு நல்லாட்சியா செய்தார்...?



• பெரிய பெரிய ஆசை!

! அவர் ஆளுமையைத்தான் ஆட்சி மேல் ஏற்றிச் சொல்கிறார்கள்.


● ப. சுகுமார், தூத்துக்குடி.

? புலவர் இந்திரகுமாரி, மறைந்த இளவரசி டயானாவின் பெயரில் அறக்கட்டளை ஆரம்பித்திருப்பது பற்றி...?

! முடக்கப்பட்டது போகவும் பாக்கி இருக்கு போல..!

● ஜி. ராமதாஸ், உள்ளிக்கடை. ❑

? களவு, கொலை, ஆபாசங்களை சினிமா டீ.விக்களில் காண்பிப்பதாலும் பத்திரிகைகளில் பிரசுரிப்பதாலும் அதிகம் பாதிக்கப்படுவது யார்...? ஏன் அவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்...?



• 'சமரச' சன்மார்க்கம்!

! அதிகம் பாதிக்கப்படுவோர் அதிகம் படிக்காதவர்களும் முதல் தலைமுறை படிப்பாளிகளும்தான். எழுத்தறிவு மூலம் நல்ல சிந்தனைகளையும் பகுத்தறியும் ஆற்றலையும் பெறும் முன், இவர்களை இந்த ஆபாச அலை அடித்துச் சாய்க்கிறது.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஜி. ராமதாஸ்,
5/46, விஜித்திரராஜபுரம்,
உள்ளிக்கடை அஞ்சல், அய்யம்பேட்டை வழி,
தஞ்சை மாவட்டம் - 614 202.

● ஏ. காதர், நாகூர்.

? படித்துத் திகைத்த லேட்டஸ்ட் தகவல்...?

! பிரிட்டனில், பச்சிளம் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்காக அமர்த்தப்பட்ட ஆயா, குழந்தை அழுகையை நிறுத்தவில்லை என்பதற்காக அதை அடித்துக் கொன்று விட்டாள் என்பது திகைப்பு. அதற்காக அவளுக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் குறைத்து, மேல்முறையீட்டில் நீதிபதி அவளை விடுதலை செய்துவிட்டார் என்பது அதைவிட திகைப்பு! இனி ஆயா உட்வார்ட் தம் கதையைப் பத்திரிகைகளில் எழுதி, கோடீசுவரி ஆகிவிடுவார் என்பது அருவருப்பு கலந்த உச்சகட்டத் திகைப்பு!

● மு. இரவிச்சந்திரன், சேலம் – 9.

? டிசம்பர் மாத இறுதிக்குள் குஜ்ரால் அரசு கவிழும் என்கிறாரே சுப்பிரமணியசுவாமி?

! என்ன, ரொம்ப நாளா கெடு வைக்கக் காணுமேன்னு பார்த்தேன்.

● பி. ஸ்ரீராமன், சென்னை – 44.

? பதிப்பாளர் கண. முத்தையா மறைவு பற்றி..?

! ஒழுக்கத்துக்கு மாறான கருத்துக்களை உடைய எந்த எழுத்தையும் பிரசுரிக்கமாட்டார். எழுத்தாளர்களுக்கான ராயல்டி தொகையை ஒழுங்காகக் கணக்கு வைத்துக் கொடுப்பதில் ரொம்பக் கறாராக இருப்பார். குற்றம் சொல்லவே இடம் கொடுக்க மாட்டார். கண. முத்தையா மொழிபெயர்த்து வெளியிடவில்லையென்றால் ராகுல்ஜியின் 'வால்காவிலிருந்து கங்கைவரை'யைத் தமிழர்கள் எப்போது படித்திருக்க முடியுமோ!

• பெரிய சின்னம்



• பார்த்துப் பிழையுங்கள்!

சின்னம்...?



✉ சந்தர்ப்பவாத அரசியல் சந்தி சிரிக்க வைக்கும் என்பது கல்யாண்சிங்கோ, பி.ஜே.பியோ அறியாததல்ல. எல்லாம் பதவி மோகம்! அதில் கிடைக்கும் சுகம்!
வேலூர் – 6, எல். கோபாலகிருஷ்ணன்.

✉ மருதநாயகத்தின் கதையைச் சுருக்கமாக வெளியிட்டு படம் காணும் ஆவலை அதிகப்படுத்தி விட்டீர்கள்!
சென்னை – 1, கே. ஆர். ரவீந்திரன்.

✉ சிறந்த வீரர் மட்டுமல்ல ரணதுங்கா. தெளிவான சிந்தனையுடைய சிறந்த ஆன்மீகவாதியுங்கூட என்பதை அவரது பேட்டி மெய்ப்பித்தது!
மதுரை, வி.பி.எம். வள்ளி.

✉ தமிழர்களும், நாங்களும் அண்ணன் தம்பிகள் எனும் ரணதுங்காவின் வார்த்தைகள் இலங்கையில் உள்ள அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டிய தாரக மந்திரம்.
சென்னை - 83, சி. மகேஷ்.



தாரக மந்திரம்!

✉ தீபாவளித் திரைப்படங்களுள் இன்னும் ஒன்றைக் கூடவா உமது சினிமா விமர்சகர் பார்க்கவில்லை? விமர்சனம் இல்லாத கல்கி, அறிக்கைகள் ஏதும் விடாத முன்னாள் முதல்வரைப் போலிருந்தது!
நெய்வேலி–3, க. சுதா.

✉ ஒருமுறை எம்.பியாகிவிட்டாலே போதும், ஊரை வளைத்துவிடும் ஊழல்வாதிகளின் மத்தியில், இப்படி எளிமையே வாழ்க்கையெனக் கருதும், பகவதி தேவியைப் பற்றிப் படித்து, பிரமித்துப் போய்விட்டேன்.
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

✉ 'நடக்குமென்பார் நடக்கும்' பகுதியில் "நவம்பர் 5 முதல் டிசம்பர் 11வரை" என பிரசுரித்து இருக்கிறீர்கள். நீங்கள் வெளியிடும் ராசிபலன் ஒரு வாரத்துக்கா? அல்லது ஒரு மாசத்துக்கா சார்?
திருவெண்ணெய் நல்லூர், மலர் சூர்யா.

(வாரப்பத்திரிகையானதால் ராசிபலன் ஒரு வாரத்துக்குத்தான் இருக்க வேண்டும். இதற்கு ஜோசியமா பார்க்கணும்? தப்புத்தான். ஹி..ஹி...ஸாரி. –ஆர்)

✉ 'ஒன்...டு...த்ரீ கதைகளில்– சுஜாதா எழுதிய 'நேர்மை' சிறுகதை மிக அருமை. இஸ்திரிக்காரர் பாத்திரப்படைப்பு அற்புதம்!
வலையபட்டி, எம். பாலசுப்பிரமணியன்.


✉ சுஜாதாவின் கைவண்ணத்தில் உருவான 'ஒன்...டு...த்ரீ' கதைகள் மூன்றும் மிகவும் அருமை. அதிலும், மூன்றாவது கதை, தன்னலம் கருதாது, கணவனின் நலனே பெரிதென நினைக்கும் பெண்ணிற்கு, கணவனின் துரோகம் கதையின் கடைசி வரியில் வெளிப்பட்டு அதிர்ச்சியையும், அந்தப் பெண்ணின் மேல் பரிதாபத்தையும், ஏற்படச் செய்தது.
சிதம்பரம், துளசி கணபதி.

✉ தூர்தர்ஷனுக்காக நான் உருவாக்கிய 'வேர்கள்' தொடர் பற்றிய தங்கள் பாராட்டுக் கட்டுரைக்கு நன்றி. தகவல்களில் சில பிழைகள் உள்ளன. கர்னல் நீல் ஆயிரக்கணக்கில் (நூற்றுக்கணக்கில் அல்ல) மக்களைக் கொன்றது தமிழ்நாட்டில் அல்ல. காசி, லக்னோ பகுதிகளிலாகும்.

தூர்தர்ஷன் எனக்கு மூன்று எபிசோடுகளுக்கான அனுமதியும் அதற்காகத் தலா இரண்டு லட்ச ரூபாய் வீதம் 6 லட்சமும் அளித்தது. இதில் எதையும் நான் மிச்சப்படுத்தித் திருப்பித் தரும் சிக்கல் ஏற்படவில்லை. மாறாக ஆறு லட்ச ரூபாயில் மூன்றுக்கு பதிலாக நான்கு எபிசோடுகளை (ஐந்து அல்ல) நானே தயாரித்து முடித்து விட்டேன். கூடுதல் எபிசோடுக்குப் பணம் வேண்டாம் என்று நான் கூறியபோதும், அதை ஒளிபரப்ப டெல்லி தூர்தர்ஷன் தலைமையின் சிறப்பு அனுமதி, விதிகளின்படி, தேவைப்பட்டது. சென்னை நிலைய இயக்குநர் நடராஜன் தாமாகவே டெல்லிக்குப் பரிந்துரைத்து அந்த அனுமதியைப் பெற்றுத் தந்தார். அவருடைய முயற்சி இல்லையேல், நான்கு, மூன்றாகச் சுருக்கப்பட்டு, கதை சிதைந்திருக்கும். எனவே அவருக்கும் சென்னை நிலையத்துக்கும் என் நன்றியும் உங்கள் பாராட்டும் உரியவை. ■
சென்னை – 41, ஞாநி.

திறக்கும் கதவு... மூடும் கதவு!





விசிட்டிங் கார்ட் ஒரு விநோதமான சமாசாரம். தொழில் துறையோ, வங்கி, திரைப் படம், சினிமா, கம்ப்யூட்டர் துறையோ... சம்பந் தப்பட்டவர்கள் சதா சர்வகாலமும் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு திரிந்து, உத்தி யோக விஷயமாகச் சந்திக்கப் போவனர் களிடம் கைகுலுக்கிய பிறகு மறக்காமல் எடுத்து நீட்டுகிற அட்டைத் துண்டு அது. பெயர், விலாசம் அடங்கிய மேற்படி அட்டையைப் பெற்றுக் கொண்டவரும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவராகத் தன்னுடைய விசிட்டிங் கார்டைத் தருவார். ஒரு பெரிய கோஷ்டியாக மற்றொரு கோஷ்டியை இப்படிச் சந்திக்க நேரும்போது, எல்லோரும் எல்லோரோடும் விசிட்டிங் கார்ட் பரிமாறிக் கொண் டதுமே களைத்துப் போய், "நேரமாயிடுச்சு... அடுத்த சந்திப் பிலே பிஸினஸ் பேச லாம்'' என்று பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விடுவதும் உண்டு!

விசிட்டிங் கார்டில் தான் எத்தனை வகை? சாதுவாகப் பெயரும் அலுவலக முகவரியும் மட்டும் அச்சடித்தது. வைத்திருப்பவரின் பட்டம், பதவி, ஜாதகம் எல்லாம் சேர்த்து அடித்தது. புகைப்படம் உள்ளது...

தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அதிகாரி யின் விசிட்டிங் கார்ட் என்றால் ஒரு பக்கத்தில் கட்டாயம் இந்தியில் பெயர், விவரம் இருக்க வேண்டும். (மறு பக்கம் சும்மா வெள்ளையா கவே விட்டாலும் பாதகமில்லை). புஞ்சைப் புளியம்பட்டி பக்கம் பணிபுரியும் என் வங்கி அதிகாரி நண்பர் இப்படி இந்தியிலும் ஆங் கிலத்திலும் மட்டும் அச்சடிக்கப்பட்ட தன் பிளாஸ்டிக் விசிட்டிங் கார்டுகளை சரமாரியாக விநியோகிக்க, வாங்கிக் கொண்டவர்கள் தினசரி பல் விளக்கியதும் நாக் கைச் சுத்தம் செய்ய நன்றியோடு உபயோகிக் கிறார்கள் என்று கேள்வி.

போகட்டும்... அது வேறே சங்கதி. பண்ட மாற்று செய்யப்பட்ட விசிட்டிங் கார்டு கள் சாதாரணமாக என்ன ஆகின் றன? அவை பெரும்பா லும் குப்பைத் தொட்டிக்குக் குடிபெயர்ந் திருக்கும். சிலது அட்டைப் பெட்டிகளிலும், ஆல்பங்களிலும் அடைக்கலம் புகுந்திருக்கும்.

அவசரமாக ஆளைப் பிடிக்க வேண்டிய நேரத்தில், அவர் கொடுத்த கார்ட் கிடைக்காது. கிடைத்தாலும் அதில் கண்ட தொலைபேசி எண் மாறி இருக்கும். மாறாமல் இருந்தால், 'எங் கேஜ்ட்' ஆக இருக்கும். கிடைத்தாலோ, "அவரா? ராஜினாமா செய்து வேறே கம் பெனிக்குப் போய் நாலு மாசமாச்சே!"

இத்தனை சங்கடம் இருந்தாலும், விசிட்டிங் கார்ட் தவிர்க்க முடியாத சமூக அடையாளம்

ஆகி வரும் இந்த நாட்களில், சங்கடத்தைக் குறைக்கத் தொழில் நுட்பம் கைகொடுக்கிறது. மின்னணு அட்டை (Electronic visiting Card) என்ற பெயரில். என்ன அது?

சட்டைப் பையில் வைத்து எடுத்துப் போகக் கூடிய இந்த மின்னணு அட்டையில், வைத்திருப்பவர் பற்றிய விவரங்கள் பதிவாகி இருக்கும். எதிர்ப்பட்டவரிடம் கை குலுக்கிய தும் இந்தத் தகவல் வினாடிக்கு 2400 ஒலித் துணுக்கு வேகத்தில் (2400 baud per second) புறப்படும். மின்னணுத் தகவல் போகிறவழி? ஆச்சரியப்படாதீர்கள். நீட்டிய கை வழியாகத்தான்! சின்னதாக ஒரு மின்சாரப் பாய்ச்சல். ஷாக் எல்லாம் அடிக்காது. பலூன் கன்னத்தில் உராயும்போது குறுகுறுக்குமே, அந்த நிலை மின்சாரத்தில் (Static Charge) ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இருக்காது இது.

நீட்டிய கையிலிருந்து, நேசக்கரம் நீட்டிய மற்றவர் வசம் இதயத்தை... சாரி... சட்டைப் பையை அடைகிறது. அங்கே இந்த மின்னணுத் தகவலைப் பெற்றுச் சேகரித்து வைக்கச் சின்னஞ்சிறிய கருவி ஒன்று தேவைப்படும். வேண்டும்போது குட்டித் திரையில், சேர்த்து வைத்ததைப் பார்க்கவும் இந்தக் கருவி வகை செய்யும். இது மின்சார நிஜம்!

எலக்ட்ரானிக் அட்டையும், அது அனுப்பும் தகவலைப் பெற்றுச் சேகரித்து வைக்கிற கருவி யும் ஒரே அமைப்பாக விற்பனைக்கு வரும். இந்த எலக்ட்ரானிக் அட்டைக்கு இன்னொரு பயனும் உண்டு. பாதுகாப்பு மிகுந்த இடங் களில் பிரவேசிக்கவோ, தானியங்கிக் காசாளர் இயந்திரத்தை (Automated Teller Machine) இயக்க அதற்கான தனியறைக்குள் நுழையவோ இது போன்ற எலக்ட்ரானிக் அட்டை மூலம் அரண் அமைக்கலாம். தொட்டதும் வெளியா கும் மின்னணுத் தகவலைச் சரிபார்த்துத் திறக் காத கதவும் திறக்கும்.

இது ஒரு திறக்கும் கதவு என்றால், 'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப் பாள்' போல குறிப்பிட்ட நபர் கைவைத்ததுமே இறுக மூடிக் கொள்ளும் கதவும் உண்டு. புதிய அறிவியல் கண்டுபிடிப்புதான் இதுவும்.

சமர்த்து குளிர்பதனப் பெட்டி என்ற இந்த ஸ்மார்ட் ரெப்ரிஜிரேட்டர் (Smart Refrigi-rator) கம்ப்யூட்டரால் இயக்கப்படுவது. பால் பாக்கெட், ஜாம் பாட்டில், பிஞ்சு வெண்டைக் காய் என்று சாதாரணமாக நாம் வீட்டு பிரிட் ஜில் அடுக்கி வைப்பதுபோல இந்த சமர்த்து பிரிட்ஜிலும் போட்டு வைக்கலாம். "அவ்ளோ தானே" என்கிறீர்களா? இதுவும்தான், இதுக்கு மேலேயும் தான்!

ஞாயிற்றுக்கிழமை காலை வெங்காயத்தை நறுக்கி வைத்து விட்டு ஆம்லட் போட முட்டை எடுக்க பிரிட்ஜைத் திறக்கும் இல்லத் தரசி கண்ணில் படுவது காலித்தட்டு. தாமத மாக எழுந்து காப்பியும், காலைப் பத்திரிகையு மாக சாவகாசமாக உட்காரும் இல்லத்தரசன் கையிலிருந்து பேப்பர் பிடுங்கப்பட, "காட்டுலே வீரப்பன் சரண்டர் ஆவானான்னு அப்புறமா அலசலாம். போய், உங்களை மாதிரி இல்லாத, நல்ல முட்டை வாங்கிட்டு வாங்க" என்று விரட்டல்.. வீட்டுலே சரண்டர்.. 'சே! ஏன்தான் ஞாயிற்றுக்கிழமை வருதோ!'

புத்திசாலி பிரிட்ஜ் இருந்தால் முட்டை யைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் வீரப்பன், கல்யாண்சிங்கின் ஜம்போ சைஸ் அமைச்சரவை, ரம்பாவா சிம்ரானா இன் னோரன்ன சூடான செய்திகளை வரிவிடாமல் படித்தபடி, ஆம்லட் வரும்போது வரட்டும் என்று உட்காரலாம். எப்படி?

இந்தக் குளிர்பதனப் பெட்டியை இயக்கும் கம்ப்யூட்டர், அவ்வப்போது பெட்டிக்கு உள்ளே வைத்து எடுக்கப்பட்டு, திரும்பவும் புதி தாக வாங்கி மறுபடியும் வைக்கப்படும் பொருட் கள் பற்றிய விவரங்களைக் கிரகித்துக் கொள் ளும். தானே உத்தேசமாக, இந்த வீட்டுக்கு ஒரு வாரத்துக்கு மூன்று கிலோ முட்டை கோஸ், முப்பது லிட்டர் பால், பதினேழு முருங்கைக் காய் தேவை என்று ஒரு கணக்குப் போட்டு வைத்துக் கொள்ளும். அப்படியே கையிருப்பை யும் சரிபார்த்து, எது எது கூடிய சீக்கிரம் ஸ்டாக் தீர்ந்து மறுபடி தேவைப்படும் என்று தீர்மானித்து விடும். உடனே, சூப்பர் மார்க்கெட்டின் கம்ப்யூட்டரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு - தொலைபேசி, மோடம் வழியாக - அனுப்பி வைக்க வேண்டிய பட்டியலைக் கொடுத்துவிடும். இன்னொரு பக்கம் வீட்டுக்கா ரரின் வங்கிக் கம்ப்யூட்டரோடு தொடர்பு ஏற் படுத்தி, கணக்கில் பற்று எழுதிப் பல்பொருள் அங்காடிக்குப் பணம் தரச் சொல்லிவிடும். பத்தா வது நிமிடம் சூப்பர் மார்க்கெட் வண்டி எல் லாப் பொருளையும் வாரிப் போட்டுக் கொண்டு வாசலில் வந்து நிற்கும்!

அது சரி... ரெட்டைத் தாழ்ப்பாள் விஷயம்? வந்தாச்சு சார்!

மேற்படி சமர்த்து பிரிட்ஜில், குடும்பத்தைச் சேர்ந்த இன்னார்தான் பிரிட்ஜிலிருந்து இந்த இந்தப் பொருளை எடுக்கலாம் என்று விவரம் பதிந்து வைக்கவும் வசதி உண்டு. தாத்தாவுக்குச் சர்க்கரை வியாதி என்றால், ஒன்று, அவர் கைபட்டதுமே பிரிட்ஜ் திறக்காமல் மூடிக் கொள்ளும். இல்லை, உள்ளே வைத்த திருநெல் வேலி அல்வாவை ராத்திரியில் ரகசியமாக அவர் எடுக்கும்போது சத்தம் போட்டு ஊரைக் கூட்டிவிடும்.

— இரா. முருகன்

மேலே மேலே

"யோஎன்ஸ், நான் எல்லா கண்ட்ரோல்களையும் செக் பண்ணிட்டேன். எல்லாம் ஓ.கே. பார் இப்ப இந்த ஸ்விட்சை அழுத்தினதும் ஒரு ரெட் கவர் வந்து நம்ம சேலஞ்சரை மூடிக் கொள்ளும். போகலாமா?"

"எந்த ஸ்விட்ச்? எங்கே இருக்கு டாடி?"

"அதப் பத்தி நீ கவலைப்படாதே. நான் பார்த்துக்கறேன். இதோ பார் எப்படி.. எப்படி.. மூடிடுச்சுதானே.."

"டாடி பயமா இருக்கு. உள்ளே இருட்டாயிட்ட மாதிரி இருக்கு. திறந்திடுங்களேன்."

"அட! யாராவது விண்வெளில போறப்ப கதவைத் திறந்திடுவாங்களா?"

"உள்ளே எப்படியோ இருக்கு டாடி..."

"இரு. அதுக்கு வழி பண்றேன். ஹலோ.. மதர் கண்ட்ரோல்... யா... ப்ளீஸ் மேக் அரேஞ்ச்மெண்ட்ஸ் ஃபார் லைட்ஸ். இம்மீடியட்லி... யெஸ்.. ஆகா.. பார் லைட் வந்திடுச்சில்லையா.."

"ஆமா டாடி... உங்க முகமெல்லாம் கூட சிவப்பா தெரியுது."

"சரி. நாம கௌம்பிட்டோம். சப்தத்தை பார்த்து பயந்துக்காதே. இதோ பார், மேகக் கூட்டங்கள். என்ன அழகு. யானை மேகம். முதலை மேகம்.. ஆகா.."

"எனக்குத் தெரியமாட்டேங்குதே டாடி.."

"அது.. நான் பைலட் ஸீட்ல இருக்கிறதால எனக்கு நல்லாத் தெரியுது. அதான் நான் உனக்குச் சொல்றேன் இல்லையா. கொஞ்சம் மேகங்களை எடுத்துத் தரட்டுமா யோன்ஸ்?"

"ஹையோ. பயம். வேண்டாம். ஜன்னலைத் திறந்திடாதீங்க. வானத்ல போய்ட்டு இருக்கிறப்ப திறக்கக் கூடாதில்லையா.. மேலே சாயறீங்க."

"அட... நானில்லம்மா. நெட்டுக் குத்தலா இப்பப் போறமா, அதான். நட்சத்திரங்களைப் பார்க்கணும்னு உனக்கு ஆசைதானே.."

"டாடி... நல்ல காரியங்களைச் செய்தா நட்சத்திரங்களா மாறுவாங்கன்னு பாட்டி சொல்லுவாங்களே. அந்த நட்சத்திரங்களைப் பார்க்க முடியுமா?"


"அப்படியா.. சரி. அதையும் செக் பண்ணிடலாம்."

"டாடி. ரொம்ப ஸ்பீடு வேண்டாம். பயம் எனக்கு. ஆமா டாடி. பூமியை விட்டுப் போகப் போக மிதக்க ஆரம்பிச்சுடுவாங்களாமில்லை. நாம இன்னும்.. ம்ம்? அட! டாடி நம்ம சேலஞ்சர் குலுங்கற மாதிரி இருக்கே. டாடி. என்னது..?"

"பயப்படாதே.. ஹலோ. மதர் கண்ட்ரோல்.. என்ன ஆச்சு? இதோ மானிட்டர்ல பார்க்கறேன். எது நம்ம சேலஞ்சரை அட்டாக் செய்யுதுன்னு.."

"ஓ.. டாடி. நம்ம வண்டி டாப் கழன்டுடுச்சு. கண் கூசுது.. டாடி..."

"ம்ம். நல்லா கூசும். ஏங்க எந்திரிங்க. இந்தச் சிவப்பு குல்ட்டை மடிச்சு வச்சுட்டு வாங்க, சாப்பிடறதுக்கு. நல்லா வண்டி ஓட்டீங்கப்பா ரெண்டு பேரும்" என்றாள் சிரிப்புடன் யோன்ஸின் மம்மி. ■



கார்த்திகா ராஜ்குமார்

குறட்டையா? குறக்குவலியா? கொள்ளை போகிறதா கூந்தல்?

குறட்டை ராட்சஸன்

ஊரெல்லாம் சுற்றி, தேவதைகள் லலலல்லா பாடக் காதலித்து, கண்ணாலம் கட்டிக் கொண்டார்கள் ஒரு ஜோடி ஆணும் பெண்ணும். முதலிரவில் பெண்ணுக்கு ஒரு பேரதிர்ச்சி. கணவன் தூங்கும் போது புலி உறுமுகிற சப்தம்! (முதலிரவில் யாராவது தூங்குவார்களா?) ஐயா குறட்டை ஸ்பெஷலிஸ்ட்


காதலாவது, வெண்டைக்காயாவது! இந்தக் குறட்டை தாங்காதுடா சாமி என்று விடிந்ததும் விவாகரத்து கேட்டுவிட்டாள் சம்சாரம்.

இந்த சமாசாரம் நடந்தது அமெரிக்காவிலல்ல; நம் ஊரில்தான் என்றால் வாய் பிளப்பீர்கள்!

''வாயைப் பிளந்து கொண்டு தூங்குவதால்தான் குறட்டையே வருது சாமி!'' என்கிறார் டாக்டர் பி.எஸ். பிரசாத்.



• குறட்டை பெல்ட்



• பி.எஸ். பிரசாத்

முந்நாளில் இவரும் ஒரு குறட்டை ஸ்பெஷலிஸ்ட்தான்.

ஒரு விமானப் பயணத்தில் இவர் அசந்து தூங்க, குறட்டை ஒலியில் நடுங்கிய பயணிகள், எஞ்சின் கோளாறோ, நேரடி எமலோகப் பயணமோ என்று அஞ்சி நடுங்க, ஓர் அழகான ஏர் ஹோஸ்டஸ் வந்து சரோஜாதேவி குரலில் "ஸர்! ஸர்!" என்று விளித்து உறக்கத்தைக் கலைத்து, குறட்டையிலிருந்து தடுத்தாட்கொண்டபோது வெட்கத்தாலும் அவமானத்தாலும் சுந்தரராமசாமியின் ஜே.ஜே. போலத் தீவிரமாக யோசித்திருக்கிறார்.

டாக்டரல்லவா? குறட்டையைத் தடுக்க ஒரு கருவி கண்டுபிடித்துவிட்டார்.

படத்தைப் பாருங்கள். இந்த குறட்டை பெல்ட்டின் விலை ரூபா 799. (பாட்டா கம்பெனியில் வேலை பார்க்காததால் 95 பைசா கூட்டி வைக்கவில்லை)

பெல்ட்டின் உட்புறம் பிரத்யேகமான மருந்து பூசப்பட்டிருக்கிறது. (மருந்து என்ன ஃபார்முலா என்று கேட்டால், ''பெரிய பெரிய மருத்துவமனைகள் கேட்டே நான் தரலை, அதை" என்று நாசுக்காக மறுக்கிறார்.)

இந்த பெல்ட்டை ராணுவ வீரன் ஹெல்மெட் மாதிரி முகத்தில் மாட்டிக் கொண்டால், அது தூங்கும் போது வாயைத் திறக்க விடாமல் பிடித்துக் கொள்கிறது. இதனால் வலி ஏதும் இல்லாமல் சுகமாக ஒத்தடம் கொடுப்பதற்குத்தான் அந்த மர்ம மருந்து!

"குறட்டையை விரட்டறதோட கூட இந்த பெல்ட், ஒற்றைத் தலைவலியிலிருந்தும் காப்பாத்தும்" என்கிறார் பிரசாத்.



• எம்.ஜி. அண்ணாதுரை

(இல்லாட்டி, குவைத், மலேசியாவுலயெல்லாம் இதுக்கு செமை டிமாண்ட் இருக்குங்களா?)

"வாயை மூடிட்டுத் தூங்கினா பிரச்னையே இல்லை! அப்படித் தூங்க வைப்பதுதான் இந்த பெல்ட். ஆறு மாதம் போட்டு விட்டுக் கழற்றிவிட்டால் ஆட்டமாட்டிக்காக வாய் மூடியே தூங்க முடியும்" என்கிறார் பிரசாத்.

குறக்குவளிக் குரங்கு

நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறோம். திடீரென்று கால் ஆடு தசையில் ஒரு கோலி குண்டு சைஸ் புரட்சி தொடங்கி, வெட வெடவென்று நடுங்கி, மேலேறி, உயிரே போகிற வலியில் துடிப்பார்கள் சிலர். இந்தக் கால் புரட்சிக்குக் குறக்குவளி என்று பெயர்.

காலை ஒருத்தர் அழுத்திப் பிடிக்க, கையை ஒருத்தர் அழுத்தித் தடுக்க, வலி வந்தவர் அலறித் துடிக்கிற காட்சி, தமிழ் சினிமா கற்பழிப்பு சீன் போல அன்சகிக்கபிளாக இருக்கும்.

இந்தக் குறக்குவளி ஏன் வருகிறது?

டாக்டர் சீனிவாச சோமயாஜி சொன்னார்:

"இதயத்திலிருந்து மற்ற பகுதிகளுக்கு ரத்தம் பாய்கிறது அல்லவா? அப்படிப் பாயும்போது, குறிப்பிட்ட ஒரு பகுதியில் அந்தப் பாய்ச்சல் குறைய வாய்ப்பு இருக்கிறது. அப்படி ரத்த ஓட்டம் தடைப்படும்போது மேற்படி குறக்குவளிப்பு வர வாய்ப்பு இருக்கிறது."


நீரிழிவு என்கிற ஷுகர் நோய் உள்ளவர்களுக்கும் மிதமான இதயநோய் உள்ளவர்களுக்கும் இந்த இம்சை வர வாய்ப்பு உள்ளது. நரம்பைச் சுண்டி இழுத்து, தசைகளுக்கும் வலியை ஏற்படுத்தும் இந்தப் பிரச்னைக்கு, நரம்புகளை வலுப்படுத்தும் மாத்திரைகளும் ஊசிகளும் சாதாரணமாகத் தருவதுண்டாம்.

வைட்டமின் பி-1, பி-6 உடம்பில் குறைவாக இருந்தாலும் இந்த ரப்சர் வரும்!

இதெல்லாத்தை விடவும் தம் அடிப்பவர்களுக்கு இந்த வொள்ளு கட்டாயம் உண்டு! இதய சமாசாரமில்லையா?

"தேவையான அளவு உடற் பயிற்சி, சிகரெட் பிடிக்காமை, நீரிழிவுக்குத் தகுந்த சிகிச்சை என்று மேற்கொண்டால் குறக்குவளியிலிருந்து தப்பலாம்" என்றார் டாக்டர் சோமயாஜி.

இதெல்லாம் இருக்கட்டும். வலி தொடங்கியதும் டமாலென்று எழுந்து நின்று விடுங்கள்... போயே போச்! இட்ஸ் கான்!



• காந்த சீப்பு

காந்த சீப்பு!

கூந்தல் பராமரிப்பு பற்றி யார் கவலைப்படுகிறார்களோ, இல்லையோ, ஷாம்பு கம்பெனிக்காரர்கள் மெய்யுருகி, மேனியுருகிக் கவலைப்பட்டு, கண்டிஷனர் என்றும், ப்ரோட்டீன் என்றும் மாய்ஸ் சுரைசர் என்றும் விதவிதமான வார்த்தைகளில் விளம்பரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முடி உதிராது, பஞ்சு மாதிரி, பூமாதிரி, பளபளப்பாக இருக்கும் என்று ஒவ்வொருத்தரும் பண்ணுகிற விளம்பரங்களிலிருந்து எதைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்வதற்குள்ளே, பாதி முடி பிச்சிக்கிட்டு வந்து விடுகிறது.

"தேவையில்லை. காந்தம் உங்களைக் காப்பாற்றும்" என்கிறார் எம்.ஜி. அண்ணாதுரை. இருபது வருடமாகக் காந்த சிகிச்சை அளித்து வரும் இவர், முடி உதிர்வதைத் தடுக்க புதிதாக காந்த சீப்பு ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்.

"தலைமுடி கொட்டுவதும் இளநரை தோன்றுவதும், செல்கள் செயலிழப்பதனால்தான் ஏற்படுகின்றன. செல்களைப் புதுப்பிக்கும் விதத்தில் என் புதிய சீப்பின் பல் நுனிகளில் காந்தத் துகள்கள் சேர்த்து வடிவமைத்திருக்கிறேன். இந்த சீப்பால் அழுத்தி ஐந்து நிமிடம் தினம் சீவிப் பாருங்கள். முடி உதிராது!" என்று தீர்மானமாகச் சொல்கிறார்.

(தலையணையில் காந்தத்தை வைத்துக் கொண்டு தூங்கினால் இள வயசு நரை தோன்றாது என்பது இவர் கொடுத்த கூடுதல் டிப்ஸ்) ■

— சித்தார்த், வேணுஜி.

அப்பா + கோபம் = வேலை

போட்டிக் கதை - 9

"**மா**மா ஊர்ல சேத்திக்குவாங்களாம்மா என்னைய..."

"ம்... அங்க குறும்பில்லாம ஒழுங்கா படிக்கணும். என்ன?"

அம்மாவுக்கு கண்கள் கலங்கியிருந்தன. எதுவும் பேசாமல் தலையை மட்டும் ஆட்டிக் கொண்டான்.

"போம்மா... ஐயா கூப்புடறாங்க..." வெளியே வந்த பியூன் சொன்னதும் பரபரப்பாக எழுந்தாள் செல்வி. தயக்கத்துடனேயே இவனைக் கேடயமாகப் பிடித்துக் கொண்டு உள்ளே போனாள்.

"வாம்மா– நீ ஆறுச்சாமி சம்சாரந் தானே..."

"ஆமாங்கய்யா... பையனுக்கு சர்டிபிகேட் வேணும்..."

"இல்லம்மா.. நேத்தைக்கு அந்தாளு இங்க வந்தாரு... இந்த மாதிரி நீங்க வந்தா சர்டிபிகேட்டத் தர வேண்டாம்னு சொல்லிட்டுப் போனாப்ல..."

சேலைத்தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள். இவனுக்கும் அழுகையாக வந்தது.

"நானென்னம்மா பண்ண முடியும்... ரூல்ஸ் மீறி ஒண்ணும் பண்ண முடியாது.."

இப்போது சட்டென ஆவேசம் வந்தவளாக இவனை அவர் முன்னால் இழுத்தாள்.

"அப்படின்னா... இவன் படிப்பு பாழாப் போகணும்கறீங்களா..."

"பொறுமையாய் பேசம்மா... பெத்த அப்பனே குறுக்க நிக்கறப்ப நானென்ன பண்ண முடியும்... நாளைக்கு தண்ணி போட்டுட்டு வந்து ஸ்கூல்ல கலாட்டா பண்ணுவான்... அப்பா கையெழுத்தில்லாம ஒண்ணும் பண்ண முடியாதம்மா..."

"...அந்தாளு கூட என்னால குடும்பம் நடத்த முடியலீங்க... தினமும் சித்ரவதை பண்றான். தாங்க முடியாமத்தான் அண்ணன் வீட்டுக்குப் போனேன்..."

அழுதுகொண்டே முதுகைக் காட்டினாள். வரிவரியாகத் தடித்து சிவந்து கன்றிருந்தது.

"...வேண்டாம்மா.. ப்ளீஸ்... அது உங்க குடும்ப விவகாரம்... பாவம் பையன் நடுவுல சிக்கிட்டான். நீங்க மறுபடியும் பைசல் பண்ணணவங்களப் பாருங்க... அவங்க மூலமாவது ஏதாவது பண்ண முடியுதான்னு பாக்கலாம்..."

எதுவும் பேசாமல் இவனை இழுத்துக் கொண்டு வெளியே வந்தாள். குறுக்கும் நெடுக்குமாக யூனிபார்மில் பள்ளிக் குழந்தைகள் இவர்களையே விநோதமாகப் பார்த்துக் கொண்டு போனார்கள்.

வேகமாக அடித்த காற்றில் வேப்ப மரத்தின் பழுத்த இலைகள் இவர்களின் மேல் விழுந்து கொண்டிருந்தது. 'பெரிய அவமானத்திற்கு உட்பட்டவளாகத் தலையைத் தொங்கப்போட்டு நடந்து கொண்டிருந்தாள்.

"ஏம்மா, நாம எங்க போறது..."

"கவுண்டர் மாமாகிட்ட போயி அப்பாகிட்ட கேக்கச் சொல்லலாம்..."

மறுபடியும் ஏதோ கேட்க நினைத்தவன் அம்மா ஏதோ நினைத்துக் கொண்டு நடப்பதை உணர்ந்தவனாக எதுவும் பேசாமல் சும்மாயிருந்து கொண்டான்.

"...**எ**ன்னப்பா நீங்க... ரெண்டு பேருமே வெவரந் தெரிஞ்சவங்க... நீங்களே இப்படி சண்டை போட்டுக்கிட்டா எப்படி..." தங்கசாமிக் கவுண்டர்தான் கேட்டார்.

"...அதாங்க வெவகாரமே... எல்லாப் பொட்டச்சிக மாதிரி இவளும் இருந்துட்டா

காரை. சந்திரசேகரன்

எதுக்குங்க தகராறு வருது..."

"...அப்படி நானென்ன தப்பு பண்ணிட்டன்னு அவரச் சொல்லச் சொல்லுங்க..." இவள் குரலடங்கிப் போய் சொன்னாள்.

"...இன்னும் என்ன வேணுங்க... எதுக் கெடுத்தாலும் எதுத்தக்கம் போடறா.... வேறென்ன வேணும்..."

"...அப்ப நீங்க என்ன சொன்னாலும் பதிலே பேசக் கூடாதுங்கறீங்களா.."

"...அதுதான் பஞ்சாயத்துக்கூடற அளவுக்குப் பண்ணிட்டையல்ல... இன்ன என்ன வேணும்..."

"பிரச்னையைப் பேசித் தீத்துக்கலாம் ஆறுச்சாமி... மனசுக்குள்ள வச்சுக்கிட்டு வெந்து சாகறதுக்கு இதுல ஒண்ணும் மானம் போகாது.. பிரச்னை என்னன்னு மட்டும் சொல்லு.."

"...இனி அவ கூட குடும்பம் நடத்தத் தயாரா இல்லீங்க..."

"இப்படி மொட்டையா சொன்னா எப்படி..." மறுபடியும் கவுண்டர்தான் கேட்டார்.

"...என்னத்தன்னு சொல்றதுங்க.... அவ பண்ற எல்லாமே ராங்குதான்... என்னைய மனுசனாவே மதிக்கறதில்ல..."

"எப்படி மதிப்பா.... பொண்டாட்டிக்கு ஒடம்பு சரியில்லைன்னா அப்பன் வீட்டுக்கு தொறத்தி விட்டா எப்படி மதிப்பா..." இவளின் அண்ணன் சண்முகம் கேட்டார்.

"யோவ்... எங்குடும்ப் நாயத்துல தலையிட நீ யாருய்யா..." ஆறுச்சாமி அடித்தொண்டையில் கத்தினான்.

"மரியாதையாய் பேசு... அதுதான் குடும்ப நாயம் பஞ்சாயத்துக்கு வந்துருச்சல்ல... இன்னும் என்ன வேண்டிக் கெடக்குது மரியாதைக்கு..."

"நீதாண்டா எங்குடியவே கெடுத்தவன்... புள்ளைய மெரட்டி வெக்காம, அங்க வந்தா அனுசரிச்சு வெச்சுக்கற... அதுதான் அவளுக்கு அவ்வளவு ஏத்தம்... முனுக்குன்னா ஓடிப் போயிடறா..."

"ஆமாண்டா... நீ அவ்ள சித்ரவத பண்ணுவ... நாங்க பார்த்துட்டு சும்மா இருப்பமாக்கும்..." அதே ஆவேசத்தோடு அண்ணன் சொன்னார்.

எகிறிப் பாய்ந்தான் ஆறுச்சாமி. அண்ணன் விலகிக் கொண்டு கழுத்தைப் பிடிக்க எத்தனித்தார். முத்துச்சாமித் தேவர் பாய்ந்து ஆறுச்சாமியைத் தள்ளி விட்டார்.

"டேய்... என்ன





ஆற்று நீர் சுகம்!

● இந்த வருடம் தமிழில் வெளிவந்த எல்லா தீபாவளி மலர்களையும் வாங்கியவன் என்ற முறையில் சொல்கிறேன்; தரத்திலும் சிறப்பிலும் உயர்ந்து, தீபாவளி மலர்களில் முதலிடத்தில் நிற்பது கல்கிதான்!

மங்கைநல்லூரர், 'சின்னஞ்சிறுகோபு'.

● ஆன்மீகம், நகைச்சுவை, காதல், சுற்றுலா, சிறுவர்களுக்கான பகுதி, மங்கையருக்கான பகுதி, சத்தான கதைப்பகுதி, கண்களில் ஒற்றிக் கொள்ளத்தக்கபடி தீட்டப்பட்டிருந்த வண்ண ஓவியங்கள் ஆகியன என்றென்றும் மனத்தில் நிற்கும்படியாகப் படைக்கப்பட்டிருந்தது, பாராட்டத்தக்க அம்சம்.

கரூர், இரா. வளையாபதி.

● தீபாவளி மலரை வியாபாரமாக்கி வரும் சில பத்திரிகைகளுக்கு இடையே, தரத்தை முதன்மைப்படுத்தி, படித்துப் பாதுகாத்து வைக்கக் கூடிய வகையில், சிறப்பினைத் தாங்கி வந்த 'கல்கி' தீபாவளி மலர் கண்டேன். ஆர்ப்பரிக்கும் கடலலைகளைவிட அமைதியாகச் செல்லும் ஆற்று நீரின் வேகம்தான் சுகம் என்பதை உணர்த்தி விட்டது.

பெங்களூர், அ. குமார்.

● அட்டகாசமான தீபாவளி மலர் கண்டேன். 'லட்சுமி' பூஜை செய்யும் இனிய வேளையில் 30.10.97 காலை 'தேவி லட்சுமி' வீடுதேடி வந்ததும், அவளை இந்திரனும், ஐராவதம் யானையும் பூஜிக்கும் காட்சியும், உள்ளே அதற்கு விளக்கமும் கண்டு படித்திட்ட போது உள்ளம் பூரித்துப் போனது! உள்ளே பக்கங்களைப் புரட்டப் புரட்ட ஏதோ தெய்வீக சன்னிதானத்திலேயே இருப்பது போன்றும் பிரமை. 'சில்பி'யே திரும்பவும் பத்மவாசனின் உருவில் வந்து விட்டார் என உறுதியாகச் சொல்லுமளவு இந்த இளைஞரின் தூரிகை விளையாடி உள்ளதே! பாராட்ட வார்த்தைகளே இல்லை!

சென்னை - 39, சுகந்தி நாராயணன்.

● தீபாவளி மலரின் 194-ம் பக்கத்தில் ஆவுடையார் கோவில் ஹரிஹர பாகவதர் பற்றிய குறிப்பு கண்ணில்பட்டது. பாகவதர் ''ஒத்து'' என்ற கருவியும் வாசித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ''ஒத்து'' என்பது நாதஸ்வரக் கச்சேரிகளில், சுருதிகாட்ட இசைக்கப்படும் கருவி. பாகவதர் கையாண்டது ''கொத்து'' எனப்படும் தந்திக் கருவி- லயவாத்யமாக, உப பக்கவாத்யம் என்ற முறையில் கையாளப்படுவது. ''லயவாத்யமான'' தந்திக் கருவி இது ஒன்றேயாகும்!

தேவகோட்டை, எச். சுப்பிரமணியம்.

● வண்ணக் களஞ்சியம் தீபாவளி மலர் எண்ணத்தில் நிறைந்து விட்டது! குறிப்பாக, அரவிந்தர் ஆட்கொண்டார்! நேதாஜி நெஞ்சில் நிலை கொண்டார்!

வேலூர் - 6, எல்.கோபாலகிருஷ்ணன்.

னடா... சண்டியர்ன்னு நினைப்பா... நாயம் பேசிட்டிருக்கறப்ப கை வெக்கப் போற..."

"யோவ்... போங்கய்யா... பெரிய வெண்ணைக... நாயம் பேச வந்துட்டானுங்க..."

வாயில் வந்த கெட்ட வார்த்தைகளை கொட்டிக் கொண்டே அங்கிருந்து போய் விட்டான் ஆறுச்சாமி.

"தம்பி... புள்ளய நீ கூட்டிட்டுப் போயிரு... மனுஷனா அவன்.. கொலை பண்றதுக்கும் அஞ்ச மாட்டான்... அவங்கூட குடும்பம் நடத்தி அஞ்சாறு ஆச்சு..." ஒரு பெரியவர் அண்ணனிடம் சொல்லிக் கொண்டு இருந்தார்.

முகமெல்லாம் ஜிவ்வென்று சிவந்து போயிருந்தது அண்ணனுக்கு. பற்களை நெறித்துக் கொண்டிருந்தார். பார்ப்பதற்கே பயமாக இருந்தது.

மிரண்டு போயிருந்தான் இவன். அம்மாளின் கையை இறுகப் பற்றிக் கொண்டான். மாமாவையே வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சரி வாம்மா... நம்ம வீட்டுக்குப் போகலாம். இவனோட குடும்பம் நடத்தி பாழாப் போச்சு... வாழாவெட்டின்னு பேரு வந்தா பரவாயில்லை..."

அன்று இரவு வெகு நேரத்திற்குப் பிறகுதான் அவரது ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

"அண்ணா... எங்க கூறு கெட்ட சண்டைல இவனில்ல இடையில மாட்டிக்கிட்டான். இவன் பள்ளிக் கூடம் இனி எப்படிப் போறது...?"

''அது ஒண்ணும் பிரச்னையில்ல... ஸ்கூல்ல சொல்லி சர்டிபிகேட்

வாங்கிட்டு வந்து இங்கே சேத்தர்லாம்... காப்பரீச்சை கூட இன்னும் வரலயில்ல..."

"...இவங்கப்பா வேண்டியதில்லை யாண்ணே..."

"தேவையில்லை... நீ போனாவேபோதும்..."

அதிகாலையிலேயே அதற்காகத்தான் புறப்பட்டு வந்திருந்தார்கள். ஏமாற்றமாகிப் போனதில் மனமெல்லாம் ரணமாகி இருந்தது செல்விக்கு.

பால் சொசைட்டி சந்தில் நுழைந்து விநாயகர் கோயிலைத் தாண்டி வந்து கொண்டிருந்தார்கள். வெயிலின் காரணமாக ஆள் நடமாட்டமே இல்லாமல் வீதியே துடைத்து விட்டிருந்தது.

செட்டியார் ஜவுளிக் கடை தாண்டி மளிகைக் கடை தெரிந்ததும் மிரண்டு போனான். அப்பா இங்குதான் எங்காவது உட்கார்ந்து கொண்டிருப்பார். இப்போது அம்மாவைப் பார்த்தால் அடித்து நொறுக்கி விடுவார். உடம்பு நடுங்கியது.

அம்மாவைக் கீழே தள்ளி விட்டுக் குடைக் கம்பியில் அடிக்கின்ற அப்பாவின் உருவம் பீதியாகவும் வெறுப்பாகவும் மனதுக்குள் ஆடியது.

அம்மா அந்த வழியாகப் போகாமல் பஜனைக் கோவில் வழியாகப் போனதில் நிம்மதியாக இருந்தது இவனுக்கு. ஏதோ ஒரு வீட்டுக்குள் போனார்கள்.

"வாம்மா... எங்க இந்த வெயில்ல... லட்சுமி... ரெண்டு தம்ளர் மோர் கொண்டு வாம்மா. உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தார் கவுண்டர்.

"அண்ணன் நல்லா இருக்காரா...?"

"இருக்காருங்க... பையன் அங்க ஸ்கூல்ல சேர்த்தனும்... சர்டிபிகேட்ட வாங்கலாம்ன்னு வந்தேன்..."

"ஆமாமா... உங்க சண்டைல அத விட்ராதீங்க."

"ஸ்கூல்ல கேட்டம்... தர மாட்டேங்கறாங்க. அந்தாளு தர வேண்டாம்ன்னுட்டு போயிருக்காங்க.."

தலையிலடித்துக் கொண்டார். எதுவும் பேசாமல் கண்களை மூடிக் கொண்டார்.

"எச்செம் உங்ககிட்டே சொல்லிக் கேக்கச் சொன்னார். அதான் வந்தோம்."

"இல்லைம்மா... அவங்கிட்ட மனுஷனுக பேச முடியாது. காட்டுமிராண்டி ஜென்மம். அன்னிக்கு பஞ்சாயத்தப்ப பார்த்தயில்ல. செருப்புல அடிச்ச மாதிரி இருந்துச்சு."

"அப்புறமென்னதாங்க பண்றது..."

இதுவரையிலும் அடங்கியிருந்த அழுகை மறுபடியும் உயிர்பெற்றுக் கொண்டிருந்தது.



''டாக்டர்! கவலைப்படற மாதிரி ஏதாவது...?''

''என்னோட பில்தான் அப்படி இருக்கும்! வேற ஒண்ணும் இல்லே!''

— சம்பத்குமாரி

"சொந்தப் பையன் வாழ்க்கையிலேயே விளையாடுறானே... சண்டாளன்..."

"ஒண்ணு பண்ணும்மா... அந்தாளுகிட்டவே நேராவே போய்க் கேளு... ஆனா.. தனியா போயிராதே..."

"அந்தாளு கிட்டவே போறேன்... இப்படி நான் கால்ல விழுகணும்னுதானே அந்தாளோட ஆச... என்னதான் பண்றாருன்னு பார்க்கறேன்.."

ஆவேசம் வந்தவனாக இவளை வெளியே இழுத்துக் கொண்டு வந்தான்.

வெயில் திடீரென மங்கி மேகம் சூழ்ந்து கொண்டது. காற்று ஜிலுஜிலுவென வீசியது. தெருவில் கிடந்த சிமெண்ட் பையை இரண்டு நாய்கள் இழுத்து விளையாடிக் கொண்டிருந்தன.

கால்கள் பின்னிக் கொண்டது செல்விக்கு. சற்று முன்னர் இருந்த தைரியமெல்லாம் வற்றிப் போய் படபடப்பாக இருந்தது.

கணவனை எப்படி எதிர்கொள்வது என்பதை நினைத்துக் கலங்கிப் போனாள். எகத்தாளம் பண்ணுவான். வார்த்தையால் குத்திக் கிழிப்பான்.

அவன் பேசச் சாத்தியமாயிருக்கிற அத்தனை வார்த்தைகளையும் இப்போதே மனதுக்குள் பதியவைத்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா... அப்பாகிட்டயா போறோம்...?"

"ஆமாண்டா. பேசாம வா..."

"நான் பள்ளிக்கூடம் போகலைம்மா. குமார் கூட மில்லுக்கே போறேம்மா..."

மேற்கொண்டு நடக்காமல் நின்று கொண்டான். அம்மாவையும் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினான்.

"அப்பாகிட்ட கேக்க வேண்டாம்மா. நான் மில்லுக்கே போறேன்."

எதுவும் பேசாமல் ஆயாசமடைந்தவளாக அங்கிருந்த கல்லில் உட்கார்ந்து கொண்டாள். குனிந்து மடியில் தலையைப் புதைத்துக் கொண்டு கேவி அழ ஆரம்பித்தவளைப் பார்த்து இவனுக்கும் அழுகை வர ஆரம்பித்தது. ■

33

சாயந்தரம் நாலு மணிக்கு ஆண்டியின் பள்ளிக்கூடத்துக்குச் சென்றபோது பேஜின் மனத்தில் அசாதாரண அமைதி ஏற்பட்டிருந்தது. எல்லாத் தடைகளும் நொறுங்கி, சுதந்தரமாக இருக்கிறோம் என்ற தெம்பு உண்டாகியிருந்தது.

ஆண்டிக்கு வாக்களித்திருந்தபடி அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனாள்.

"வழியிலே கொஞ்சம் நிறுத்தும்மா. ஆலிக்கு ரோஜாப் பூ வாங்கிட்டுப் போகலாம்," என்றான் அவன்.

"ஆலி தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கிறாள். அங்கே பூவெல்லாம் கொண்டு போகக் கூடாது. ரோஜாப் பூ வாங்கிக் கொள். க்ளோவிடம் வேண்டுமானால் கொடுக்கலாம்," என்றாள் பேஜ்.

"சரிம்மா," என்றவன் ஒரு கொத்து ரோஜா மலர்கள் வாங்கிக் கொண்டான். அக்காவைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பில் அவன் பரபரப்பும் ஆனந்தமுமாக இருந்தான். வழி பூரா ஆலிஸனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான்.

முன்கூட்டியே அவனுக்கு ஆலிஸனின் நிலைமையைத் தெரிவித்து வைப்பது நல்லது என்று பேஜ் எண்ணினாள். ஆனால் அவள் கொஞ்சம் சொன்னதுமே "தெரியும், அம்மா. நீதான் சொன்னாயே, நல்லா தூங்கற மாதிரி இருப்பாள்னு," என்றான்.

"இல்லை. ரொம்ப மோசமாயிருப்பாள். தலையிலே பெரிய கட்டு. கையும் காலும் குச்சி குச்சியாக மெலிந்து இருக்கு. மூச்சு விடுவதற்காகத் தொண்டையில் ட்யூப் செருகியிருக்கிறார்கள். அந்த ட்யூபை ஒரு பெரிய மெஷினோடு இணைத்து வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரி நீ பார்த்தே இருக்க மாட்டாய். பயப்படாமல் இருக்கணும். என்ன? நீ அவளுடன் பேசலாம். ஆனால் அவள் பதில் சொல்ல மாட்டாள். புரிகிறதா...?"

மூலம் : டேனியல் ஸ்டீல்

11:29

தமிழில் : ரா.கி. ரங்கராஜன்

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

அவ்வளவு சொல்லியிருந்தும் ஆலிஸனைப் பார்த்தபோது ஆண்டி பயத்தில் வாயடைத்து நின்று விட்டான். அவன் எதிர்பார்க்காத காட்சி அது. அன்றைக்கென்று பார்த்து, ஆலிஸனின் தலைக் கட்டைப் புதிதாக மாற்றியிருந்தார்கள். வழக்கத்தைக் காட்டிலும் பெரிதாயும் பயங்கர வெள்ளையாயும் இருந்தது.

ஆண்டி மெதுமெதுவே ஆலிஸனை நெருங்கி, பையில் வைத்திருந்த ஒரே ஒரு சின்னப் பூவை எடுத்து அவள் தலைமாட்டில் வைத்தான். 'ஆலி...' என்பதற்கு மேல் எதுவும் சொல்ல முடியாமல் நீண்ட நேரம் வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

"ஆலி... இன்னைக்கு அப்பா நியூயார்க் போகிறார்... இங்கே மறுபடியும் ஒருநாள் என்னை அழைச்சிட்டு வர்றேன்னு அம்மா சொல்லியிருக்கிறாள். ஆலி, இத்தனை நாள் நான் வராததைத் தப்பாய் நினைச்சுக்காதே. ஸாரி..."

கருவிகளைத் தவிர அந்த அறையில் எந்தச் சலனமும் இல்லை. அவன் கொண்டு வந்த பூவின் வாசனையைத் தவிர எங்கெங்கும் ஆஸ்பத்திரி நெடிதான். வெடித்துக் கொண்டு வந்த அழுகையைப் பேஜ் அடக்கிக் கொண்டாள்.

"நீ இல்லாமல் வீடு கொஞ்சம் கூட நல்லாயில்லே, ஆலி," என்றான் அவன். அம்மாவும் அப்பாவும் சதா சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்ல நினைத்தான். அம்மா வருத்தப்படுவாள் என்று சொல்லவில்லை. "எனக்கு ஒரு புது சிநேகிதன் கிடைச்சிருக்கான், ஆலி. யார் தெரியுமா? பிஜான். அவனுக்குப் பதினெட்டு வயசாகிறது. ஆனால் என்னைப் போலவே இருக்கான்..." என்றவன், அம்மாவின் முகத்தைப்

பார்த்தான். அவன் அழுது கொண்டிருப்பது தெரிந்ததும், "என்னம்மா?"

கண்ணீருக்கிடையே புன்னகை செய்து அவனை அணைத்துக் கொண்டாள் பேஜ். ஆண்டியின் மனோதிடத்தை எண்ணிப் பெருமையாக இருந்தது. அவனை இங்கே அழைத்து வந்தது நல்லதாயிற்று. அக்காவைப் பார்க்க வேண்டுமென்று அவனுள் இருந்த ஆதங்கம் இப்போதுதான் அவளுக்குப் புலப்பட்டது. ஆலிக்கு ஏதானும் நேர்ந்தால் கூட, கடைசியாக அவளைப் பார்த்துக் குட்பை சொன்னோமென்ற திருப்தி இவனுக்கு இருக்கும்.

அடுத்தபடி க்ளோவைப் பார்க்கப் புறப்பட்டார்கள். அதற்கு முன் சற்று நின்ற ஆண்டி, ''அப்புறமா வர்றேன், ஆலி. சீக்கிரமா எழுந்துக்க. நீ வீட்டில் இல்லாமல் என்னவோ போலிருக்கு,'' என்று ஆலிஸனிடம் கூறிவிட்டு, எம்பி நின்று அக்காவை மெல்ல முத்தமிட்டான்.

போகும்போது பேஜிடம், "நான் சொன்னதெல்லாம் ஆலிக்குக் கேட்டிருக்குமா அம்மா?" என்றான்.

"நிச்சயமாய்க் கேட்டிருக்கும்," என்றவள் க்ளோவின் அறைக்கு அழைத்துப் போனாள் அவனை. அங்கே தாரென்ஸனும் பிஜானுடன் வந்திருந்தான். க்ளோவிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, பிஜானுடன் வெளியே விளையாடப் போய் விட்டான் ஆண்டி.

வெளியே வெராந்தாக்களில் அவர்கள் ஓடுவதும் சிரிப்பதும் கேட்டன.



''ஆண்டி சந்தோஷமாக இருக்கிற மாதிரி தெரிகிறது. அக்காவைப் பார்த்துப் பயந்து போனானா?" என்றான் தாரென்ஸன்.

"இல்லை, தைரியமாயிருந்தான்,'' என்று பேஜ் சொல்லிக் கொண்டிருந்தபோது மறுபடியும் பிஜானும் ஆண்டியும் சிரித்துக் கொண்டு ஓடும் சத்தம் கேட்டது.

''இன்னும் கொஞ்ச நேரம் இங்கே இருந்தால் நர்ஸ்கள் நம்மைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவார்கள்,'' என்றான் தாரென்ஸன். "வா, வெளியே எங்காவது போய் பிஸ்ஸா சாப்பிடலாம். வீட்டுக்குப் போய் உன் அம்மாவுக்கும் அக்காவுக்கும் சமையல் செய்யணுமா?"

"யாரும் கிடையாது. நாலு மணி ஃப்ளைட்

அருள்வாக்கு



தனி மனிதனுக்குக் கஷ்டம் வருகிறது போலவே, ஒரு ஜன ஸமுதாயத்துக்கே பஞ்சம், வெள்ளம், எரிமலை, பூகம்பம், தீ விபத்து முதலான உத்பாதங்கள் ஏற்படுவதிலும் மற்றவர்களுடைய பரோபகார சிந்தனைக்கு பகவான் வைக்கிற பரீக்ஷையும் சேர்ந்திருக்கும். இம்மாதிரி நிவாரணப் பணிகளைப் பற்றி நான் இதுவரை சொல்லவில்லை. விசேஷமாக இதைப் பற்றிச் சொல்லி வற்புறுத்த வேண்டியதுமில்லை. இப்படி ஒரு பெரிய கஷ்டம் பல பேருக்கு ஏற்படுகிறது என்றால், யாரும் சொல்லாமலே பணத்தாலோ, சரீரத்தாலோ உதவிபண்ண வேண்டும் என்ற எண்ணம், அவரவருக்கும் பொங்கிக் கொண்டு வர வேண்டும். ஸர்க்கார், ரெட் க்ராஸ், ராமக்ருஷ்ணா மிஷன் முதலானவர்களோடோ, அல்லது தாங்களாகவே ஸங்கமாகச் சேர்ந்தோ, அல்லது தனிப்பட்ட முறையிலோ, எப்படியானாலும் இந்த மாதிரியான calamity-களில் ஒவ்வொரு

டில் மூட்டை கட்டி அனுப்பி விட்டேன்," என்று சிரித்தாள் பேஜ்.

சொன்னபடியே வியாழக்கிழமையன்று பிராட் ஊர் திரும்பி விட்டான். ஆண்டியைப் பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வந்தபோது அவனுடைய கார் வாசலில் நிற்பது தெரிந்தது.

ஆண்டிக்கு ஒரே உற்சாகம். "அப்பா வந்தாச்சு!" என்று சந்தோஷத்துடன் கூவிக் கொண்டு உள்ளே ஓடினான்.

ஆனால் பிராடின் அறைக் கதவை மடேலென்று திறந்தவன் திடுக்கிட்டு நின்றான்.

தரையிலும் படுக்கை மீதும் இரண்டு மூன்று சூட்கேஸ்கள் கிடந்தன. எங்கு பார்த்தாலும் துணிமணிகள். பிராட் தன் துணிகளைப் பெட்டிகளுக்குள் அடுக்கிக் கொண்டிருந்தான்.

"என்னப்பா இதெல்லாம்? மறுபடியும் ஊருக்குப் போறியா?" என்று ஆண்டி கேட்டதும் அவனால் சட்டெனப் பதில் கூற முடியவில்லை. பேஜின் முகத்தைப் பார்த்தான். ஆண்டியிடம் சாவதானமாக நிலைமையை விளக்கிச் சொல்ல வேண்டுமென்று அவன் நினைத்திருந்தான். இப்போது அதற்கு இடமில்லாமல் போய் விட்டது.

படுக்கையில் உட்கார்ந்து ஆண்டியை மடியில் தூக்கி வைத்துக் கொண்டான் பிராட். "டவுனில் வேறே இடத்துக்குப் போகலாமென்று பார்க்கிறேன்..." என்று அவன் சொன்னதும் –

"நாம்ப எல்லாரும்தானே?" என்றான் ஆண்டி.

"இல்லை... நீயும் அம்மாவும் இங்கேயே இருக்கலாம். நான் மட்டும்தான் போகிறேன்."

சிறுவனானாலும் ஆண்டிக்கு உலகம் தெரியும். கண்களில் கண்ணீர் தளும்ப, "நீயும் அம்மாவும் பிரிஞ்சிடப் போறீங்களா, அப்பா?" என்றான்.

"கிட்டத்தட்ட அப்படித்தான். இன்னும் எதுவும் நிச்சயம் பண்ணவில்லை. நான் வெளியே போய் இருந்தால் நல்லதென்று தோன்றுகிறது. அம்மாவும் நானும் ரொம்பச் சண்டை போடுகிறோம்..."

"நான் அன்னிக்கு ராத்திரி பிஜானின் வீட்டுக்குப் போனேன் என்று உனக்குக் கோபமா அப்பா?"

"அதனாலே இல்லை. கொஞ்ச நாளாகவே நான் தனியே போக வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கே இருப்பது வர வரக் கஷ்டமாக இருக்கிறது. உன் மேலே எனக்குப் பிரியம் இல்லையென்று நினைக்காதே. எனக்கும் பிரியம். அம்மாவுக்கும் பிரியம். நான் அடிக்கடி இங்கே வருவேன் உன்னைப் பார்க்க. நீயும் என்னைப் பார்க்க வரலாம்..."

அவர்கள் பேச்சைக் கேட்கக் கேட்கப் பேஜுக்கு நெஞ்சு கனத்தது. இனி, வழக்கு, லாயர், கோர்ட், தீர்ப்பு, குழந்தையைப் பார்க்க அப்பா வருவது, அழைத்துப் போவது, அழைத்து வருவது... இதெல்லாம் அவளுக்கு வெறுப்பாயிருந்தது. ஆனால் வேறு வழியில்லை.

"நீ எங்கே போய்த் தங்குவே, அப்பா? உனக்கு வீடு இருக்கா?" என்று ஆண்டி கேட்டான்.

"நான் ஒரு அபார்ட்மென்ட்டில் தங்குவேன். அங்கே போனதும் போன் நம்பரைச் சொல்கிறேன். நீ போன் பண்ணலாம். ஆபீசுக்கும் கூப்பிடலாம். என்ன?"

"ஊகூம். நீ எங்கேயும் போகக் கூடாது அப்பா."

"நானும் போக வேண்டாமென்றுதான் பார்க்கிறேன். முடியவில்லை."

"ஏன் முடியலே?"

"என்னவோ அப்படியெல்லாம் நேர்ந்து விட்டது."

"சரிபண்ணிப் பாரேன்."

"பண்ணிப் பார்த்தேன். முடியவில்லை"

வரும் பணிசெய்ய வேண்டியது அவசியம். • தனி மனிதனின் கஷ்டத்துக்கு மூலகாரணம் அவனுடைய பூர்வகர்மா என்கிறாற் போலவே, இப்படிப்பட்ட விபத்துக்களையும் Natural calamity —"இயற்கையின் சீற்றம்" என்று இந்த நாளில் எழுதினாலும், இதெல்லாம் பொதுவாக மநுஷ்ய ஸமூஹம் முழுதுமே பண்ணும் பாபத்துக்காக பகவான் தருகிற தண்டனைதான் என்று சாஸ்த்ரம் சொல்லும். தண்டனையாகப் பெற்று வருத்தப்பட்டுக் கொண்டேதான் அந்தப் பாபத்தை நாம் தீர்க்கவேண்டும் என்றில்லை. இம்மாதிரி ஸமயங்களில் நாம் பண்ணுகிற மனப்பூர்வமான கஷ்ட நிவாரணத் தொண்டாலும் பாபத்தில் பாக்கியிருப்பதைப் போக்கிக்கொண்டு விடலாம். இப்படித் தொண்டு செய்யாமல் கருங்கல் மாதிரி இருந்தால் அதுவே ஒரு பாபம். இன்றைக்கு ஜன ஸமூஹத்தின் பிரதிநிதியாக இன்னொருத்தன் வாங்கிக் கொண்ட தண்டனை, கல் மாதிரி இருக்கிற நமக்கே நாளைக்கு வரும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

என்றான் பிராட். உண்மையில் சரிபண்ணுவதற்கு எந்த முயற்சியும் தான் எடுத்துக் கொள்ளவில்லை என்று அவனுக்குத் தெரியும். வீட்டை விட்டு வெளியேறுவதுதான் நிம்மதி என்று அவன் முடிவுக்கு வந்து விட்டான். ஸ்டிபானியுடன் வேறு வீடு, வேறு வாழ்க்கை...

"போகாதே அப்பா," என்று மறுபடி கெஞ்சினான் ஆண்டி.

"உஷ்! அசடு மாதிரி பேசாதே. நம் எல்லாருக்கும் இதுதான் நல்லது. அதனால்தான் போகிறேன்," என்று பிராட் சொன்னதும் ஆண்டி அழுதுகொண்டே தாயிடம் ஓடி அவளைக் கட்டிக் கொண்டான்.

அன்று இரவு பிராட் அங்கேதான் தங்கினான். ஆனால் இரவு முழுதும் தன் பொருள்களை எடுத்து வைத்துக் கொள்வதிலேயே நேரம் சென்றது.

பொழுது விடிந்தபோது, இழவு விழுந்த வீடு மாதிரி இருந்தது.

காரில் தன் சூட்கேஸ்களையும் பைகளையும் பிராட் எடுத்து வைத்துக் கொண்டிருந்த போது, "உன்னை மறுபடி எப்ப அப்பா பார்ப்பது?" என்றான் ஆண்டி.

"அடுத்த சனிக்கிழமை, நிச்சயமாய்ப் பார்க்கலாம். நான் வெளியூர் போயிருக்கிறதாய் நினைத்துக் கொள். தினம் தினம் என் ஆபீசுக்குப் போன் பண்ணிப் பேசலாம்."

என்ன சொல்லியும், எத்தனை வாக்குறுதி கொடுத்தும் ஆண்டி மனம் தேறவில்லை. கார் கண்ணுக்கு மறையும் வரையில் அழுது கொண்டேயிருந்தான். அவனை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு தேற்றினாள் பேஜ். ஆனால் அவளுக்கும் கண்ணீர் வழிந்தது.

நாலு வாரங்களுக்கு முன்பு ஆலிஸனுக்கு நேர்ந்த அந்த விபத்துக்குப் பின்னர் இன்றுதான் மிக மோசமான நாளாக இருந்தது அவளுக்கு. இத்தனை வருடங்களாகக் கட்டிக் காத்த நம்பிக்கைகள், கண் படுகிற மாதிரி கணவனும் மனைவியும் நடத்திய வாழ்க்கை, உருவாக்கி வளர்த்த குடும்பம் - எல்லாம் போயே போய் விட்டன.

ஆண்டி ரொம்ப நேரம் அழுது கொண்டிருந்தான். இருவரும் உள்ளே திரும்பி, அருகருகே உட்கார்ந்தார்கள். வீட்டில் யாரோ இறந்து விட்ட மாதிரி இருந்தது. அவர்கள் மிக நேசிக்கும் இரண்டு ஆன்மாக்களை உயிரோடு பறிகொடுத்து விட்ட மாதிரி...

மறுநாள் காலை அவன் கண்விழித்துப் பார்த்தபோது ஆண்டி குப்புறப் படுத்து, தலையணையில் முகம் புதைத்து அழுது கொண்டுதான் இருந்தான்.

தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, "அழாதேடா கண்ணா," என்றாள்.

ஆண்டி புரண்டு படுத்து அவளை நேருக்கு நேராகப் பார்த்தான். "அப்பாவை வீட்டை விட்டுப் போகணும் என்று நீதான் சொன்னியாம்மா?"

"இல்லைடா, ராஜா. அவர் போகும்படி ஆகிவிட்டது. நிலைமை ரொம்ப மோசம்."

"என்ன மோசம்? எதுக்காக நீயும் அப்பாவும் சண்டை போட்டீங்க?"

"எனக்கும் தெரியவில்லை. ஏதோ போட்டோம்," என்றாள் அவள். எப்படி விளக்குவது என்று தெரியவில்லை. அவளுக்கே இன்னும் சரியாய் விளங்காதபோது, ஏழு வயதுக் குழந்தைக்கு எப்படிப் புரிய வைக்க முடியும்?

பிற்பகல் தாரென்ஸன் போன் செய்தான். நடந்ததைச் சொன்னாள் பேஜ். "ஆண்டியுடன் இங்கே சாப்பிட வா. மனசுக்கு மாறுதலாயிருக்கும்," என்று கூப்பிட்டான்.

அவள் சம்மதித்தாலும் ஆண்டி முதலில் ஒப்புக் கொள்ளவில்லை. பிஜானுடன் விளையாடிக் கொண்டிருக்கலாம் என்று அவள் சொன்ன பிறகே ஒப்புக் கொண்டான்.

அங்கே போனதுமே, சினேகிதனின் முகம் வாடியிருப்பதைப் பிஜான் கண்டுகொண்டான். இருவரும் வெளியே போய்ப் பேசிக்



"ஒவ்வொரு படத்துக்கும் புக் ஆன பிறகு நீங்க என்ன நினைச்சுக்குவீங்க?"

" 'இந்தப் படமாவது ரிலீஸ் ஆகணும் பகவானே'ன்னு வேண்டிக்குவேன்!"

— சீர்காழி வி. ரேவதி

கொண்டிருந்த சமயம், "ஆண்டி எப்படி எடுத்துக் கொண்டான்?" என்று தாரென்ஸன் விசாரித்தான்.

"நான் நினைத்திருந்ததை விட மோசம். நிஜமாகவே பிரிந்து போவது என்ற கட்டம் வந்ததும் எனக்கும் சகிக்கவில்லை."

"புரிகிறது," என்றான் தாரென்ஸன். அவனும் அவன் மனைவி டானாவும் பிரிந்த போது வீடு எப்படி இருந்தது என்பது அவனுக்கு நினைவு வந்தது. "கடவுளே, எவ்வளவு வேதனை உனக்கும் ஆண்டிக்கும்!" என்று பெருமூச்சு விட்டான்.

"எல்லாருக்கும்தான்," என்ற பேஜ், "க்ளோ எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"அனேகமாய் அடுத்த வாரம் வீட்டுக்கு வந்து விடுவாள். நடை பழகுவதற்கு ஊன்று கட்டை முதலானது வாங்க வேண்டும். அவள் படுக்கையறை மாடியில் இருக்கிறது. ஆனால் கீழேதான் இருக்க வேண்டியிருக்கும். என் மூத்த பையன் நிக்கின் அறையை அவளுக்கு ஒழித்துத் தரப் போகிறேன்..."

அவன் சொல்லிக் கொண்டே போன போது, இவர் புண்ணியம் பண்ணினவர் என்ற நினைப்பு ஏற்பட்டது அவளுக்கு. கால் சரியாக இருக்கிறதோ இல்லையோ, வீட்டுக்கு உயிரோடு வருகிறாள் க்ளோ. ஆனால் அலிஸனின் நிலைமையில் எந்த முன்னேற்றத்தையும் காணோம்.... நாலு வாரமாகிறது.

தாரென்ஸன் அருமையாகச் சமையல் செய்து வைத்திருந்தான். சாப்பிட்டு விட்டுத் தோட்டத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். அவன் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு எழுதியிருந்த கட்டுரையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். பேஜின் மனம் அதில் செல்லவில்லை.

"பிராட் புறப்பட்டுப் போனபோது எனக்கு ஏற்பட்ட வருத்தம்... அப்படியொரு வருத்தம் ஏற்படுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை...." என்றாள்.

"இருக்காதா பின்னே? பதினாறு வருஷம் குடும்பம் நடத்தியிருக்கிறாயே? மரக் கட்டையா நீ!" என்றான் தாரென்ஸன். "பார்த்தாயா, உன்னிடம் ஒன்று சொல்ல நினைத்திருந்தேன். மறந்தே போயிற்று. போன வாரம் ஒரு விஷயம் காதில் விழுந்தது."

"என்ன?"

"ஒரு பார்ட்டிக்கு லாரா ஹட்சின்ஸன் – அந்த செனேட்டரின் மனைவி வந்திருந்தாளாம். எக்கச்சக்கமாய்க் குடித்துவிட்டுத் தள்ளாடினாளாம். அசிங்கமாகி விடும் என்று அவளை அவசர அவசரமாக அந்தண்டை இழுத்துக் கொண்டு போய் விட்டார்களாம். நீயும் நானும் சாதாரண மனிதர்கள். குடித்து விட்டுக் கீழே விழுந்தால் கிடக்கட்டும் என்று போய் விடுவார்கள். லாரா பெரிய இடமாயிற்றே! அதனால் கமுக்கமாய் அமுக்கி விட்டார்கள். இதற்கு முன் எவ்வளவு இடத்தில் எவ்வளவு தடவை அந்த மாதிரி அசிங்கம் நடந்திருக்கிறதோ?"

பேஜ் அவனையே பார்த்தபடி மௌனமாக இருந்தாள்.

தாரென்ஸன் தொடர்ந்தான் : "கார் விபத்து ஏற்பட்ட அன்றைக்கும் கூட இப்படித்தான் குடித்து விட்டு, கார் ஓட்டியிருப்பாள். அன்று முதல் அவள் நடவடிக்கைகளைப் பார். எல்லாரிடமும் மன்னிப்புக் கேட்பதும், தான் ரொம்ப ஆடிப் போய் விட்ட மாதிரி நடிப்பதும், பிலிப்பின் அப்பா அம்மாவிடம் அனுதாபம் காட்டுவதும், பிலிப் படித்த பள்ளிக்கூடத்துக்குப் பெரிய தொகை நன்கொடை அளிப்பதும்... நம் ஒவ்வொருவருக்கும் வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதுவதும்... ஏதோ குற்ற உணர்வினால்தான் அப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள்..."

"எல்லாம் முடிந்து விட்டது. இனிமேல் நாம் என்ன செய்ய முடியும்?" என்றாள் பேஜ். லாராவின் மீது குற்றம் சுமத்த அவளுக்கு மனம் வரவில்லை.

"என்ன செய்வதா? ஒரு ஐடியா இருக்கிறது. என் பழைய நண்பன் ஒருவன் இருக்கிறான். பத்திரிகை நிருபர். பரபரப்பான விஷயங்களைத் தோண்டித் துருவுவதில் கெட்டிக்காரன். அவனிடம் லாராவைப் பற்றி விசாரிக்கச் சொல்லப் போகிறேன்," என்றான் தாரென்ஸன்.

(தொடரும்)

'பின்'னேறல் ஸ்பெஷல்

முன்பொரு முறை இந்திரியாணி எக்ஸ்பிரஸ் புணாவிலிருந்து மும்பை வரும் வழியில், டிரைவர் இல்லாமலேயே ஓட்டமாக ஓடி, கர்ஜத்தில் தானாக நின்று, பயணிகள் தெய்வாதீனமாகத் தப்பித்த கதை பழசு! மும்பை வந்து கொண்டிருந்த நேத்ராவதி எக்ஸ்பிரஸ், குருத்வாடியை அடைந்த உடன், திடீரென்று பின்னோக்கி ஓடத் துவங்கிய கதை புதுசு! இரண்டு ஸ்டேஷன்கள் தாண்டி 'மாடா'வில் நல்லவேளையாக நிற்க, வேகம் குறைவாக இருந்ததால் விபத்தோ, உயிர்ச் சேதமோ இல்லை! இம்முறை டிரைவர் உள்ளேதான் இருந்திருக்கிறார். "குருத்வாடியில் என்ஜின் மாற்றப்பட்டது; புது என்ஜினில் ஏதோ கோளாறு போலும்" என விழிக்கிறார்கள் காரணமறியாத டிரைவரும், ரயில்வே அதிகாரிகளும். ஒருவேளை, நம் ரயில்வே டிபார்ட்மெண்ட் செயல்படும் அழகு, இப்படி சிம்பாலிக்காக உணர்த்தப்பட்டிருக்கிறதோ?

அரசியல்வாதிகளின் 'ஏப்ரல் ஃபூல்' விளையாட்டு!

அரசியல் வா(ரி)திகள்

அரசியல்வாதிகள் என்றால், ஒருவரை ஒருவர் 'வாரி' விடுவது சகஜம்தானே? மாதிரிக்கு, மகாராஷ்டிரா சி.எம். மனோகர் ஜோஷியையும், கலாசார மந்திரி பிரமோத் நவால்கரையும் எடுத்துக் கொள்ளுங்கள் - முட்டாள் தினத்தன்று நடந்த ஒரு சம்பவத்தை, பின்னவர், அண்மையில் வெளியிட்டார்: காலையிலிருந்தே இவர், அவரை ஏமாற்றப் பார்க்க, 'தயார்' நிலையில் இருந்த ஜோஷி குடும்பத்தினர் இவருக்கு 'அல்வா' கொடுத்துக் கொண்டிருந்தனர். இரவு 10 மணிக்கு ஒயமாக, இவர் ஃபோன் செய்ய, திருமதி ஜோஷியும், கணவர் பக்கத்திலிருந்த சினிமா தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்ல... அவ்வளவுதான், அடுத்த நிமிடம் தியேட்டர்காரர்களுக்கு நவால்கரிடமிருந்து அவசர ஃபோன் பறந்தது! உடனே திரையில், "எமர்ஜென்சி - சி.எம். உடனடியாக வீட்டாருடன் தொடர்பு கொள்க" என்று ஸ்லைடு போட்டு விட்டார்கள். ஜோஷி அலறி அடித்துக் கொண்டு வீட்டுக்கு ஃபோன் செய்தால்... லைன் எங்கேஜ்ட்! (திருமதி நவால்கர்தான் வேண்டுமென்றே திருமதி ஜோஷியுடன் வம்படித்துக் கொண்டிருந்தாரே!) படபடக்கும் நெஞ்சுடன் வீடு திரும்பி, ஜோஷி காலிங் பெல்லை அழுத்தினால்... "என்ன? பிக்சர் போரடித்ததா?" என ஆச்சர்யத்துடன் மனைவி வினவ, விஷயம் மெதுவாக விளங்க... செமை கூத்து! அரசியலில் 'சீரியஸ்' மட்டுமல்ல, 'சிரி'யஸ் நேரங்களும் உண்டுதானே?

நீயா நானா?

ஆட்டோக்காரர்கள் ஸ்டிரைக் செய்ததன் விளைவாக, இனி அவர்கள் சயான் ஆஸ்பத்திரி வரையில் செல்லலாம் என அனுமதி வழங்கியுள்ளது அரசு! 'ஐயையோ! முதலில் சயான்; அப்புறம் பரேலிலுள்ள K.E.M ஹாஸ்பிடல் என்பார்கள்; அடுத்து பைகுல்லாவிலுள்ள J.J ஹாஸ்பிடல் வரை செல்லலாமென்பார்கள்; கடைசியில், மும்பை முழுதுமாக, ஆட்டோக்காரர்கள் ஆக்கிரமிக்க, எங்கள் கதி அதோ கதிதான்" - என அலறுகிறார்கள் டாக்ஸிவாலாக்கள். ஆயிரக்கணக்கில், மராத்தா மந்திர் முன் கூடி, எதிர்ப்பு தெரிவிக்கப் போவதாகச் சொன்னவர்கள், இப்போது சயானில்,

"ஒண்டிக்கு ஒண்டியாக", வழிமறித்தாவது ஆட்டோக்களை உள்ளே விடாமல் தடுக்கப் போவதாக பயமுறுத்துகிறார்கள்! இந்த 'நீயா நானா' போட்டி, கடைசியில் உனக்குமில்லை எனக்குமில்லையாகப் போய்விடப் போகிறதே என்பது மும்பைவாசிகளின் கவலை.

'இடி'க்குத் தடை

"மும்பையில் வேலை வாய்ப்புக்கள் குறைந்து விட்டன; 2 லட்சம் பேர் வேலை பார்த்துக் கொண்டிருந்த துணி 'மில்'களில் இன்று 60,000 நபர்களுக்குத்தான் வேலை இருக்கிறது! பலர் மும்பையைத் துறந்து, சொந்த ஊருக்கே திரும்பி விட்டார்கள்! முன்பெல்லாம் நாளொன்றுக்கு 400 நபர்கள் மும்பையை நோக்கிப் படை எடுத்தார்கள்; இன்றோ அது 40 ஆகக் குறுகிவிட்டது. மும்பையின் இரண்டு வார்டுகளில், ஜனத்தொகையே குறைந்து விட்டது. அதனால் ஏழைகளின் குடிசைகளை இடிப்பது நியாயமில்லை; அவர்களுக்குப் புதிதாகக் கட்டித் தரப் போவதாக அரசு வாக்குறுதியளித்த நாற்பது லட்சம் வீடுகளில், பத்து சதவிகிதம்கூட தயாரானபாடில்லை! இந்த அழகில், அவர்களுக்கு இருக்கும் கூரையையும் எடுத்து, நிராதரவாக்குவது மனிதாபிமானமற்ற செயல்!" - இப்படி வாதிடுவது "ஹ்யூமன் ரைட்ஸ் கமிஷன்" ஆக்டிவிஸ்டுகளில்லை! மும்பையில் ஒரு சமூக சேவை இயக்கம்தான் - இதன் முக்கிய ஆதரவாளர்கள் - டிமாலிஷன் மன்னர் கைர்நாரும், புதிய ராஜ்யசபை உறுப்பினரான ஷபானா ஆஸ்மியும்தான்!



• ஜோஷி



• நதீம்



• கைர்நார்



• ஷபானா ஆஸ்மி

கொலையா கொள்ளையா?

குல்ஷன் குமார் கொலை வழக்குக்காக நதீமை அழைத்து வர, மும்பையிலிருந்து மூன்று நபர் போலீஸ் டீம் லண்டனுக்குச் செல்லத் தயாராகிறது. போய்வர, தலை ஒன்றுக்கு ஆகும் டிக்கட் செலவு, கிட்டத்தட்ட ரூ. 32,000! தவிர, ஓட்டல் செலவு (அறை வாடகை) உணவு, போக்குவரத்து செலவுகள் தனி! இத்தனைக்கும் நதீமைப் பிடித்து வருவார்கள் என்று எந்த உத்தரவாதமுமில்லை! நமக்குத் 'தேவை'யானவர்கள் இப்படி உலகெங்கிலும் பரந்து விரிந்து கிடப்பதை நினைத்தால், கொலைகாரர்களைப் பிடிக்க ஆகும் செலவே பகல் கொள்ளையாக இருக்கும் போலிருக்கிறதே! ■


— ஜெயஸ்ரீ ராஜ்

கு

33

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

"சாதம் போட்டு என்னைக் கெடுத்துவிட்டீரே..." என்று வந்த விருந்தினர் அழுத கதையைச் சொன்னேன். எதற்குச் சொன்னேன் என்றால், இந்தக் காரணத்தினால்தான் மகான்கள் கண்ட கண்ட இடத்திலெல்லாம் சாப்பிடக்கூடாது



என்று நியமமாய் இருக்கிறார்கள்.

யாராவது சாப்பிடக் கூப்பிட்டால், அந்த வீடு எப்படி இருக்கிறது...? நியாயார்த்தமாக இருக்கிறதா? அந்த கிரஹத்தில் பொருள் எப்படி சம்பாதிக்கப்படுகிறது? அங்கே நித்தியம் தேவதார்ச்சனை நடக்கிறதா? பகவத் ஆராதனம் நடக்கிறதா? அந்தக் குடும்பத்தார் நல்ல முறையில் இருக்கிறார்களா? என்றெல்லாம் பார்த்துத்தான் சாப்பிடுவார்கள்.

ஆக, சுத்தம் பாகவதஸ்யான்னம்! பாகவதோத்தமர்கள் வீட்டில் சாப்பிடுவதே நல்ல புத்தியை விருத்தி பண்ணும். கண்ட இடத்திலே சாப்பிட்டால் குணத்தைக் கெடுத்துவிடும்.

பகவான் துரியோதனனுக்கு அளித்த விளக்கத்தை அன்னத்திலேதான் ஆரம்பிக்கிறான். அதனாலேயே அன்னத்தினுடைய முக்கியத்துவம் தெரிகிறது.

அடுத்தது, சுத்தம் பாகீரதி

ேயான்றுமில்லை

ஜலம்! பகவான் சொல்லியிருப்பதைத்தான் ஆதி சங்கர பகவத் பாதாள் பஜகோவிந்தத்திலே சொல்கிறார்.

கங்கா ஜல லவ கணிகா பீதா

- கங்கையிலே போய் பூர்ணமாக எடுத்து எடுத்துச் சாப்பிட வேண்டும் என்பதில்லை... கொஞ்சமாக எடுத்து ஆசமனம் செய்தாலே போதும். கங்கை ஜலம் துளியளவு உள்ளே போனாலே நம்மைப் பாவனமாக்கிவிடும்; கங்கா கங்கா என்று சொன்னாலே கூட பவித்திரத்தை ஏற்படுத்தி விடுமே! கங்கையிலே போய் நீராட வேண்டும் என்பது கூட இல்லை...

இங்கே பட்டண வாழ்க்கையிலே நாம் மிகவும் சங்கோசமாகத்தான் (சிக்கனமாக) குளிக்க வேண்டியிருக்கிறது. ஆற்றிலே குளிக்கிற மாதிரி முங்கிக் குளிப்பதெல்லாம் முடியாத செயல். தீர்த்தத்தை எடுத்து 'பக்கெட்'டில் வைத்துக் கொண்டு, மொண்டு மொண்டு ஊற்றிக் கொள்கிறோம். ஆனால் அப்படிக் குளிக்கும்போதும் ஒரு சுலோகத்தைச் சொல்லிக் குளிக்கலாம்.

கங்கேச யமுனே சைவ
கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே சிந்து காவேரி
ஜலேஸ்மின் சந்நிதிம் குரு...

'இதோ எடுத்து வைத்திருக்கிறேனே (வாளியில்) இந்த ஜலம் பரிசுத்தமானதில்லை என்பது எனக்கு நன்றாகவே தெரியும். இதிலே குளிப்பதென்பது அவ்வளவு சுத்தமில்லை... இருந்தாலும், இத்யாதி நதிகளை தியானம் பண்ணுகிறேன். அந்த நதிகளெல்லாம் வந்து இங்கே இருந்து என்னை நன்றாகக் குளித்தவனாக ஆக்கட்டும், என்று மனத்தாலே நினைத்துக் கொள்ளலாம். இந்த சுலோகத்தைச் சொல்லி தியானம் பண்ண முடியாதா என்ன...?

கட்டாயம் பண்ண வேண்டும். ஏனென்றால் - எம்பெருமான் விஷ்ணுவினுடைய திருவடியிலே ஒரு கணம் பட்ட தீர்த்தத்துக்கு அவ்வளவு பெருமை! அவனுடைய திருவடி தீர்த்தமல்லவா அந்த கங்கை!

ஓங்கி உலகளந்த உத்தமன்! அவன் அப்படி 'ஓங்கி' அளந்தபோது, அவன் திருவடி மேலே பிரும்மாவுடைய சத்தியலோகத்துக்குப் போய் நிற்கிறது! கர்ப்பத்து சிசுவைச் சுற்றி ஜலம் இருக்கிற மாதிரி, நமது இந்தப் பிரபஞ்சத்தைச் சுற்றிலும் ஆவரண ஜலம் என்பதாக உண்டு. பகவானின் திருவடி அந்த ஆவரண ஜலத்தைக் கூடக் கிழித்துக் கொண்டு நிற்கிறது. அந்தத் திருவடியைத் தடவிக் கொண்டு ஆவரண ஜலம் வருகிறது. அதோடு சேர்ந்து பிரும்மா தம் கமண்டலத்திலிருந்து பரமாத்மாவின் பாதத்தை அலம்புவதற்காக விடுகிற ஜலமும் விழுகிறது. இப்படி பிரும்மாவால் விடப்பட்ட தீர்த்தம் தான் பகீரதன் தவத்தினாலே பூலோகத்துக்கு வந்து, கீழே பாதாள லோகம் வரையில் பாய்ந்தது! மூன்று லோகத்திலும் ஓடியதாலே திரிபதகா என்றொரு பெயர் கங்கைக்கு. ஜன்னு மஹரிஷியின் செவி வழியே போய் மறுபடியும் செவி வழியே வெளிப்பட்டதனாலே ஜான்னவி என்று இன்னொரு பெயர்.

ஸ்வாமி தேசிகன் ஓரிடத்திலே சொல்கிறார்; 'விடாய் தீர கங்கா ஸ்நானம் பண்ணுவாரைப் போலே....'

விடாய் என்றால்....?

விடாய் என்றால் அழுக்கு! ஒருத்தர் பகலெல்லாம் வேலை செய்கிறார். அவர் மேலெல்லாம் சுண்ணாம்பும் தூசியுமாய்ப் படிந்து கிடக்கிறது. இத்தனை நாழி வீட்டு வேலை செய்தவர் இனி போய்க் குளிக்கவேண்டும் என்று எண்ணுகிறார். அந்த நபர் வீட்டுக்குப் பக்கத்திலோ கங்கை



''நீ திருமணத்திற்கு முன்னாடி ஒரு பெண்ணைக் காதலிச்ச விஷயத்தை உன் மனைவியிடம் சொன்னியா! என்ன சொன்னா?''

''உங்களைப் போய் ஒரு பெண் காதலிச்சாளா! நம்பவே முடியலை'ன்னா!''



''டாக்டர், நீங்க பேஷண்டுகளை கொஞ்சம் வேகமா கவனிச்சு அனுப்பினா நல்லது...''

''ஏன் சொல்றே?''

'''பல் டாக்டர்'ங்கற போர்டை யாரோ 'சோம்பல் டாக்டர்'னு மாத்திட்டுப் போயிருக்கான்!''

— வெ. ராஜாராமன்



நல்ல அழகாக ஓடுகிறது! அதன் கரையில் அழகாய் யக்ஞமும் நடக்கிறது. உடலிலே புழுதி கண்டவர் அந்த கங்கையிலே போய்க் குளிக்கிறார். உடலின் அழுக்கு தீருவதற்காகத் தேய்த்துத் தேய்த்துக் குளிக்கிறார். அழுக்கெல்லாம் போகும்போதே அவரையறியாமல் இன்னொன்றும் போய் விடுகிறது... என்னது அது?... பாவமும் சேர்ந்து போய்விடுகிறது...!

பகவானுடைய திருப்பாதத்திலே ஒரு க்ஷணம் பட்ட தீர்த்தத்துக்கே இந்த மகிமை என்றால், அந்தத் திருவடியையே பற்றிக் கொண்டவர்களுக்கு எவ்வளவு மகிமை!

ஆகையினாலேதான் 'கங்கா ஜல லவ கணிகா பீதா...' என்றார் ஆதிசங்கரர்.

பகவான், தானே கங்கையைக் கொண்டாடினான்: சுத்தம் பாகீரதி ஜலம்.

அதோடு விட்டு விடவில்லை பகவான். துரியோதனனுக்கு இன்னும் கூட எடுத்துச் சொல்கிறான்.

சுத்தம் விஷ்ணு பத தியானம்...

விஷ்ணு என்கிற பெயரையுடைய அவனுடைய திருவடி தியானமிருக்கிறதே, அது ரொம்ப சுத்தம்.

சொல்கிறவன் யார்...? விஷ்ணுவேதான் சொல்கிறான். ஆகையினாலே விஷ்ணு பத தியானம் பரம சுத்தம்.

இங்கே சொல்வதை ஓரிடத்திலே செயலாகவே நிரூபித்துக் காட்டினான் பரமாத்மா. எங்கே நிரூபித்தான் என்றால் கிருஷ்ணாவதாரத்தில்.... அந்தக் காட்சியை மகான்களெல்லாம் பார்த்தார்கள். மார்க்கண்டேயாதி மகரிஷிகளெல்லாம் பார்த்தார்கள்.

கிருஷ்ணாவதார காலத்திலே அந்தக் குழந்தையைப் பார்க்க எல்லோரும் வருகிறார்கள். அந்த நேரத்திலே அந்தக் குழந்தை என்ன செய்கிறது? வலது திருவடியைத் தூக்கி, கட்டை விரலை வாயிலே வைத்துக் கொண்டு சுவைத்துக் கொண்டிருக்கிறது!

இதை எல்லோரும் பார்க்கிறார்கள். சாமான்யமாக எல்லா கிரஹங்களிலும் குழந்தைகள் இப்படிப் பண்ணும். எல்லா குழந்தைகளுக்கும் மூலக் குழந்தையான கிருஷ்ணனும் இதைப் பண்ணியது - விரலை எடுத்து வாயிலே வைத்துக் கொண்டது. ஆனால் ஒரு பரீக்ஷை பண்ணுகிறாற் போலேதான் அந்தக் காரியம்.

அவதார காலத்திலே பரீக்ஷை பண்ணுவதே அவனுடைய வழக்கம். நரசிம்ஹ அவதார காலத்திலும் ஒரு பரீக்ஷை பண்ணினான் பகவான்.

அளந்திட்ட தூணை ஹிரண்யன் தட்ட, அங்கே வளர்ந்திட்ட மஹா உக்ர ரூபியாக அவதாரம் செய்தான் அல்லவா பரமாத்மா... அவ்வாறு தோன்றியவன், ஹிரண்ய கசிபுவை மடியிலே இட்டுக் கொண்டான். கோபத்தில் அவன் கண்களிலிருந்து அனல் பறக்கிறது! அவ்வளவு கோபமாய் இருப்பவன் ஹிரண்ய கசிபுவின் மார்பைப் பிளக்க வேண்டியதுதானே...? அவன் அப்படிச் செய்யவில்லை! மாறாக ஒரு பரீட்சை பண்ணுகிறான்.

'இத்தனை நாளாக இந்த ஹிரண்யன் நம்மை வைதது வாயினாலேயா? ஹ்ருதயத்தினாலேயா?

வெறும் வாயினால்தான் வைதான் என்றால் அவனை விட்டு விடுவோம். ஹ்ருதயத்தளவில் என்றால் பிளப்போம்...!' - இப்படி பரீட்சை பண்ணிப் பார்த்தான் பகவான்! ஹ்ருதயத்தளவிலும் வைததாலேதான் பிளந்தான்.

பகவானுக்கு யாரையும் நிக்ரஹம் பண்ணுகிற எண்ணமே கிடையாது. யாரையாவது அடிக்க வேண்டும், சித்ரவதை பண்ண வேண்டும் என்றால் ஹ்ருதயத்தையும் தொட்டுப் பார்த்துத்தான் முடிவு எடுக்கிறான். ஆனால் அனுக்கிரஹம் பண்ணுவதானால் அவன்

ஹ்ருதயத்தை ரொம்ப சோதிப்பதில்லை.

ஒருத்தர் கோவிலுக்கே போகமாட்டார்... எத்தனை நேரமானாலும் வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்திருப்பார்.

'வாரும்! கோவிலுக்குப் போய் சேவித்து வரலாமே...' என்று கூப்பிட்டால் கூட,

"நான் வரமாட்டேன்..." என்பார்.

ஒரு நாள் அவருடைய கன்றுக்குட்டி கொட்டகையிலிருந்து கட்டை அவிழ்த்துக் கொண்டு கோவிலுக்குள் போய்விட்டது! இவரும் அதைத் துரத்திக் கொண்டு கோவிலுக்குப் போகிறார்...

அது என்ன பண்ணியது என்றால், கிடுகிடு வென்று கர்பகிரஹத்துக்குப் பின்னாலே பிராகாரத்திலே ஓடிப் போய் விட்டது. இவரும் துரத்திக் கொண்டு ஓடினார். ஓடினால், அது முன்னாலே, துவஜஸ்தம்பம் பக்கம் வந்து விட்டது! மறுபடியும் இந்தப் பக்கம் வந்தார் அவர். அவர் சுற்றி வருவதற்குள் இது பின்னாலே போய்விட்டது! இப்படியே அவருக்குப் போக்குக் காட்டி எட்டு தடவை சுத்தி வந்தது. அவரும் அதன் பின்னாலேயே ஓடிப் போய் பிடித்து, அறுந்து வந்த கயிறாலேயே அதை அடித்து, கொட்டகையிலே கொண்டு போய்க் கட்டிவிட்டு வாசல் திண்ணையிலே பழைபடி வந்து உட்கார்ந்து விட்டார்.

உள்ளே, கர்பகிரஹத்திலே உட்கார்ந்திருக்கிற பகவான் யோசனை பண்ணினார்...

'அடடா! மஹா பாவி! ஒரு நாளும் அவன் இங்கே வந்ததில்லையே... பிரதக்ஷிணம் பண்ணினதில்லையே. இன்றைக்கு வந்து எட்டு பிரதக்ஷிணம் பண்ணிவிட்டுப் போய்விட்டானே! இவனுக்கு என்ன கொடுக்கலாம்...' என்று பகவானுக்கு யோசனை வந்துவிட்டது!

போனவன் என்னவோ கன்றுக்குட்டியைப் பிடிக்கத்தான் போனான். பிரார்த்தனை பண்ணுவதற்காக அல்ல.. ஆனால் பரமாத்மா அவன் பிரதக்ஷிணம் பண்ணியதாகவே கொண்டு பூரிப்பை அடைகிறான்.

இன்னொருத்தர் இருக்கிறார்... அவர் கோவிலுக்குப் போவதே பிரசாதத்துக்காகத் தான். உள்ளே கர்பகிரஹத்து பகவானிடமோ, துவார பாலகர்களிடமோ அவருக்குச் சம்பந்தமே கிடையாது. பிரசாதம் வரைக்கும்தான் சம்பந்தம்.

ஒரு நாள் தனுர் மாசம் இருபத்தேழாவது பாசுரத்துக்குரிய நாள். 'மூட நெய் பெய்து முழங்கை வழி வார' சர்க்கரைப் பொங்கலைப் பண்ணியிருக்கிறார்கள்.

ஒரு கரண்டிப் பொங்கலை எடுத்தால் அப்படியே பாபவிநாசம் அருவி கொட்டுகிற மாதிரி நெய் கொட்டுகிறது. பின்னாலே வருபவர்கள், இப்படிக் கொட்டுகிற நெய்யை வாங்கிக் கொள்ளும் அளவுக்குக் கொட்டுகிறது!


பகவானுக்கு இப்படி இப்படியெல்லாம் அமுது செய்விக்கணும் என்று சாஸ்திரமே சொல்கிறது. பிரசாதத்தை அவன் எதிரிலே வைத்துவிட்டுப் பார்த்துக் கொண்டேயிருக்கக் கூடாது. திருவாராதனம் பண்ணுகிறவர்களே கூட அதை அதிகமாய்ப் பார்க்கக் கூடாது... பகவான் நன்கு அமுது செய்தானா...? ஏன்? அவனுக்கு ஊட்டி விடுகிற மாதிரி பக்குவமாக சைகை காட்டி அதை நிவேதனம் பண்ண வேண்டும்.

அப்படி நாம் பண்ணுவதை அவன் சாப்பிட வேண்டுமென்பதில்லை. கடாட்சித்தாலே போதும். சர்வ அங்கங்களினாலும் அதை அவன் சுவீகரிப்பதாகிவிடும். நிவேதனம் ஆகி விட்டது என்று அர்த்தம்.

"நேற்றிரவு முன்னூறு ரூபாய் போச்சு ஸார்!"

"வேணும் உனக்கு. வாக்கப் கைதிகளுடன் உன்னை யார் ரம்மி ஆடச் சொன்னது?"

— உ. ராஜாஜி



தனுர் மாசத்தில் இப்படி நிவேதனம் பண்ணி விட்டுச் சாப்பிட்ட ஒருவர், அப்படி இப்படி பொங்கலைக் கிளறிப் பார்த்துவிட்டு, "நெய் போதாது. இன்னும் இரண்டு கரண்டி நெய் விடு..." என்று பத்னியைக் கேட்டாராம்! அவளும் கொண்டு வந்து விட, பக்கத்திலே கொஞ்சம் ஊறுகாய், கொஞ்சம் சர்க்கரை எல்லாம் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறார் இவர்.

இப்படிச் சாப்பிடக் கூடாது. இது பகவத் அபசாரம் என்கிறது சாஸ்திரம். பகவானுக்கு எப்படி அமுது செய்வித்தோமோ அதே போல் தான் நாமும் உண்ண வேண்டும். கூடுதலாய் நெய் குத்தி உண்ணும் சக்தி அவருக்கிருந்தால், அதை முதலிலேயே செய்திருக்கலாம் அல்லவா...!

பிரசாத வேட்டைக்காரரை அங்கேயே விட்டுவிட்டு பிரசாதத்தை எப்படிச் சாப்பிடணும்னு விவரிக்கப் போய்ட்டேன். அந்த பிரசாத வேட்டைக்காரரிடம் அடுத்த வாரம் திரும்புவோம்.

(தொடரும்)

நினைவின் ஆழங்களில்...

கார்த்திகா ராஜ்குமார்

நான் கே.கே.யின் வீட்டிற்குப் போன பொழுது அவன் இல்லை, என் எதிர்பார்ப்பின்படியே. கடந்த சந்திப்பிற்குப் பின் இருந்த தொடர்புகள் ஏதுமில்லாத மூன்று வருடங்களை உதைத்துத் தள்ளுகிற இனிய அதிர்ச்சியை அவன் வீட்டிலிருந்துதான் நான் அவனுக்குத் தர வேண்டுமென்று யோசித்திருந்தேன். அவன் யாரோ ஒரு 'X' ஐ எதிர்பார்த்துக் கொடுத்திருந்த சாவியை நான் வாங்கிக் கொண்டு... வீட்டிற்குள் ஒளிந்து கொண்டு, மாயமாய் எதிர்பாரா தருணத்தில் அவன் முன் குதித்து அசத்த வேண்டும் என்று நினைத்தேன். வார்ட்ரோபின் அருகில் உள்ள மறைவுப் பகுதியில் ஒளிந்து கொண்டு காத்திருந்தேன்.

“ஷனு... எனக்குத் தெரியுமே. காப்பி ரெடிதானே...” என்றபடி வந்தான் கே.கே. அதிர்ந்தேன். எனில்... ஷனு– அவன் மனைவி– உள்ளேதான் இருக்கிறாளோ? அதெப்படி? பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தேனே நான்?!

“ஷனு... காப்பி அட்டகாசம். இன்னைக்கு உன் ப்ரண்ட் ஜோதியைப் பார்த்தேன். ஆனா அவ என்னைக் கவனிக்கலை. யார் கூடவோ பேசிட்டு...”

கே... கே... பேசியபடி பாத்ரூமிற்கோ/பெட்ரூமிற்கோ போயிருக்க வேண்டும்.

குழப்பம் எனக்குள் சுழன்றது. தடுமாற்றங்கள் இணைவிட்டன. ஒரு வேளை ஷனு உள்ளேதான் இருக்கிறாளோ? இருப்பாளோ? ஆனால் எனக்கு நன்றாக நினைவிருந்தது. நானே தான் பூட்டைத் திறந்து... ஒருவேளை வார்ட்ரோப் அருகே ஒளிந்து கொண்டதும், வந்திருப்பாளோ... அதெப்படி? எந்தவித அரவமுமின்றி ஒரு ஆள் நுழைந்திருக்க முடியும்? அல்லது... வந்த சப்தம் கேட்காதபடி என் நினைவுகளில் நான் அசந்து விட்டேனோ? இன்னொரு பயமும் புகையாய் எழும்பிற்று. நான் இப்படி ஒளிந்திருப்பதை அவன் பார்த்தால் வருகிற தேவையற்ற பிரச்னைகள். கேள்விகளுக்கு என்ன பதில்கள் என்னிடமுண்டு?

எதையோ கே.கே. விவரித்தபடியே மறுபடி நான் ஒளிந்திருக்கிற முன் அறைக்கு வந்தான். அவனின் பேச்சுக்கள் தொடர்ந்து கொண்டிருக்க, அப்பொழுதுதான் சூழலின் இன்னொரு விசித்திரம் உறைத்தது. கே.கே.யின் இத்தனை பேச்சுக்களுக்குமே ஏன் ஷனு எதுவுமே சொல்லவில்லை... ஒருவேளை அவள் சொன்னவை ஏதும் எனக்குத்தான் காதில் விழவில்லையா? ஆனால்... இதெப்படி சாத்தியம்? ஒரு சமயம் 'ஷனு' மௌன விரதம் மாதிரி இருந்து... எழுதிக் காட்டிக் கொண்டிருக்கிறாளோ?

பேசியபடியே மறுபடி கே.கே. எதற்கோ உள்ளே போக, மறைவிடத்திலிருந்து சட்டென்று வெளியில் வந்தேன். கதவருகே பாய்ந்து, கதவைத் திறந்து விட்டு, இரண்டு முறை தட்டிவிட்டு நின்றேன். உள்ளிருந்து எட்டிப் பார்த்த கே.கே., “ஏய்... நீயா...” என்று ஓடி வந்து கட்டிக் கொண்டான்.

“எப்ப வந்தே...? என்ன விஷயம்? எத்தனை நாளாச்சுடா உன்னைப் பார்த்து” என்றான். தயக்கத்துடன் கேட்டேன். “ஷனு எப்படி இருக்கா?”

“பிரம்மாதமா...”

“ஊர்லயா...”

“இல்லையே. இங்கேதான்டா.”

எனக்கு வியர்த்தது. குழப்பம் எனக்குள் தொடர்ந்தது.

அப்படியானால்... அவள் எங்கே...?? கே.கே. என்னைக் கேள்விகளால் குடைந்து கொண்டிருக்க, வாய் அனிச்சையாக அவனுக்கான பதில்களை உதிர்த்துக் கொண்டிருக்க, மனம் முழுக்கத் தடுமாற்றங்கள்.

அவனுடன் பேசிக் கொண்டே பெட்ரூமிற்குப் போனோம். அவன் கிச்சனுக்குப் போன பிறகு, எதற்கோ நிமிர்ந்த எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. 'ஷனு'வின் படத்திற்கு மாலை போட்டு...? அப்படியானால்...? அவள்...? அவள்...?! வியர்த்தது மீண்டும். 'ஷனு' ஊர்லயா என்றதற்கு இல்லையே இங்கேயேதான்டா என்றானே... நான் ஒளிந்திருந்தபொழுது... ஷனுவிடம் பேசினவைகளை நான் கேட்டதெல்லாம்?! என்ன? என்ன? ஒருவேளை ஷனுவின் போட்டோவில் இருக்கிற மாலை தற்செயலோ... இல்லை தவறோ?

இன்னொரு விஷயத்தையும் அப்பொழுது தான் கவனித்தேன். ஹேங்கரில் தொங்கும் 'ஷனு'வின் புடவை. மற்றும் தொங்கிக் கொண்டிருக்கும், நைட்டி. சில ப்ளவுஸ்கள்.





கழற்றி விடப்பட்ட செருப்புகள்.

ஏதோ சற்று முன்புதான் 'ஷனு' இங்கிருந்துவிட்டுப் போனதைப் போலத் தோற்றமளித்தன. எனில்.. ஷனுவின் போட்டோவிலிருக்கிற மாலை? தலைசுற்றுவதைப் போலிருக்க, கட்டிலில் வந்து உட்கார்ந்தேன். மெல்ல ஆசுவாசப்படுத்திக் கொண்டு, கவனத்தைத் திசை திருப்ப, அருகிலிருந்த புக்ஷெல்ப்பின் புத்தகம் ஒன்றை எடுத்துப் புரட்டிக் கொண்டிருக்கும்பொழுது, ஏதோ நழுவ, எடுத்துப் பார்த்தேன். 'ஷனு'வின் 40-வது நாள் நினைவு அட்டை.

"டேய் வாயேன்... உள்ளேயே படுத்திட்டயா? சாப்பிடலாம் வா" என்று கத்தினான் கே.கே. டைனிங் டேபிளில் எனக்காகக் காத்திருந்தான்.

"ஷனு... யார் வந்திருக்கான் பார்த்தியா? நல்லவேளை இவன் வந்ததால் உனக்குப் பிரச்னை இல்லை. ப்ரெட், பட்டர், ஜாம் இருந்தா இவனுக்குப் போதும். ஆனா ஷனு இவனுக்கு ப்ரூ மட்டும் போட்டுக் குடுத்திடணும். சரியா?"

நிலைமையின் குரூரம் என்னைப் பலமாய்த் தாக்கிற்று. 'ஷனு' இல்லைதான். இல்லவே இல்லைதான். ஆனால் 'ஷனு' இந்த உலகத்திலேயே தற்போது இல்லை என்பது கே.கே.யின் நினைவில் பதியவில்லையோ. நினைவின் ஆழங்களில் அவளின் இருப்பு இன்னும் துளிர்த்துக் கொண்டு, அவன் அவனோடு இப்போதுமிருக்கிற பிரமையை உருவாக்கி விட்டிருக்கிறதோ. இல்லை... 'ஷனு'வின் இழப்பு விளைவித்த அதிர்ச்சி ஒரு மனநோயாளி போல இவனை மாற்றி விட்டிருக்குமோ. எதுவாக இருந்தாலும் நிலைமை மிகக் கொடுமையாக, மனம் முழுக்க பதற்றத்தையும், கலக்கத்தையும் அப்புகிற விதமாய் எனக்குத் தெரிந்தது. தன் மனைவி மரித்துப் போனது கூடத் தெரியாமல் இவன் பேசிக் கொண்டும், நடமாடிக் கொண்டும், அந்த நிஜம் தன்னைத் தாக்கி விடாதபடி கவசமணிந்து கொண்டு விட்டதைப் போல... ஆனால்... இது எத்தனை நாட்களுக்கு? பிரமையின் திரைகிழிந்து உண்மையை உணரும்பொழுது... அப்பொழுது இவனால் தாங்க முடியுமோ.. ஆனால்... அதைவிட இப்போதே இவனை நிஜத்துக்குக் கொண்டு வருவது நல்லது என்று பட்டது.

"டேய் சாப்பிடாம என்ன யோசனை" என்று அருகில் வந்த கே.கே.யை எழுந்து அணைத்துக் கொண்டேன். "டேய் கே.கே. இப்படி இருக்காதே. உனக்கு என்ன ஆச்சு. இங்கே வா."

தரதரவென்று அவனை இழுத்துப் போய் ஷனுவின் போட்டோவைக் காட்டி, "இதுக்கு என்னடா அர்த்தம்? சொல்லு..."

விம்மல்களுடன் கத்தினேன். என்னையே பார்த்தவன் மெல்ல சுதாரித்துக் கொண்டான்.

"ஸாரிடா. பூ வாடி இருக்குல்ல. போன வாரம் போட்டது. இன்னைக்கே நான் மாத்திடறேன்" என்றான் குரல் கம்ம.

நான் கே.கே.யையே வெறித்தபடி நின்றிருந்தேன். ■



கட்டடத்தோடு நின்று விடலாமா ஒரு கனவு..?

கவிஞர் வைரமுத்து தம் சொந்த ஊரில் நூலகக் கட்டடம் அமைக்க ஒரு லட்சம் ரூபாயைக் கலைஞரிடம் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார். அதற்குக் கவியரசு கண்ணதாசன் பெயரைச் சூட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அந்த நூலகம் எப்படி இயங்கி வருகிறது என்று பார்க்கப் போனால், அதிர்ச்சி!

ஏறிட்டுப் பார்த்தால் தூசி அப்பிய அறிவிப்புப் பலகை இருந்தது.

''என்னாங்க, வைரமுத்து இதுக்கா ஒரு லட்சம்...'' என்று வாயெடுக்கும்போதே சற்று தள்ளி இருக்கும் புதிய கட்டடத்தைக் காட்டினார் அருகேயிருந்த தையல் கடைக்காரர்.

பழைய கட்டடமும் புதிய கட்டடமும் பூட்டி இருந்தன. நூலகர் எப்போ வருவார் என்று விசாரித்ததும், ''இன்னைக்கி வெள்ளிக் கிழமைங்க'' என்ற பதில்.

"ஐயா எங்க ஊருல சனிக்கிழமைன்னு சொன்னாங்க" என்றோம்.

''லைப்ரேரியன் வராத நாளு பூராம் நூலகத்துக்கு வெள்ளிக்கிழமைதாங்க!'' பீடிப் புகையோடு சொன்னார் டெய்லரின் தோஸ்த்!

"வாரத்தில ரெண்டு நாளுதாங்க வருவாரு. அது எந்தெந்த நாள்னு எங்களுக்கே தெரியாது. அந்தா, அந்த ஜன்னல் தொறந்திருந்தா வந்திருக்கார்னு அர்த்தம்."

தற்போது பழைய நூலகம்தான் இயக்கத்தில் (வாடகை கட்டடம்) உள்ளது. வைரமுத்து எப்போது வந்தாலும் இந்த நூலகத்திற்கு வந்து விட்டுத்தான் போவார் என்றார்கள்.

பூட்டிக் கிடக்கும் புதிய கட்டடத்தை நெருங்கும்போது அவசர அவசரமாக களத்தில் நடந்து போன பெரியவர் இந்திய மனோபாவத்தை வெளிப்படுத்துவார் என்று நினைக்கவில்லை. அந்த அவலத்தைப் பார்த்து நமக்கு ஏற்பட்ட வெட்கத்தில் அவருக்கு ரவையளவு கூட இல்லை!

நூலகக் கட்டட காண்ட்ராக்டர் பட்டன் என்பவர் இருந்தார். (பொத்தான் என்றொரு பெயரா? என்றதும் அது 'சாமி பேருங்க' என்றார்.)

"இந்த மாதிரி அறிவுபூர்வமான விஷயத்துக்குத்தாங்க கவிஞர் உதவுவாரு" – பட்டன் அடித்துச் சொன்னார்.

நூலகத்தில் லீவ்போஸ்ட் பார்த்த முருகனைச் சந்தித்த போது, "நூலகர் வாரத்துக்கு ரெண்டு நாள் வர்றது உண்மை தாங்க. ஆனா அவரு ஜெயமங்களம், தாமரைக்குளம்ன்னு ரெண்டு ஊர்லயும் பார்த்துக்கறாரு. ஒவ்வொரு ஊருக்கும் ரெண்டு ரெண்டு நாள் போயிட்டு சுழற்சி முறையில வர்றாரு. கவர்மண்டு, வேக்கன்சிய நிரப்பாம இருக்குங்க; நூலகர் மேல குத்தமில்லீங்க" என்றார்.

கவியரசு கண்ணதாசன் நினைவு நூலகம் என்று இன்னும் பெயர் மாற்றம் பெறவில்லை. இரவு நேரங்களில் புதிய நூலகக் கட்டடம் முன் ஓடும் சாக்கடையில்தான் காத்தோட்டமாக மலஜலம் கழிக்கின்றனர் சுற்றுவட்டார மக்கள்.

நூலகத்தை வேறு இடத்தில் கட்டியிருக்கக் கூடாதா என்று நூலகப் புரவலர் செல்வராஜை அணுகினோம்.

"நூலகத்துக்கு இடம்கொடுக்க தனிநபர் யாரும் முன் வரல்லீங்க. ஊரை ஒட்டிப் புறம்போக்கு நிலமும் இல்லை. சுமார் முப்பது புரவலரை சேர்த்து நூலகம் கொண்டு வர்றதுக்கு கடந்த அஞ்சு வருசமா அலைஞ்சோம். நூலகம் ஊருக்கு மத்தியில இருந்தாத்தானே பயன்பாடு நல்லபடியா இருக்குமுன்னு ஆசைப்பட்டாலும், இடமில்லை! அதனால கிழக்கே, ஊர்க் கடைசியில் ஒரு இடம் பார்த்தோம். பொதுப் பணித்துறை, தலைமை நூலக அலுவலகம்ன்னு அலைஞ்சு அலாட்மெண்ட் வாங்கி வந்தா ஜெயமங்களத்துக்காரங்க (பக்கத்து ஊர்) தட்டிட்டுப் போயிட்டாங்க" என்றார் செல்வராஜ்.

டாக்டர் செல்வராஜின் ஆதங்கம் : "புறம்போக்கு நிலத்தைச் சுற்றி அசிங்கப்படுத்துறவங்களுக்கு காவலிருக்க முடியுங்களா?" என்பதுதான்.

புதிய நூலகம் இன்னும் திறக்காமல் இருக்க என்ன காரணம் என்று வைரமுத்துவிடம் கேட்டோம்.

"இன்னும் கட்டட வேலை இருக்கிறது. ஏற்கெனவே ஏழு லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கட்டத் தொடங்கப் பட்டது. நான் கலைஞரிடம் ஒரு லட்சத்து ஐயாயிரம் கொடுத்து பெரிய நூலகமாக ஆக்க வேண்டும் என்ற எனது ஆசையைக் கூறினேன். முதலமைச்சர் பொறுப்பேற்றதும் மேலும் நாலு லட்ச ரூபாய் உடனே வடுகபட்டிக்கு ஒதுக்கினார். முதல் மாடி கட்ட ஏற்பாடாகி விட்டது. தமிழ்நாட்டிலேயே முதன் முதல் ஒரு பேரூராட்சியில் அமைகிற மிகப் பெரிய கட்டடம் இதுதான். இதுமாதிரி தமிழ்நாட்டில் எல்லா பேரூராட்சிகளிலும் நூலகக் கட்டடம் அமைய வேண்டும் என்பது எனது விருப்பம். இன்னும் கண்ணதாசன் நூலகம் என்று பெயர் மாற்றம் செய்யவில்லை. மாடி முடிவடைந்ததும் கலைஞரை அழைத்து திறப்பு விழா வைக்க வேண்டும்."

• வைரமுத்து



• செல்வராஜ்



"உங்க ஊருக்குப் புதிய நூலகக் கட்டடம் கொண்டுவர பலவித அலைச்சல் பட்டதாக டாக்டர் செல்வராஜ் சொன்னார். நீங்கள் ஜெயலலிதாவை அணுகி, உதவி கேட்டீர்களா?"

"செல்வராஜ் ஓடி ஓடி உழைத்தார். நான் இந்தக் கட்டடத்துக்காக மட்டுமில்லை; எப்போதுமே ஜெயலலிதாவிடம் போய் நின்றதில்லை. அவர் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது கூட நான் நேராகத் தலைமை நூலகரைப் பார்த்துத்தான் பேசினேன். காரியம் கைகூடியது" என்றார்.

• பழைய நூலகம்



தமது சொந்த ஊரில் பெரிய நூலகம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பது வைரமுத்துவின் ஆசை. ஆனால் வடுகப்பட்டி மட்டுமின்றி அண்டை ஊர்களிலுள்ள மக்களும் அந்த ஆசையைப் பகிர்ந்து கொண்டு நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்தினால்தான் கவிஞரின் கனவு முழுமை பெறும். ■

— சு. வேணுகோபால்

படங்கள்: ப்ரேம்

ஊஞ்சலாடும் உறவுகள்

அண்ணா காலை ரயிலில் வருகிற ஒவ்வொரு நாளிலும் இப்படித்தான் ஒரு பரபரப்பும், தவிப்பும் அம்மாவைத் தொற்றிக் கொள்கிறது. கவலைப்படவென்றே இருக்கும் 'அம்மா'க்கள். அண்ணாவிற்கு ஆப்பம் பிடிக்கும் என்பதற்காக ஆப்பத்திலிருந்து அவனுக்குப் பிடித்த அனைத்தும் தயார் செய்தாயிற்று. அப்பாவை அரை மணி நேரத்திற்கு முன்பாக ஸ்டேஷனுக்கு அனுப்பி விட்டாள். இதற்கும் அண்ணா ஒரு நிறுவனத்தில் எஞ்ஜினீயராகப் போன வருடம்தான் சேர்ந்திருந்தான். நேரமாக ஆக அவள் முகத்தில் தெரிகிற பதற்றம் அவள் மேல் ஒரு பரிதாபத்தையே ஏற்படுத்தியது.

"டிரெயின் லேட் ம்மா" என்றபடி அப்பாவுடன் வந்தான் அண்ணா. "என்ன... அதுக்குள்ள நீ பயந்துட்டயாக்கும். உன்னைத் திருத்தவே முடியாது போ" என்று சிரித்தபடி உள்ளே போனார் அப்பா. அண்ணாவையே பார்த்துக் கொண்டு நின்றாள் அம்மா.

"இளைச்சுட்ட கண்ணா நீ" என்றாள் குரல் கம்ம.

"ரெண்டு மாசத்துக்கு முன்னாடி வந்தப்பவும் இதையேதானம்மா நீ சொன்னே. நான் நல்லாருக்கேன். இவளைப் பாரேன். குண்டாயிட்டாளே. ஏய் பிந்து, காப்பி கொண்டா" என்றபடி சோபாவில் சரிந்து கொண்டான். எங்கள் காலேஜ் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தவன், அம்மா எதுவுமே பேசாமல் நின்றிருந்ததை மாற்ற நினைத்தவனைப் போல,

"என்னைப் பத்திக் கவலையை வுடும்மா. வேற என்ன விசேஷம்மா" என்றான்.

"நீ ரொம்பவும் இளைச்சு, கறுத்துப் போயிட்டடா கண்ணா" அம்மா மீண்டும் கவலைத் தொனி மாறாமல் சொன்னாள்.

"ச்சே! இதே பேச்சுத்தானா? ஆமாம் கரிஞ்சு கரிக்கட்டையா மெலிஞ்சுட்டேன். வேற பேச்சில்லையா உனக்கு?" எரிச்சல்மிகு வார்த்தைகளை வீசி எறிந்து விட்டு எழுந்து போனான். அம்மாவுக்கு முகம் வாடிப் போயிற்று. அண்ணா சற்று வேறு தொனியில், அம்மாவின் கவலையை, அக்கறையைப் புரிந்து கொண்ட தொனியில் நிதானமாகப் பேசி இருந்திருக்கலாம் என்று தோணிற்று எனக்கு. ஆனாலும் இந்த அம்மாவுக்கு வேண்டும்தான். இது தேவையா? இப்படி வாங்கிக் கட்டிக் கொள்வது?

வெடிப்பு விட்டு, பூவாய் மலர்ந்திருந்த ஆப்பங்களை அடுக்கி வைத்திருந்தாள் அம்மா. அண்ணா இரண்டுக்கு மேல் எடுத்துக் கொள்ளவில்லை. "கண்ணா உனக்காகத்தான்டா செஞ்சேன். இன்னும் ரெண்டு போட்டுக்கயேன்" என்றாள் கெஞ்சலுடன் அம்மா.



"வேண்டாம். நேத்து ராத்திரி ஹோட்டல்ல சாப்பிட்டதில வயிறே சரியில்லை. பசியில்லை. என்ன பண்ணச் சொல்றே" என்றான் வறண்ட குரலில்.

"அப்ப இக்கா பூஸ்ட்டாவது கலக்கித் தரட்டுமா?"

"ஸ்ச்சி. வயிறே சரியில்லைங்கறேன். என்னம்மா நீ ச்சே."

"இத பாரு. அவனுக்குத் தேவைன்னா அவன் சாப்பிட்டுக்குவான். கொஞ்சம் ஏமாந்தா சின்ன புள்ளையாட்டம் புடிச்சு ஊட்டி விட்டுடுவ போலிருக்கு. விட்டுடேன் அவனை" என்றார் எதற்கும், எப்போதும் கவலையற்று இருக்கிற அப்பா, கிண்டலுடன்.

இருவரும் எழுந்து போன பின்பும் கூட, தட்டிலிருந்த ஆப்பங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா. அன்புமிக்க அசட்டு அம்மா. இவள் ஏன் இப்படி இருக்கிறாள்? இருக்க வேண்டும்? நான் அவளருகில் சென்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டேன்.

"அம்மா நான் சாப்பிடட்டுமா. எனக்குப் போடு. எத்தனை அழகா சுட்டிருக்கே நீ. உன் கை ருசி யாருக்கு வரும் மா."

என்னைத் திரும்பிப் பார்த்தாள் அம்மா. கண்களில் நீர் அரும்பினது நான் சொன்னதாலா, இல்லை... அண்ணா எழுந்து போய் விட்டதாலா என்று தெரியவில்லை.

"அம்மா இங்கே வாயேன். பார் உனக்குன்னு வாங்கினேன். உனக்குப் பிடிக்கும்னு நம்பறேன்."



அவசரமாய் வந்த அம்மாவின் கைகளில் கொடுத்தான் அண்ணா. கருநீல கார்டன் சில்க் புடைவையில் வெளிர் நீலப் பூக்கள் - அம்மாவின் கண்களில் சந்தோஷமாய் மின்னிற்று. அந்தப் புடைவையை எடுத்துக் கைகளில் வைத்துக் கொண்டு, அப்படி இப்படியுமாகப் பார்த்தாள். அது அவள் மனத்தின் நினைவுப் பெட்டகங்களிருந்து நிறைய நினைவுகளை தட்டி எழுப்பி இருக்க வேண்டும். "இந்தப் புடைவையை பார்க்கறப்ப கண்ணா..." என்று வயிப்புடன் ஆரம்பித்தாள். ஆழ்மனத்தின் ரகசியத்தை மிகவும் விருப்பத்தோடு, தவிப்போடு பகிர்ந்து கொள்வதைப் போலிருந்தது அவள் ஆரம்பித்த தோரணை. அதற்குள் போன் சிணுங்கிற்று. சப்பணம் போட்டு உட்கார்ந்து கொண்டு ரீசிவரை எடுத்தான் அண்ணா. ஏதோ மாயம் நிகழ்ந்து ஃபோன் பேசவே விதிக்கப்பட்டு விட்டதைப் போல, ரீசிவர் அவன் கைகளிலேயே ஒட்டிக் கொண்டு விட்டதைப் போல அண்ணா இருந்தான். அண்ணா பேசி முடிக்கக் காத்திருந்து, சலித்து என்ன செய்வதென்று புரியாத நிலைக்குப் போய் விட்ட அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அண்ணா நிலையில் நான் இருந்திருந்தால், ஃபோனை வைத்து, சற்று இடைவெளி கொடுத்து, அம்மா பேச வந்ததை பேசச் சொல்லி இருப்பேன். ஆனால் இந்த அசட்டு அண்ணா இப்படி. 'அம்மா, என்ன ரகசியம், அனுபவம் பகிர்ந்து கொள்ள வந்தாய். என்னிடம் சொல்லேன்' என்று கேட்கத் தோணிற்று. ஆனால் அது அவள் மனம் கூணங்கினதை, காயமடைந்ததை நான் கண்டுகொண்டதின் குற்ற உணர்வை, உறுத்தலை அவளுக்கு ஏற்படுத்தக்கூடும் என்று தோண, மௌனமாய் வெளியில் வந்தேன், மொட்டை மாடிக்கு.

நான் மீண்டும் திரும்பி வந்தபொழுதே, அம்மா இன்னும் கையில் புடைவையுடனேயே சோபாவில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகமே, அண்ணா எதுவுமே பேசவில்லை என்று காட்டிற்று.

"என்ன அண்ணா கிளம்பிட்டே. இரேன் கொஞ்சம் பேசிட்டு அப்புறமா போயேன்"

கார்த்திகா ராஜ்குமார்

என்றேன். 'அம்மாவிடம் பாதி பேச்சிலயே கிளம்புகிறாயே' என்பதை மறைமுகமாய் உணர்த்துகிற மாதிரி. ஆனால் அண்ணாவிற்கு எதுவும் உறைக்கவில்லை.

"ஏய், தலைக்கு மேலே வேலை இருக்கு. இருக்கிற ஒரு நாள்ல இந்த ஆளுங்களைப் பார்த்துப் பேசலைன்னா போச்சு. நாம வந்து சாயங்காலமா பேசிக்குவோம். சரியா. அம்மா மத்தியானம் எனக்காகக் காத்திருக்க வேண்டாம். போன இடத்தில் எப்படின்னு சொல்ல முடியாது."

அம்மாவின் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் வெளியில் கிளம்பினான். அம்மாவின் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தேன், தயக்கங்களுடன்.

சாயங்காலம் டியூசன் முடிந்து வீட்டிற்குள் வந்ததுமே, சூழலின் இறுக்கம் புரிந்தது. அண்ணா கையைக் கட்டிக் கொண்டு எரிச்சலான முகத்துடன் டீ.வி. பார்த்துக் கொண்டிருக்க – இந்தப் பக்கம் ஜன்னல் வழி பார்த்திருக்கும் அம்மா.

"என்ன ஆச்சும்மா. அண்ணா..., நீயாவது சொல்லேன்."

"ஸ்ச்ச். நான் என்ன சொல்றது? மத்தியானம் நான் சாப்பிடலைன்னு அம்மாவுக்குக் கோபம். லேட்டா வந்தேன்னு கோபம். இன்னும் வேற எது எதுக்கோ கோபம், கோபம். ஆனா எதுன்னாலும் நாலு வார்த்தை கத்திட்டு திட்டி வுட்டுட்டுப் போயிடலாமில்லையா. அதை வுட்டுட்டு இப்படி அழுது.. இப்படிக் கண்ணீரைப் பார்த்தாலே எனக்கு டென்ஷன் ஆயிடுது பிந்து. மூடு அவுட் ஆயிடுது. நாளைக்கே நான் கிளம்பணும் வேற. இருக்கிற ஒரு நாள்ல சந்தோஷமா இருக்கிறத வுட்டுட்டு..."

"என்னம்மா நீ. ஏன் இப்படி இருக்கே..." என்றேன். சரேலெனத் திரும்பினாள் அம்மா. இரு கன்னங்களிலும் வரிசையாய் இறங்குகிற கண்ணீர்த் துளிகள். லேசாக நடுங்குகிற உதடுகள்.

அடுத்த
ஒன், டூ, த்ரீ
கதைகள் எழுதுபவர்
சுப்ர மணியன்
ரவிச்சந்திரன்

"பார்த்தாயா... பார்த்தாயா... இதான்... இதான். எதுக்கு அழணும். சொல்லு பிந்து..." ஆத்திரமாய்க் கத்தி விட்டு, எழுந்து ஓடினான் அண்ணா. நான் போய் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டேன். "ஏம்மா, அழறே? அழாதம்மா. இதென்ன இது..." வேறு என்ன சொல்வதென்று புரியவில்லை அக்கணம்.

"நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி ஆங்காரமா எந்திரிச்சு ஓடறான் அவன்? எதுக்கு இப்படி ஆத்திரம்? கோபம் எல்லாம்? குதிக்கணும் இப்படி. அவனைத் திட்டினா, என் மனசில சந்தோஷமா வரும்? மனசில கஷ்டம்னா அழுகை வராமயா இருக்கும்? நான் பாட்டுக்கு அழுது தீர்த்துக்கறேன். இவனுக்கென்ன. பிடிக்கலைன்னா, இன்னும் ரெண்டு ப்ரண்ட்ஸ் வீட்டுக்குப் போகட்டும். அவன் மேலே தப்பு இல்லை. தப்பெல்லாம் என் மேலேதான்..." என்றாள் அம்மா அழுகிற குரலில்.

இருவருமே பரஸ்பரம் பாசமும், பிரியமும் வைத்திருந்துமே இதென்ன இப்படி? மனதைக் கீறிக் கொள்கிற விளையாட்டைப் போல? ஒருவரை ஒருவர் அன்பின் பெயரால் காயப்படுத்துகிற கீறல்கள். காரணங்களைப் புரிந்து கொள்ளாமலே எல்லாம் நிகழ்கிறதோ. அம்மா அழுதால் தாங்காமல் துடிக்கிற அண்ணா, அந்த அழுகையை வராமலே நிறுத்தி வைக்கத் தன்னால் முடியும் என்பதையே உணர்ந்திராமல், ஆனால் அழுததும் துடிக்கிற அண்ணா. அவன் கோபத்துக்கே தன் அழுகைதான் காரணம் என்று புரியாத அம்மா. நிலைமைகளை முற்றும் மாற்றி விட்டிருக்கத் தன்னால் முடியும் என்பதை அறிந்து கொள்ளாத அம்மா... விளைவு பரஸ்பரம் காயங்கள், கீறல்கள்...

"என்ன மறுபடி.... தாய், மகன் டிஷ்யூம் டிஷ்யூம் தீரலையோ. அப்பாடி. ரெண்டு பேரும் அழுது, சண்டை போட்டு ஜாலி பண்ணீங்கப்பா. சூப்பர் சென்டிமெண்ட் ட்ராமா. அழுகறது உங்கம்மாவோட பேவரிட் பொழுதுபோக்கு போல... ம்ம்?" என்றார் அங்கு வந்த அப்பா, சிரிப்புடன்.

அன்றிரவு. எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தபொழுது, பகலில் நடந்தவை யாவும், சூரிய அஸ்தமனத்தோடு மறைந்து விட்டதைப் போல அண்ணா இருக்க, அம்மாவும் சகலத்தையும் மறந்து விட்டவளைப் போல இருக்க... எனக்குத்தான் திகைப்பான, ஆனால் சந்தோஷமான ஆச்சர்யம். நான் என்னவெல்லாம் யோசித்திருந்தேன்! அப்பா சொன்னது நிஜமோ என்று கூட இப்போது தோணுகிறது. ■



பா. ராகவன்

தாடி வைத்த கிருஷ்ண பரமாத்மா எதிரே நின்று கொண்டிருந்தார். முகத்தில் மாறாத மந்தகாச முறுவல். சங்கு, சக்கரத்துக்குப் பதிலாகக் கையில் காப்பி டபரா, தம்ளர். மேலும், எல்லாம் தெரிந்த பாவம்.

ஸ்டீபன். அவன் ஏன் தனக்குக் கிருஷ்ணர் போலத் தோன்ற வேண்டும் என்று ஹரி யோசித்தான். நரகாசுரனாகத் தோன்றினாலாவது ஒரு லாஜிக் உண்டு; வில்லன். நகங்களால் கிழித்துப் பிளந்து வீசப்பட வேண்டிய இரணியகசிபுவாகவும் இருக்கலாம். ஆனால் கடவுளே, மனங்களைப் பிளந்து, உள்ளிருப்பதை உடைத்துப் பார்க்கிற வித்தகத்தை ஏன் மனிதர்களுக்கு முழுமையாகத் தராமல் போனாய்? இவன் விழியோரக் குறுகுறுப்பில் எனக்கு உணர்த்த நினைப்பது என்ன? 'நீ போட்டோவை எடுத்ததை நான் பார்த்து விட்டேன்; ஆனாலும் காட்டிக் கொள்ளவில்லை, பார்!' என்பதா? என் தவிப்பைத் துளித் துளியாக ரசித்து விழுங்குகிற ராட்சஸப் பசியா? அல்லது இவன் உத்தமன்தானா?

தான் எதையும் புரிந்து கொள்ள லாயக்கற்றவனாக ஆகிக் கொண்டிருப்பதாக அவன் நினைத்தான்.

''இந்தா ஹரி. காப்பி சாப்பிடு. சுமாராத்தான் இருக்கும். சமையலெல்லாம் பண்ணிடறேன். ஆனால், இந்தக் காப்பி மட்டும்தான் எப்பவும் கழுதீராட்டம் போயிடறது. சர்க்கரை, பால், டிக்காஷன் இணைப்பில் விதவிதமா பெர்முடேஷன் காம்பினேஷன் பண்ணிப் பார்த்தாச்சு, 'மகனே, சரியா வருவோ'ங்குது!''

ஹரி, தருணம் கருதிக் கொஞ்சம் புன்னகை செய்தான்.

''ஏன், உங்கம்மா செய்யறது இல்லையா?''

''வேறு யார்? அவங்கதான். ஆனால் வயசாயிடுச்சி இல்லையா? பெரும்பாலும் முடியறது இல்லை. சமையலுக்கு ஆள் வெச்சுக்கலாம்னா, ஒத்துக்க மாட்டேங்கறாங்க. என்னால முடியாதான்னு வீண் வீராப்பு. இதெல்லாம் எதுக்குன்னு நினைக்கறே....?''

ரகசியமாகக் கண் அடித்து, குரலைக் குறைத்து மேலும் சொன்னான்:

''இப்படியெல்லாம் கஷ்டப்படறதைக் கொஞ்சம் போல்டு லெட்டரில் காண்பிச்சால், இரக்கப்பட்டு இன்னொரு கல்யாணம் பண்ணிப்பேன்னு ஒரு அல்ப ஆசை. வேறென்ன!''

''அதில் ஒண்ணும் தப்பில்லை ஸ்டீபன். நான் உங்கம்மா ஆசைப்படறதை மட்டும் சொல்லலை. நீ பண்ணிக்கலாம்ங்கறதுக்கும் சேர்த்துத்தான்.''

அசிரத்தையாகச் சூள் கொட்டுதல். அலட்சியமாகத் தலைக் கோதல். பிறகு கட்டில் மேல் சம்மணம் இட்டு உட்கார்ந்து, கன்னத்தில் கையூன்றியபடிக்கு ஹரியைப் பார்த்தான் ஸ்டீபன்.

''என் தனி விஷயங்களை உதட்டைத் தாண்டி வெளியே விடறதில் எனக்கு எப்பவும் விருப்பம் இல்லை ஹரி. சந்தோஷம் மாதிரியே சோகமும் புனிதமான ஒண்ணுன்னு நினைக்கறேன். என் புனிதங்கள் எனக்கு மட்டும்தான்!''

''இருக்கட்டும். நான் கேட்கலையே அதை? Why don't you marry again? இதான் விஷயம்.''

''அதைத்தான் நானும் சொல்றேன். புரிஞ்சுக்கோ ஹரி.''

''ஓ.கே. ஸ்கிப் இட்.''

''கோவிச்சுக்கறியா?''

''சேச்சே. அதெல்லாமில்லை.''

பற்றிக்கொண்டு வந்தது. எந்தக் கணத்தில் இவன் தன் எல்லைகளில் நுழைந்தான்? கல்யாணத்துக்கு முன்பே ரஞ்சனி அவ்வப்போது ஸ்டீபனைப் பற்றிச் சொல்லி இருக்கிறாள். தன் வருங்கால மனைவியின் யாரோ ஒரு நண்பன் என்கிற பிம்பத்துக்கு மேல் வேறெதுவும் தோன்றியதில்லை. வாழ்வின் எல்லாக் கூறுகளிலும் கலந்து எழுகிற ஒருவனாக இருப்பான் என்று நினைக்கவில்லை.



நிலா வேட்டை

எல்லாவற்றிலும்... எல்லாவற்றிலுமா?


ஸ்டீபனின் மனைவி ஏன் வலிந்து டைவர்ஸ் வாங்கிப் போனாள் என்று அவனுக்குத் தெரியாது. ஸ்டீபன் சொன்னதில்லை. பின்னர், ரஞ்சனியிடம் கேட்டபோது கூட, 'எனக்கும் அவன் சொல்லலை' என்றுதான் சொன்னாள்.

"அப்புறம் என்ன பிரமாத நட்பு?"

"நட்பு என்பது அந்தரங்கங்களை உடைத்துப் பார்ப்பது இல்லை ஹரி. அதை மதிக்கறதும் பாதுகாக்கறதும்தான்! அவனாகச் சொல்லி இருந்தால் கேட்டுக்கறதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் எதுவும் தெரிஞ்சி என்ன ஆகப் போறது? துக்கம் விசாரிக்கப் போற மாதிரிதான். கஷ்டத்தையே திரும்பத் திரும்ப எடுத்துக் காட்டி மேலும் கஷ்டப்படுத்தறது."

அதற்குப் பிறகு அவன் இதுபற்றிக் கேட்டதில்லை. ஆனால் ஸ்டீபன் போல் ஒரு புதிர் மூட்டையுடன் ஒரு குழந்தை பிறந்து வளர்வது வரைக்கும் வாழ்வது எத்தனை கஷ்டம் என்பது அவன் மனைவியைக் கேட்டால்தான் தெரியுமாயிருக்கும். மேலும் டிபிகல் தமிழ்ப் படத்துக்கான உணர்ச்சிமயமான கண்ணீர்க் கதை ஒன்றும் கிட்டக்கூடும்.

"ஹரி, ஏன் சைலண்ட் ஆயிட்டே? வலிக்கறாப்போல் ஏதாச்சும் சொல்லி இருந்தேன்னா ஸாரி!"



5

என்றான் ஸ்டீபன்.

"அதெல்லாம் இல்லை."

"பார் ஹரி. நீ இத்தனை அக்கறையாகக் கேட்பதால் ஒண்ணு சொல்றேன். கல்யாணம்ங்கற இன்ஸ்டிடியூஷன் மேல் எனக்கு நம்பிக்கை போயிடுச்சி. என் சுதந்தரங்களை அடகு வெச்சு, நான் இன்னொருத்தரை சந்தோஷப் படுத்தறதுன்னா, எனக்கு அப்படி ஒரு தியாகி பட்டம் வேணாம். இன்னொண்ணு, பெரும்பாலும் நாம் மனசில் வெச்சிட்டிருக்கற பெண் பிம்பம் வாழ்க்கையில் கிடைக்கறது இல்லை. நான் புறத்தோற்றத்தைச் சொல்லலை. கொஞ்சம் அழகு போதும். அப்புறம் கொஞ்சம் புத்திசாலித்தனம். சார்ந்திருக்கற மனப்பான்மை உதவாது. ரொம்ப முக்கியம், நைநைன்னு தொந்தரவு பண்ணாம இருக்கறது. சுயநலம்னு நினைச்சுக்காதே ஹரி. என் விருப்பங்கள் வினோதமானவை."

"பரவால்லை. இத்தனை பேசினியே, பெரிய விஷயம்!"

"ஆனால் இதெல்லாம் நடைமுறைக்கு உதவறதில்லை."

"அப்படி இல்லை. பெரும்பாலான ஆண்களுக்கு இதான் ஆசை."

"உனக்கு?"

"அஃப்கோர்ஸ்."

"ஆனால், எல்லாருக்கும் ரஞ்சனி மாதிரி அமைஞ்சுடறதில்லையே?"

சுரீலென்றது. எத்தனை துணிச்சலாக அள்ளி வீசி விட்டான்! கண் பிதுங்கும் அளவுக்குக் கழுத்தை நெரிக்க வேண்டும் போல் வெறி உண்டானது, அவனுக்கு. எத்தனை ஏக்கம் இருந்தால் இப்படிச் சொல்ல முடியும்! கடவுளே, என் மனைவியை அடுத்தவன் சிலாகிப்பதை என்னால் சகிக்க முடியவில்லை. மாறாக மூவரில் யாராவது ஒருவரைக் கொன்று விடு. அது நானாகவே இருந்தால் உனக்குக் கோடி நன்றி.

அவன் தகித்துக் கொண்டிருந்தான். நெஞ்சம் பொசுங்கும் வாடை உன் நாசிக்கு எட்டவில்லையா? என் உடைமைகள் ஒவ்வொன்றாகக் கனவு போய்க் கொண்டிருக்கின்றன. முதலில் நம்பிக்கை. பிறகு நிம்மதி. இப்போது ரஞ்சனி. என் சரிவுகளில் சாரம் கட்டி, மேலேறி, நீ பிடிக்கப் போகிற கோட்டைதான் என்ன? ரஞ்சனி? ஆ, அந்த போட்டோ! ஸ்டீபன், உன்னை முற்றிலும் வெறுக்கிறேன். தயவுசெய்து என் ஞாபகங்களிலிருந்து ஓடி விடு. தயவுசெய்து!

ஆனாலும் ஒரு வார்த்தை அது பற்றிக் கேட்டு, போட்டு உடைத்திருக்கலாம் என்று தோன்றியது, திரும்ப வரும்போது. எதையும் பேச விடாமல் பிடித்து இழுக்கிற லகான் எது என்றுதான் புரியவில்லை.

"என்ன, அந்தப் பத்திரிகையை வாங்க நாத்தாக்களெல்லாம் கூட்டமாப் போறாங்க?"

"இந்த இதழோடு 200 கிராம் மூக்குப் பொடி இலவசமாத் தர்றாங்களாம்!"

– எல். கோபாலகிருஷ்ணன்

"பை தி பை ஹரி, ஒரு நாலு நாள் ஃப்ரீ டைம் கிடைச்சிருக்கு. ரஞ்சனி சொன்னாளே, பெங்களூர் கண்காட்சி... அதுக்குக் கூடப் போகலாம்னு இருக்கேன். அவளுக்கும் சந்தோஷம். இல்லையா?" – கிளம்புகிற சமயம் மேலும் ஒரு கத்தி. அவளுக்கும் சந்தோஷம். அவளுக்கும். அவளுக்கும். அவளுக்கும்.

"ரியலி? வரேன்னா சொன்னான் அந்த ராஸ்கல்? அன்னிக்கு அப்படி அல்டிக்கிட்டான்?"

உற்சாகத்தில் ரஞ்சனி துள்ளிக் குதித்த போது, 'ஆமாம், அவளுக்கும் சந்தோஷம்தான், ஸ்டீபன்' என்று சொல்லிக் கொண்டான் ஹரி.

"நீங்களும் வரீங்களா?"

"படம் முடியணும் ரஞ்சனி. நிறைய வேலை இருக்கு. நாளைக்கு போஸ்ட் ப்ரொடக்ஷன் வேலைகள் ஆரம்பிக்கணும். இன்னொரு சமயம் வரேனே?"

சட்டென்று அவள் சரி என்று சொன்னதும் கஷ்டமாக இருந்தது. செல்ல அடம் பிடித்து வா என்று சிணுங்கினால் வராமலா போவேன்?

இரவு சாப்பிட்டதும் நாலு வரி ஹிண்டு படித்து விட்டுப் படுத்து விட்டான் ஹரி. உறக்கத்தை எட்டிப் பிடிக்கிற விளிம்புகளில், முதுகுக்குப் பின்னால் ரஞ்சனி உரசுவது தெரிந்தது. ஒரு காதுக்கு மட்டும் கேட்கிற குரலில், "தூங்கிட்டியாடா?"

அவன் உறைந்து போய்க் கிடந்தான்.

"முழிச்சுக்கோங்களேன். எத்தனை நாள் ஆச்சு?"

அவனுக்குத் திரும்பத் திரும்ப அந்த போட்டோ ஞாபகம்தான் வந்தது. எப்போது, எங்கே நடந்தது அது? இருவர் மட்டுமல்ல. படம் எடுத்த மூன்றாமவன் இருந்திருக்கிறான். அந்த முகம் தெரியாதவன் என்னவெல்லாம் நினைத்திருப்பான்?

ரஞ்சனி, அவனை இழுத்துத் திருப்பி, காதில் சப்தமாக முத்தம் பொழிந்தாள். 'லை' என்று அது ரீங்கரிக்கிற கக அவஸ்தையில் அவன் கண்விழித்துப் பார்த்தான்.



"என்ன அதுக்குள்ள தூக்கம்?"

"நீ எப்ப பெங்களூர் கிளம்பணும்?" என்று கேட்டான் ஹரி.

"நாளைக்கு சாயந்தரம்."

"திரும்பி வரது?"

"ப்ச்! ஒரு வாரம். கோவிச்சுக்க வேண்டாம். அப்புறம் ஒரு மூணு நாலு மாசம் எங்கியும் போக மாட்டேன்!"

மூணு, நாலு மாதம் வரை திரும்பி வராதேயேன் என்று அலற வேணும் போலிருந்தது அவனுக்கு.

எப்படி முடிகிறது இவளால்? நடந்தது அனைத்தையும் நசுக்கி எறிந்து விட்டு, அல்லது எதுவுமே நடக்காதது போல சுமுகம் காப்பது? கட்டிக் கொள்ளலாம். முத்தம் கொடுக்கலாம். அணைப்புச் சூட்டில் எல்லாம் மறந்து, எல்லைகள் இல்லாத வெளியில் மிதந்து பறக்கலாம். எல்லாமே சாத்தியம்தான். ஆனால் இடைவெளியில் ஒரு சொல் உதிர்ந்து விட்டால்...?

'இதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லை. ஆனால் என்ன பிரயோஜனம்?'

ரஞ்சனி. என்னைத் தன் மௌனத்தால் துளித் துளியாகக் கொல்லப் போகிற விஷக் கன்னி.

யாரோ செய்த தவத்தால் பொழுது புலர்ந்து அவன் ஏவி.எம்முக்குப் போனான். செக்யூரிட்டியை அடுத்த லெனின் அறையில் எடிட்டிங்.

வெளுத்த ஜீன்ஸும் கதர்ச் சட்டையும் வள்ளலார் பாடலுமாகக் கதம்ப கெட்டப்பில் காத்து இருந்தவர், "வாய்யா. ஸ்பீல் பெர்க்!" என்று உற்சாகமாக வரவேற்று உள்ளே கூப்பிட்டுப் போனார். இருட்டுப் புழுக்கமும் ஏஸிக் குளிரும் பிலிம் வாசனையுமாகப் பிற்பகல் வரை மார்க்கிங் முடித்து விட்டு வெளியே வந்தபோது, "பேட்ச் ஒர்க் மிச்சமிருந்ததை முடிச்சுட்டேன் ஹரி" என்றபடி ரங்கா எதிர்ப்பட்டான்.

"என்கிட்ட கூடச் சொல்லலை. திடீர்னு கிளம்பிப் போயிட்டே! காலைலதான் ப்ரொட்யூசர் சமாசாரம் சொன்னார். எப்ப வராளாம்?"

"அகிலாதானே, வரமாட்டாள்."

"ஐயோ, பின்னே?"

"அவள் இல்லாமலே முடிச்சுட வேண்டியதுதான். லேசா கிளைமாக்ஸை மாத்தி வெச்சு இருக்கேன். வா, பேசுவோம்" என்று காரில் ஏற்றிக் கொண்டான்.

ப்ரொடக்ஷன் ஆபீஸுக்கே போய் உட்கார்ந்து மாலை வரை கதை பேசினான். திருப்தி தரும் வரை மெருகேறினதும், "ரங்கா, கொஞ்சம் பர்ஸனலா பேசணும்டா" என்றான் ஹரி.

"சொல்லு."

எதை, எப்படிச் சொல்வது என்று குழப்பமாக இருந்தது. சொல்லலாமா? ஸ்டீபனைப் போலவே இவனும் மூன்றாம் மனிதன்தானா? இல்லை என்று தோன்றியது. தன் உணர்வுகளுக்கு ரஞ்சனியைக் காட்டிலும் மிக நெருக்கமானவன் இவன் என்று நினைத்தான். ஆகவே சொன்னான்.

ரஞ்சனி & ஸ்டீபனின் கன்யாகுமரி பயணம். ஸ்டீபன் வீட்டுக்கு இவன் போனது. கண்ணில் பட்டு, கழுத்தை நெரித்த போட்டோ. இரவுகளின் குரூரம். குழப்பப் பிரளயம்.

"ஹரி தப்பா எடுத்துக்காதே. நீ மனசில் என்னதான் நினைச்சுட்டிருக்கே? நேத்து வரைக்கும் இல்லாத சந்தேகம் இந்தப் பத்து நாளா ஏன் வந்ததுன்னு யோசிச்சுப் பார்த்தியா? பர்ட்டிகுலரா, நீ டாக்டரைப் பார்த்து வந்தப்புறம்? இது ஒரு சைக்கலாஜிக்கல் ப்ராப்ளம். நைஸா அடுத்தவங்க மேல் பழி தேடற சுபாவம். ஐ'ம் ஸாரி. நீ போற பாதை சரி இல்லை."

"எனக்கும் அப்படித் தோணறதுடா. ஆனால் தவிர்க்க முடியலை."

"ஒரு சைக்கியாட்ரிஸ்டைப் போய்ப் பார்!"

"பைத்தியமாயிட்டேங்கறியா?"

"இல்லிட்ரேட் மாதிரி பேசாதே. நீ அப்படி ஆயிடக் கூடாதுன்னுதான் சொல்றேன். எனக்கு பயமா இருக்கு. நீ யாரு, எப்பேர்ப்பட்டவன்னாவது ஞாபகம் இருக்கா? இந்த மாநிலத்தையே கலங்கடிக்கற டைரக்டர்டா நீ! உன் ஒவ்வொரு படத்தையும் திருவிழா மாதிரி மக்கள் எதிர்பார்க்கறாங்க. எப்பேர்ப்பட்ட ஜீனியஸ் நீ! வேற ஒண்ணும் வேணாம். இந்த அகிலாக் கழுதை வரமாட்டேன்னுட்டாள். முக்கால் முடிந்த படத்துக்கு, ரீ-ஷூட் பண்ணவே அவசியமில்லாமல் எத்தனை ஷார்ப்பா இன்னொரு கிளைமாக்ஸ் சொல்லி இருக்கே! வேற யாரால் முடியும் இது? சுலபமா இருடா! போட்டுக் குழப்பிக்காதே! குழந்தை பிறக்காதுங்கறது கொலை பாதகம் இல்லை."

அவன் தலைகுனிந்து இருந்தான். கேட்பதற்கு இதெல்லாம் எத்தனை சுகமாக இருக்

கிறது! மாநிலத்தைக் கலங்க அடிக்கிற டைரக்டர்... உள்ளுக்குள் கலங்கி நிற்கிற அற்பப் பதர்.

"வரேன் ரங்கா. தேங்க்ஸ் ஃபர் எவ்ரி திங்" என்று புறப்பட்டான்.

சென்னையின் அடையாளமாக சினிமாக்கள் காட்டும் சென்ட்ரல் ஸ்டேஷன். பெங்களூர் செல்லும் விரைவு வண்டியின் எண் மற்றும் புறப்படும் நேரத்தை மைக்கில் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந் தார்கள்.

காரை நிறுத்திவிட்டு உள்ளே போனான் ஹரி. ரஞ்சனி கிளம்பி வந்திருக்க வேண்டும். வழியனுப்பத் தான் வருவது அவள் எதிர் பார்க்க முடியாத ஒன்று. ஆனால், எதற்காக வந்தோம் என்றுதான் புரியவில்லை.

கூட்டத்தில் கரைந்து, பிளாட்பாரத்தைப் பிடித்த உடனேயே தூரத்தில் ரஞ்சனி கண்ணில் பட்டு விட்டாள். அவனைப் பார்த்ததும் பிடிபடாத வியப்பில் கையைத் தூக்கி ஆட்டுகிற போஸில் நாலு வயது குறைந் திருந்தது போல் பட்டது அவனுக்கு.

"ஐயோ, நீங்களா? நம்பவே முடியலை!"

எதைத்தான் நம்ப முடிகிறது என்று அவன் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

"ஸ்டீபன் வரலை?"

"வந்திருக்கான். கடைக்குப் போயிருக்கான். அந்தச் சனியன் ஹன்ஸ் இல்லாட்டால் அவனுக்குப் பொழுது ஓடாதே?"

மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவன் தரை பார்த்து நின்று கொண்டிருந்தபோது ஏழெட்டுப் பேர் அடையாளம் கண்டு, திரும்பிப் பார்த்தபடி போனார்கள். சட் டென்று தன் சமூக அடையாளங்கள் யாவும் அழிந்து, கண்காணாமல் சுதந்தரமாகப் போய் விட வேண்டும் என்று தோன்றியது அவ னுக்கு. ஆனால் எதை, எப்படி அழிப்பது?

ஆம்பர் கலைந்து பச்சை விழித்த போது ஸ்டீபன் ஓடி வந்தான்.

"ஹலோ ஹரி! நீ எப்ப வந்தே?"

"வண்டி கிளம்பிடும். முதலில் ஏறிக்கோ."

இருவரும் ஏறிக் கொள்ள, ரயில் நகரத் தொடங்கியதும் சொல்லி வைத்தாற்போல சேர்ந்து கையசைத்தார்கள்.

அவனுக்குள் மறுபடி கடலோசை கேட்கத் தொடங்கி விட்டது. ஆக்ரோஷமாகச் சீறிப் பொங்கும் அலைகளின் இரைச்சல்.

'கள்ளக் காதலனுடன் கம்பி நீட்டிய மனைவி! கணவன் வழியனுப்பிய விசித்திரம்!'

செய்தித்தாள் பாணியில் மனம் அபத்த மாகக் குரல் கொடுக்க, குமுறிக் கொண்டு அவன் வீடு விரைந்தான்.

வியர்த்து இருந்தது. படபடப்பும் தவிப்பு மாக இன்னது செய்வதென்று புரியாமல் அலைபாய்ந்தான். ஏதோ ஒன்று விபரீதமாக நடக்க வேண்டுமென்று தான் எதிர்பார்ப் பதாக நினைத்தான்.

என்ன அது?

இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண் டான். பெங்களூர். இதமான குளிர். சுகமான கிளைமேட். எழில் சூழ்ந்த பூங்காக்கள். ஏகாந் தப் பிரதேசம். ரஞ்சனியின் கண்காட்சிக்கு என்ன பெரிதாகக் கூட்டம் வந்து விடும்? தலை கலைந்த புடலங்காய் இன்டலெக்சுவல் பிரகிருதிகள் ஏழெட்டுப் பேர், படங்களைத் தடவிப் பார்த்துவிட்டு வாவ் என்றும் வொண்டர் என்றும் சான்றிதழ் தந்துவிட்டு, புளித்த தயிர்சாதம் சாப்பிட மத்தியானம் வீட் டுக்குப் போய் விடுவார்கள்.

"சும்மா ஒரு ரவுண்ட் போயிட்டு வரலாமா ரஞ்சனி?"

தோளை அணைத்துக் கேட்கிற ஸ்டீபன்.

"ஒய் நாட்?" துள்ளிக் கொண்டு புறப்படுகிற ரஞ்சனி. லேசான தூறல். முகங்கள் அறிமுகமில்லாத நகரில் தைரியமாகக் கரம் பற்றி நடக்கிற ஸ்டீபன். அவன் தோளில் சாய்ந்து, கண் மூடிக் கிறங்குகிற ரஞ்சனி.

நோ...! அலறிக் கொண்டு எழுந்தான் ஹரி. உடல் பதறிக் கொண்டிருந்தது. ஒரு பானை தண்ணீரைக் கவிழ்த்துக் கொண்டு, மேலும் அடங்காமல் அந்த அகாலத்தில் ரங்காவுக்கு போன் செய்ய, "என்ன ஹரி, இந்த நேரத்தில்?"

"நத்திங். நாளைக் காலை ரயிலில் நாம் பெங்களூர் போறோம். மிக அவசரம்."

சட்டென்று போனை வைத்தான் ஹரி.


(தொடரும்)

''நாட்டுல ஜனநாயகம் ரொம்ப ஓவராப் போச்சுங்க.''

''எப்படிச் சொல்றீங்க?''

தன்னைக் காட்டிக் கொடுத்தவனைப் பார்த்து அந்தக் கைதி, 'உன்னை நீதிபதி முன்னாலேயே வெட்டாட்டி, நான் ஆம்பிளை இல்லை'ன்னு சபதம் போட்டுட்டுப் போறானே!''

– சீர்காழி வி. ரேவதி



கல்கி கன்ஸல்டன்ஸி



• ரங்கராஜ

கவர்னராகும் கவர்னர்!

பிரிட்டிஷ் ஆட்சி நமக்கு சில நல்ல காரியங்களையும் செய்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ரிசர்வ் வங்கியை நிறுவியது அத்தகைய ஒரு நல்ல காரியம். அறுபது ஆண்டுகளுக்கு முன், சுதந்தரமாக இயங்கும் அமைப்பாகத் தொடங்கப்பட்டது ரிசர்வ் வங்கி.

ஆனால், பிரிட்டிஷாரிடமிருந்து நாம் சுதந்தரம் பெற்ற பின் ரிசர்வ் வங்கி படிப்படியாகத் தனது சுதந்தரத்தை இழந்து விட்டது! அரசியல்வாதிகளின் ஆதிக்கம் அதிகரிக்க, நிதியமைச்சகத்தின் கைப்பாவையாக உருமாறியது ரிசர்வ் வங்கி. நீண்ட காலத்துக்கு நிலவிய இந்த அவலத்தை மாற்றியவர் மன்மோகன்சிங். நிதியமைச்சராவதற்கு முன் ரிசர்வ் வங்கி கவர்னராக இருந்தவர் அவர். எனவே அந்த அமைப்பின் சுதந்தர இயக்கத்துக்குத் தடை ஏற்பட்டால் விளைக்கூடிய சங்கடங்களை முழுமையாக உணர்ந்திருந்தார். தாம் நிதியமைச்சர் ஆனவுடனேயே ரிசர்வ் வங்கிக்கு மீண்டும் உரிய முக்கியத்துவமும் சுதந்தரமும் அளித்தார்.

ஒரு நாட்டின் நிதி நிர்வாகத்தைக் (MONETARY SYSTEM) கட்டுப்படுத்துவதுதான் ரிசர்வ் வங்கியின் முக்கியமான பணி. அந்தக் காலத்தில் சிந்தாமணி தேஷ்முக், பி.ராமராவ், எல்.கே.ஜா, எச்.வி.ஆர். அய்யங்கார் போன்றோர் இந்தப் பணியை விருப்பு வெறுப்பின்றி சிறப்பாகச் செய்தார்கள். இந்த வரிசையில் மன்மோகன் சிங்குடன் டாக்டர் சி. ரங்கராஜனையும் சேர்க்கலாம். அண்மையில் அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் ரங்கராஜன். அவர் எடுத்த சில முக்கியமான நடவடிக்கைகளால் ரிசர்வ் வங்கி எத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தலாம்; எப்படியெல்லாம் நாட்டுக்கு நன்மை செய்யலாம் என்பது தெரிய வந்திருக்கிறது:

பட்ஜெட் பற்றாக்குறையை ஈடு செய்ய, இஷ்டத்துக்கு நோட்டு அச்சடிக்கும் பழக்கத்துக்குத் தடை போட்டார்.

நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டுமானால் வங்கிகளின் கடன் வழங்கும் கொள்கை சீரியதாக இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, அக் கொள்கைகளைச் சீரமைத்துக் கொடுத்தார். அதோடு நிற்காமல், 'கடன் கொடுப்பது கடமை' என்று வங்கிகளுக்கு அடிக்கடி உணர்த்தி வந்தார்.

'ரிசர்வ் வங்கிக்கும் நிதியமைச்சகத்துக்கும் இடையே சிக்கிக் கொண்டு திணறுகிறோமே' என்று நொந்து கிடந்த வங்கிகள் சுதந்தரக் காற்றைச் சுவாசிக்க ஆரம்பித்தன.

வங்கிகள், வர்த்தக-தொழில் நிறுவனங்கள் என்கிற வட்டத்தையும் தாண்டி, ரிசர்வ் வங்கி சராசரி மக்களால் கவனிக்கப்படக் காரணமாயிருந்தவர் இவர்.

தொழிலதிபர்கள் கூட ரிசர்வ் வங்கி 'நம் பக்கம்' என்று நம்பிக்கையுடன் இயங்க முடிந்தது இவர் காலத்தில்.

நிதியமைச்சகமும், சேவகனாய் எண்ணி ஏவி வந்த ரிசர்வ் வங்கியைச் சகோதரனாய் ஏற்று சுமுகமாகப் பழக ஆரம்பித்தது.

இத்தனை சாதித்தவர், ஆந்திர மாநிலத்துப் பொருளாதாரத்தை முன்னேற்ற மிகவும் உதவியாய் இருப்பார் என்கிற நோக்கில் அம்மாநில கவர்னராக்கப்பட்டிருக்கிறார்.

சில அரசியல் சார்புடைய கவர்னர்களால் அந்தப் பதவிக்கே இழுக்கு நேர்ந்திருக்கிறது இந்தியாவில்... ரிசர்வ் வங்கிக்கு ஒரு புதிய முகம் கொடுத்த ரங்கராஜன், மாநில கவர்னர் பதவிக்கும் புதிய கௌரவம் சேர்க்கக் கூடியவர்தான். ■

— வி. கோபாலன்.



மேஷம் :

(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

வார ஆரம்பத்துல செலவு ஜாஸ்தியாவும்னாலும், வெளியூர்ல இருந்து வர்ற ஒரு சேதியால சந்தோஷமாயிடுவீங்க. கொடுக்கல் - வாங்கல், ஷேர் மார்க்கெட்ல எல்லாம் உஷாராயிருங்க. டூவீலர்ல போறவங்க ஜாக்கிரதையாப் போங்க. பெண்கள்னா எதிலயும் நிதானம் காட்டுங்க. அரசியல்வாதிங்களுக்கும் சிக்கலான வாரம்தான். புதிய திருப்பம் ஒண்ணு ஏற்படறதுக்கு சான்ஸ் இருக்குன்னாலும் பிரயாணத்தைத் தள்ளிப் போடுங்க. அதுவும் ராத்திரி நேரப் பிரயாணம்னா வேண்டவே வேண்டாம்.

ரிஷபம் :

(கிருத்திகை-2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)

எதிலேயும் அசால்ட்டா இருந்திடாதீங்க. கோர்ட் கேஸ்ட்டுன்னு அலைய வேண்டியதாயிடும்! கூடப் பொறந்தவங்களே தொல்லை கொடுக்கிற வாரம்ங்கிறதால அலைச்சல், உளைச்சல் ஜாஸ்தியா இருக்கும்; பணச் செலவும் அதிகமாவும். கவலைப்படாதீங்க. உங்க செல்வாக்கும் பணப் புழக்கமும் திருப்தியாவே இருக்கும். மனைவியோ, மகளோ, மருமகளோ நல்ல சேதி சொல்லுவாங்க. சொந்தக்காரங்க நிறைய வருவாங்கன்னாலும் அவங்க உதவியாத்தான் இருப்பாங்க.

மிதுனம் :

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)

கொடுக்கல் - வாங்கல், ஏற்றுமதி - இறக்குமதியெல்லாம் அமோகமா நடக்கும். விஞ்ஞானிங்க, வியாபாரிங்களுக்கும் அமோக பலன்தான். சில பேருக்கு வெளிநாடு போற அதிர்ஷ்டமும் காத்துக் கிட்டிருக்கு. ரொம்பப் பெரிய நெலைல இருக்கிற அரசியல்வாதிங்க, அதாவது மந்திரி மாதிரியான பொறுப்புல இருக்கறவங்க ஜாக்கிரதையாச் செயல்படணும். கிரக சஞ்சாரத்தால குடும்பத்தோட பொருளாதார நிலைல வளர்ச்சியிருந்தாலும் பெண்களுக்கு வீண் அலைச்சலும் குழப்பமும் வர்ற வாய்ப்புங்க கொஞ்சம் அதிகம். உஷாராயிருங்க.

கடகம் :

(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

உங்க முழுத்திறமையையும் வெளிப்படுத்த வேண்டிய வாரம்ங்க இது. அதுவும் பெண்களுக்கு யோகமான வாரம் போங்க. பொருள் சேர்க்கை, வீட்டுல சுபமான விசேஷங்கள், எதிரிங்க விலகிப் போவாங்க, சிலருக்கு வேலை கூடக் கிடைக்கும், இல்லைன்னா புரமோஷன் கிடைக்கும்னா குடும்பத்துல சந்தோஷத்துக்கு கொறவு வருமா என்ன! விளையாட்டு வீரர்களுக்கும் ஜெயமான வாரம் தான். ஆனாலும் நாக்கு விஷயத்துல கவனமா இருங்க. அவசியமில்லாம பேசி சிக்கல்ல மாட்டிக் காதீங்க.

மிதுன ராசிக்காரரான கிரேஸி மோகனுக்கு வெளிநாடு போற சான்ஸ் இருக்குதாம்! குடும்பத்துப் பொருளாதார நிலைல நல்ல வளர்ச்சி இருக்கும்னு தெரியுது. நெறய படங்கள் புக் ஆயிருக்குதா சார்?

சிம்மம் :

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

உற்சாகமான வாரம்ங்க. குறிப்பா சொல்லணும்னா, பத்திரிகைத் துறையில் உள்ளவங்க, சயன்ஸ், கணக்கு, கலைத்துறைக்காரங்களோட புகழ் உசந்து நிக்கிற வாரம். வீடு, நிலம், மனை வாங்கற அதிர்ஷ்டமும் இருக்கு. பெண்கள் நெனைச்சிருக்கறது நடக்கும். புதுசா ஃபிரண்ட்ஸுங்க கிடைப்பாங்க. தொழில்ல அபிவிருத்தி உண்டாகும். இருந்தாக்கூட - உடம்பு கொஞ்சம் அப்படியும் இப்படியும் படுத்தலாம். அலட்சியமா இருந்திடாதீங்க. உடனே டாக்டரைப் பார்த்து கன்சல்ட் பண்ணிடுங்க.

கன்னி :

(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)

இந்த வார முன்பாதில நிதானமா இருந்தீங்கன்னா பின்பாதில சந்தோஷத்துக்கு கியாரண்டி. ஆபீஸ்ல வேலையா இருக்கிறவங்களுக்கு ஆபீஸருங்க பாராட்டுக் கிடைக்கும். தொழில் செய்யற

நடக்குமென்பார்,



வங்களுக்கு லாபம் கூடும். பெண்களுக்கும் பெருமை கூடும். கடல் வியாபாரம் பண்றவங்களுக்கும் (மீனவங்க உள்பட) நல்ல லாபம்தான். நீண்ட நாளா தள்ளிப் போய்க்கிட்டே வர்ற புண்ணிய ஸ்தல யாத்திரைகூட இந்த வாரம் கைகூடிடும். இருந்தாக் கூட கொழந்தைங்க ஒடம்பக் கொஞ்சம் கவனமா பார்த்துக்கங்க.

துலாம் :

(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)

இதுவரைக்கும் இருட்டுல இருக்கற மாதிரி இருந்துச்சா? கவலையே படாதீங்க. இந்த வாரம் வெளிச்சத்துக்கு வரப் போறீங்க. கோர்ட் - கேஸா? ஜெயம் உங்க பக்கம்தான். எடுத்த காரியமெல்லாம் வெற்றியாவே முடியும். குடும்பத்துல மங்களமான நிகழ்ச்சிகள் நடக்கும். உங்க பேச்சுக்கு மதிப்பும் மரியாதையும் கெடைக்கும். கலைஞர்கள்னா கௌரவிக்கப்படுவீங்க. வெளிநாடு போறதுக்கும் நிறைய சான்ஸ் இருக்கு.



விருச்சிகம் :

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

கிரகங்களோட அமைப்பு சரியில்லாததால நீங்க இந்த வாரம் அமைதி காக்கறது அவசியம். யாருகிட்டயும் வீணான வாதப் பிரதிவாதங்கள்ல மாட்டிங்காதீங்க. காரு, டூ வீலர்னு ஓட்டிக்கிட்டுப் போறவங்களாயிருந்தா ரொம்பவும் கவனமா போங்க. ஷேர் கீரெல்லாம் கூட இந்த வாரம் வேண்டாங்க. வெளி நாட்டில இருந்து உதவிங்க வரலாம். பெண்களுக்கு வாரக் கடைசில நல்ல பலன்தான்னாலும் உஷாராயிருக்க வேண்டிய வாரம்ங்கிறதை மறந்திடாதீங்க.

தனுசு :

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

பண விஷயம் தாராளம். கௌரவம், மதிப்பெல்லாம் ஓசந்து செழிப்பா இருப்பீங்க. விருந்து - கேளிக்கைன்னு குடும்பத்துல உற்சாகம் பீறிடும். வெளியூர்ல இருந்து நல்ல சேதி வரும். செலவு வரும்னாலும் அது சுபகாரியங்களுக்கான செலவாத்தான் இருக்கும். திருமணப் பேச்சு நடக்கும். பெண்களுக்கு நகை ஏதும் வாங்கற யோகமும் இருக்கு. உடல் ஆரோக்கியத்தில மாத்திரம் கொஞ்சம் கவனமா இருங்க.

மகரம் :

(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

எதிரிங்க இருக்காங்களா உங்களுக்கு? இந்த வாரம் ஓடி ஒளிஞ்சுக்குவாங்க. அப்புறமென்ன, எடுத்த காரியமெல்லாம் ஜெயம்தான். இதுவரைக்கும் இழுத்தடிச்சுக்கிட்டிருந்த வழக்கு விவகாரமெல்லாம் இப்ப உங்க பக்கம் ஜெயிச்சிடும். வெளிநாட்டில இருக்கற மகன் - மகள்களால சந்தோஷப்படுவீங்க. ஸ்டூடண்ட்ஸுக்கும் அமோகமான நேரம். பெண்களைப் பொருத்த வரைக்கும் முதல் பாதி மனச்சஞ்சலமா இருந்தாக்கூட பின்பாதி பிரமாதமாயிடும்.

கும்பம் :

(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

பத்திரிகைகாரங்கள்ல இருந்து வியாபாரிங்க வரைக்கும் எல்லோருக்குமே காரிய வெற்றிக்கும் பண வசதிக்கும் கொறவு வராது. சொந்தக்காரங்க - பிரண்டுங்கன்னு எல்லோருமே உதவியா இருப்பாங்க. கமிஷன் ஏஜெண்டுங்க - தரகருங்களுக்கு ரொம்ப நல்ல வாரம். பெண்களுக்கும் அலங்காரப் பொருள்களும் ஆபரணங்களும் வாங்கற வாய்ப்பு இருக்கு.

மீனம் :

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

உங்களோட அறிவாற்றலும் சாமர்த்தியமும் வெளிப்படையாத் தெரியற வாரம்ங்க இது. வழக்கு சம்பந்தமான விஷயங்கள்ல ஒரு திருப்பமே வரும் போங்க. எஞ்ஜினியர், சட்டம், ராணுவம், போலீஸ் துறையில இருக்கீங்களா? நெனச்சது நடக்குங்க. வெளிநாட்டுத் தொடர் பால சிலருக்குப் பயன் உண்டு. பெண்களுக்குத்தான் சில காரியங்கள்ல தடை வரும். சிலது விவகாரமாப் போகக்கூட வாய்ப்புங்க ஜாஸ்தி.

நடக்கும்!

நவம்பர் 19 முதல் 25 வரை

அக்னி சர்மா பக்கம்



வெள்ள நிவாரணம் கேட்டு ஆட்சியாளர்கள் கதவைத் தட்டியிருந்தால் செய்தி சாதாரணமானதுதான். டுமீங் குப்பத்திலிருந்து முந்நூறுக்கும் மேற்பட்டோர் ஜெயலலிதா வீட்டு முன் திரண்டிருந்தது வித்தியாசமாய் இருந்தது.

மனுக்களைக் கையில் வைத்திருந்தவர்கள், 'ஜெயலலிதாவைப் பார்க்காமல் போக மாட்டோம்' என்று நங்கூரமாய் அமர்ந்திருந்தனர். அது டுமீங் குப்பத்திற்கு ராசியற்ற சனிக்கிழமையாகி விட்டது. அவர்களை அணுகி விசாரித்தோம்.

இக்கரைக்கு எக்கரையுமே பச்சை இல்லை!

"எங்க குப்பத்துக்கு நாலாயிரம் ரூபாய் உதவி செஞ்சதா இந்தம்மா பேப்பருல சொல்லியிருக்காங்க. அந்தப் பணத்தை பூராவும் ஒன்பது பேரு பங்கு போட்டுக்கிட்டாங்க. எங்களுக்கு ஏதாவது கொடுத்தாத்தான் போவோம்!" தீவிரமாகப் பேசினார்கள் கூடியிருந்தவர்கள்.

விடிந்ததும் கூட்டமாய் வந்திருக்கிறார்கள். வாயில் காப்பாளர், "அம்மாகிட்ட கேட்டுட்டு வர்றேன்" என்று போனவர், திரும்பி வந்து 'வெளியூர் சென்று விட்டதாக'க் கூறியிருக்கிறார்.

"இப்ப இருக்காங்கன்னு போனா? பின்னாடி கேட்டைத் தாண்டியா அம்மா போயிட்டாங்க?"

கேள்விக்கு பதிலே இல்லை!

என்ன நினைத்தார்களோ, குப்பென்று ஒரு குழுவாக அருகில் ரஜினிகாந்த் வீட்டிற்கு ஓடினார்கள். சற்று நேரத்தில் அவர்கள் திரும்பி வரும் போது நடை தளர்ந்திருந்தது. சூப்பர் ஸ்டார் வெளியூர் சென்றிருக்கும் செய்தி சோர்வைத்தானே கொடுக்கும்!

"ஜெயலலிதா வீட்டுக்கு வந்திட்டு ரஜினி வீட்டுக்கு எதுக்கும்மா ஓடுனீங்க?" என்றோம், சில பெண்களிடம்.

"காலையிலிருந்து காத்துக் கிட்டிருக்கோம். அம்மா கிட்ட இருந்து ஒரு மூச்சு காணோம். ரஜினி இருந்திருந்தா ஏதாவது கொடுப்பாரு. அவரு இல்ல!" என்றனர், சோகத்துடன்.

உண்மையிலேயே காலையில் சாப்பிடாமல் கொள்ளாமல் விழுந்தடித்து வந்திருக்கிறார்கள். மதியம் ஆக, ஆக, குழந்தைகள் பசியால் அழத் தொடங்கி விட்டன.

"ஏம்மா ஆட்சி நடத்துறவங்ககிட்ட போகாம, இங்க வந்து என்ன ஆகப் போகுது? கலைஞர் கிட்ட ஏன் போகலை?" என்றோம்.

"போனோம்! மனு கொடுத்திட்டுப் போகச் சொன்னாரு" என்றார்கள்.

"மனு கொடுத்தீங்களா" என்றால், "எதுக்கு மனு கொடுக்கணும்? வோட்டுக் கேட்டு வந்தப்போ மனு கொடுத்தா ஓட்டு கேட்டாங்க?" – நம்மை எக்க ஆரம்பித்து விட்டனர்.

ஜெயலலிதா சும்மா இருந்திருந்தால்கூட இவ்வளவு பெரிய தகராறு வீட்டு முன் உருவாகியிருக்காது.

தொகுதி எம்.எல்.ஏ.விடமோ கவுன்சிலரிடமோ முறையிடாமல் இங்கு வருவது நியாயமில்லை.

"வீட்டுக்கு வரத் தெரிந்த உங்களுக்கு எம்.எல்.ஏ.விடம் போக வேண்டும் என்று தோன்றவில்லையா?" என்றோம்.

அவர்கள் சொல்லும் ஒரே பதில் இதுதான்: "பத்து நாளா மய வியுந்து கூரையெல்லாம் செதஞ்சு போச்சு. வீடே தண்ணியில மிதக்குது. இத எம்.எல்.ஏ வந்து பாக்கணுமா. நாங்க போயி அவர பாக்கணுமா? எங்க பக்கம் தலை வச்சுகூடப் படுக்க மாட்டார்" என்றனர்.

எம்.எல்.ஏ ராமஜெயம் கவனிக்க வேண்டிய விஷயத்தை ஜெயலலிதா கவனிக்க முடியுமா? கஷ்டம்தான்.

கலைஞர் வெள்ளச் சேதத்துக்கு எதுவும் தரமாட்டாரா என்றதும் "அவரும் தருவார். இந்தம்மா பங்குக்கு ஏதாவது தரணுமில்லையா?" என்று ஒரு போடு போட்டனர்!

ஜெயலலிதா கடைசி வரை நாட் அவுட் தான். டுமீங் குப்பத்தார்களின் எந்தப் பந்துவீச்சுக்கும் கேட் திறக்கவேயில்லை.

மூன்று மணிக்கு மேல் டுமீங் குப்பத்தினர், தங்கள் தோல்வியை ஏற்றுக்கொண்டு கலையத் தொடங்கினர். போகும் கூட்டத்தின் மத்தியில் ஒரு குரல்: "இங்க வந்ததுக்கு பதிலா சத்தியராஜ் வீட்டுக்குப் போயிருக்கலாம். பொழுது பூரா வேஸ்டாயாச்சு" ■

— யுகாந்தன்



"இயற்கையை இதுவரைக்கும் இப்படி ரசிச்சது கிடையாது..!"

"நமக்கா இப்படியெல்லாம்..! நம்பவே முடியல்லே! நெனைச்சுப் பாக்க முடியாத சந்தோஷம்! இதுவரை அனுபவிக்காத அனுபவம்!"

இப்படி ஆனந்தப் பரவசத்தில் திக்குமுக் காடுபவர்கள் சென்னை குப்பங்களைச் சேர்ந்த சில மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள்.

எதற்கு இந்தப் பரவசம்?

எக்ஸ்னோரா நேச்சரலிஸ்ட்ஸ் கிளப், கொடைக்கானலில் சமீபத்தில் ஏற்பாடு செய்திருந்த ஐந்து நாள் டிரக்கிங் முகாமில் இவர்கள் கலந்து கொண்டு திரும்பியிருக்கிறார்கள். (ஒன்பது பள்ளிகளிலிருந்து இருபத்தைந்து பேர்.)

• ட்ரக்கிங் போகிறார்கள்



பள்ளி மாணவர்களுக்கு இயற்கையோடு ஒரு பந்தத்தை உருவாக்குவதற்காகக் கடந்த மூன்று வருடங்களாக இந்த டிரக்கிங் முகாமை நேச்சரலிஸ்ட் கிளப் நடத்தி வருகிறது. கட்டணம் வசூலித்து தனியார் பள்ளி மாணவர்களை மட்டும் இதுவரை கொடைக்கானல் அழைத்துச் சென்றது எக்ஸ்னோரா. இந்த முறை இவர்களுடன் மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவிகளுக்கும் இலவசமாக அந்த சான்ஸ் கிடைத்தது!

பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று இப்போது ப்ளஸ் ஒன்னில் ஸ்டார்களாக ஜொலிப்பவர்களுக்கு இந்த கொடைக்கானல் ஜாலி உலா யோகம் அடித்தது. ஆகிற செலவை சென்னை மாநகராட்சி ஏற்றுக் கொண்டது. முதலில் முந்நூறு பேரை அனுப்ப ஒப்புக் கொண்ட சென்னை மாநகராட்சி, கடைசியில் 'எதிர்பாராத தடங்கல்'களால் 25 பேரை மட்டும்தான் அனுப்பியது. "அந்த இடத்திலேயே ஒரே சமயத்திலே நூறு பேருக்கு மேலே இறக்கினால் காடு காடாக இருக்காது" என்று எக்ஸ்னோரா இன்டர் நேஷனலின் பிரசிடண்ட் டி.கே. ராம்குமார் பாஸிட்டாவாக அந்த ஏமாற்றத்தை ஏற்றுக் கொள்கிறார்.

எது எப்படியிருந்தாலும், ஓரிருவரைத் தவிர, சென்னையை விட்டால் வேறு திக்கே தெரியாத மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஐந்து நாள் கொடைக்கானல் மலை உலாவில் ஒரு புது உலகத்தைக் கண்ட பேரானந்தம்.

மேற்கு மாம்பலம், மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் கோட்டீஸ்வர குமார் மற்றும் டில்லி பாபுவைச் சந்தித்தபோது, "நம்மளை எல்லாம் இப்படி ஃப்ரீயா கூட்டிப் போவாங்களான்னு புறப்படற வரைக்கும் சந்தேகமாக இருந்தது. நிறைய தூரம் நடக்கறது ஜாலியா இருந்தது. இயற்கையை இதுவரைக்கும் இப்படி ரசித்தது கிடையாது.

பேரிஜம் என்ற இடத்தில் காட்டெருமையை பார்க்கிறதுக்காக இரண்டு மணி நேரம் காத்திருந்தோம். யாரும் சத்தம் போடக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க... அமைதியான சூழ்நிலை. வாழ்க்கையிலே அந்த மாதிரி அமைதியை அனுபவிச்சதில்லை. வெல்லக்கவி என்ற கிராமத்திலே எங்களை நல்லா தெரிஞ்ச மாதிரி, "வீட்டுக்கு வந்து சாப்பிடுங்க" என்று சின்னக் கொழந்தைங்ககூட கூப்பிட்டாங்க.. மெட்ராஸில் யாரும் இப்படி கூப்பிட்டதில்லே.... அங்கே அஞ்சாம் வகுப்புவரைதான் ஒரு பள்ளிக்கூடம் இருக்கு. பஸ் ரூட்டெல்லாம் கிடையாது. அங்க யாரும் வாத்தியாரா வர்றதில்லேயாம். அந்த ஸ்கூல்லேயே படிச்ச ஒருத்தர் ஹெட்மாஸ்டரா இருக்காரு. இன்னும் மூணு வருஷத்திலே ரிட்டையராகப் போறாரு.... அப்புறமும் அந்த ஸ்கூலுக்காக வேலை பார்ப்பேன்னு சொல்றாரு... அவரை நெனைச்சா பெருமையா இருக்கு.. அந்தப் பள்ளிக் கூடத்தை விரிவு படுத்தணும்... வெல்லக்கவி மக்களுக்கு ஏதாவது செய்யணும்னு நாங்க, எக்ஸ்னோரா ஆளுங்கல்லாம் நெனைச்சிருக்கோம்."

நுங்கம்பாக்கம் மகளிர் மேல்நிலைப்பள்ளி




• வெல்லக்கவி...

ஜெயந்தி, "பெரிய... பெரிய ஸ்கூல் பசங்க எல்லாம் நம்மகூடப் பழக மாட்டாங்க... மாநகராட்சி பசங்கள் என்று பிரிச்சுப் பார்ப்பாங்கன்னு நெனச்சேன்... அவங்க எல்லாம் நல்ல ஃப்ரண்ட்ஸ் ஆயிட்டாங்க.. நமக்கா இப்படியெல்லாம் பண்றாங்கன்னு நம்பவே முடியலே.. ஸ்கூலுக்கு சைக்கிளில் கூட்டிப் போகச் சொல்லி என் தம்பியைக் கெஞ்சுவேன். ரொம்ப பிகு பண்ணிக்குவான். இப்பல்லாம் நடந்தே போயிடுறேன். டிரக்கிங் போனப்புறம் நடக்கறது கஷ்டமாவே தெரியல்லே.... அப்புறம், செடி வைக்க ஆசை.. வீட்டுச் சொந்தக்காரங்க அனுமதிக்க மாட்டாங்க!... என்ன செய்யறது?" என்கிறார்.



• சுகுமார்



• கோட்டீஸ்வர குமார்



• அனுராதா

மேற்கு சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அனுராதா, எழிலரசி, விமலா மூவரும் "ரொம்ப சந்தோஷமாவ ஷாக்... ஃப்ரீன்னு சொன்னதாலே போஸ்ட்போன் ஆயிடுமோ என்று நெனச்சோம்.... நிக்கும்போது, நடக்கும்போது... எங்கே பாத்தாலும் எங்களைச் சுற்றி மரங்கள்... இப்படி விதவிதமான செடி, மரங்களே பாத்தது இல்லே.. அந்த காத்தோட ஸ்மெல்... ஏதோ அற்புதமான மருந்து போல... சுவாசிக்கிறதே தனி



• விமலா

சுகம்... அணைக்கட்டு திட்டத்தாலே இயற்கை எப்படி பாழாகுதுன்னு சொன்னாங்க. இயற்கை உரம் பற்றி, மண்ணின் அருமை பற்றி நெறைய விஷயங்கள்.. அப்புறம் வெல்லக்கவியை மறக்கவே முடியாது.. எல்லாருமே ரொம்ப வெள்ளையா இருக்காங்க... ஏன்னு கேட்டோம்... அந்த கிளைமேட் ஸ்விட்ஜர்லாந்து கிளைமேட்டாம்! காட்டு மேட்லே கஷ்டமே இல்லாம ரொம்ப ஸ்பீடா நடக்கிறாங்க. அந்த ஊருக்குள்ளே யாருமே ஸ்லிப்பர் போடக் கூடாது. கோவில் நெறைய இருக்கு. செருப்பு போடக் கூடாது என்றவுடன் நமக்கு பைத்தியக்காரத்தனமா தோணுச்சு.. ஆனா அவங்க ஊரையே ஒரு கோயிலா நெனைக்கிறாங்க சார்...!"



• எழிலரசி

சூளைமேடு மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் சுகுமார், ராமகிருஷ்ணன், "நம்ம காசு கட்டலே... அதனால அவங்க சொல்றபடிதான் நடக்கணும்... ரொம்ப ஸ்டிரிக்டா இருப்பாங்க என்று கொஞ்சம் பயந்தோம். கார்ப்பரேஷன் ஸ்கூலுங்கிறதாலே தாழ்வா நடத்துவாங்கன்னு நெனச்சோம். ஆனா... எங்களை மெட்ரிக்குலேஷன் பசங்களைவிட டபுள் மடங்கு மதிப்பா மரியாதையா நடத்துனாங்க." என்று உணர்ச்சி வசப்படுகிறார்கள்.

இந்த டிரக்கிங் அனுபவத்தால் ஒவ்வொருவரிடமும் அழுத்தமான தாக்கம். இயற்கையின் காவலர்களாக அவர்கள் அவதாரமெடுத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது! ■

— ஆதித் கம்யூனிகேஷன்ஸ்

தீபாவளிப் பரிசு

ஸ்ரீராம் டிரஸ்ட் வழங்கும்

மகத்தான முதலீட்டுத் திட்டம்!

SHRIRAM GROUP COMPANIES
MADRAS



ரூ. 10,000 முதலீடு செய்யுங்கள்
5 ஆண்டுகளில் ரூ. 20,000 (இரு மடங்கு)
பெற்றுக் கொள்ளுங்கள்

அத்துடன்

4 இலக்கியப் பொக்கிஷங்களையும்
அன்பளிப்பாகப் பெறுங்கள்

1. **'கல்கி'** வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. **'கல்கி' தீபாவளி மலர்** 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் **'அமுதசுரபி'** இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. **'அமுதசுரபி' தீபாவளி மலர்** 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.

ரூ. 10,000 (ரூ பத்தாயிரம்) **'ஸ்ரீராம் டிரஸ்ட்'** பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை – 600 102. தொலைபேசி எண் : 628 6869 628 7879

1. முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி ....
   முகவரி : ....
   ....
   ....
   ....
2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் :
   முழுப்பெயர் : ....
3. வாரிசுதாரர் : ....
4. **'கல்கி' 'அமுதசுரபி'** இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி : ....
   ....

CHEQUE / D.D. No. .... DT .... ON ....

இடம் ....

அன்புள்ள

தேதி ....

முதலீட்டாளர் கையொப்பம்

உணர்வுகள்
உறவுகள்...



வெறுப்பை வெல்லுங்கள்!

பெண் பார்க்கும் படலம். மாப்பிள்ளைப் பையனின் பார்வையே தன்னைப் பிடித்து விட்டதை உணர்த்துவதாகத் தெரிகிறது பெண்ணுக்கு. அவளுக்கும் பிடித்துப் போய் விட்டது.

பஜ்ஜி - சொஜ்ஜிக்கு அப்புறம் லௌகீக விஷயங்கள் பேசப்படுகின்றன.. "சரி, ஊருக்குப் போய் லெட்டர் போடறமே!" என்று எழுந்து போகிறார்கள் மாப்பிள்ளை வீட்டார்.

ஆயிற்று. ஒரு வாரம்... இரண்டு வாரம். மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து எந்தவிதமான பதிலுமே வரவில்லை. இப்படிப் போனவர்களில் இவர்கள் ஐந்தாவது!

'ஏன் இத்தனை பேரும் தன்னை நிராகரிக்கிறார்கள்?' . இந்தக் கேள்வி பெண்ணின் மனத்தில் குடைந்து கொண்டே இருக்கிறது. ஒருவேளை நான் அழகாயில்லையோ! இல்லையே, நான் அழகாகத்தானே இருக்கிறேன். இருந்தும் நிராகரிக்கப்பட என்ன காரணம்? பல்வேறு கேள்விகளால் குழம்புகிற பெண்ணுக்கு ஒருவித வெறுப்பு வருகிறது. அது தன் மீதே இருக்கலாம் அல்லது திருமணத்தின் மீதே இருக்கலாம். இல்லையெனில் மாப்பிள்ளை வீட்டாரின் மீது ஏற்படும் அந்த வெறுப்பு, அவர்களிடம் காண்பிக்க முடியாத சூழ்நிலையில் தன் வீட்டாரிடமே வெறுப்பாக வெளிப்படலாம்.

இந்த வெறுப்புக்கு என்ன காரணம்? இந்த இடம் தனக்கு முடிந்துவிடும் என்று அந்தப் பெண் ரொம்பவும் எதிர்பார்த்தாள். இதற்கு முன் வந்த மாப்பிள்ளைகளை விட இவன் நல்ல பர்சனாலிடியாக இருந்தான். நிச்சயமாக இது முடிந்து விட வேண்டும் என்று சுவாமியிடம் பிரார்த்தனை கூடச் செய்தாள். இப்படியெல்லாம் எதிர்பார்த்த அவளுக்கு ஏமாற்றம்தான் ஏற்பட்டது.

டாக்டர் எஸ். விஜயகுமார்

● பாரீஸ் நகரிலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் 'வருகையின் நோக்கம்' என்பதற்கு எதிராக கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:

'வெளியே மழை பெய்கிறது'

தகவல் : க. மாரியப்பன்

அந்த ஏமாற்றமே வெறுப்பாக வெளிப்பட்டது.

ஒரு முக்கியமான வேலை. "இது என்னப்பா பிரமாதம்! நான் அதை முடித்துத் தருகிறேன். நீ இது பற்றிக் கவலையே படாதே!" என்று நமது நண்பர் ஒருவர் கூறுகிறார். நாமும் அந்தப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்து விடுகிறோம்.

ஆனாலும் அவர் முடித்துத் தரவில்லை. "அடடே! மறந்தே போச்சுப்பா. நாளைக்கே முடிச்சிடறேன்!" என்கிறார்.

மறுபடியும் அவரைப் பார்க்கிறபோது, "உன் வேலையைச் செய்யத்தான் புறப்பட்டுக்கிட்டிருந்தேன். அப்பப் பார்த்துத் திடீர்னு டூர் போக வேண்டியதாப் போச்சு. நேத்திக்குத்தான் திரும்பி வந்தேன். நாளைக்கு முடிச்சுத் தந்திடறேன்!" என்கிறார்.

உடனே நமக்கு அவர் மீது ஒருவித வெறுப்பு வந்து விடுகிறது. "ஏம்ப்பா நானா என் வேலையை உன்கிட்ட செய்யச் சொன்னேன்? நீயேதானே செய்யறேன்னு சொன்னே! இப்ப இப்படிச் சொல்றியே. முடியாதுன்னா நேரடியாவே சொல்லிட வேண்டியதுதானே. அதுக்கெதுக்கு இத்தனை சால்ஜாப்பு சொல்றே? உன்னை நம்பினதுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். இனிமே உன்னை நான் நம்பவே மாட்டேம்ப்பா, போதும் உன்னோட ஃபிரண்ட்ஷிப்!" என்று அவரது முகத்திலடித்த மாதிரி சொல்லிவிட்டு வந்து விடுகிறோம்.

அதாவது அந்த நண்பர் நமது வேலையைச் செய்து விடுவார் என்று மிகவும் எதிர்பார்த்தோம். நமது எதிர்பார்ப்பை அவர் நிறைவேற்றவில்லை. அந்த ஏமாற்றத்தால் அவர் மீது நமக்கு வெறுப்பு!

சில மாணவர்களைப் பாருங்கள். கணக்கு வாத்தியார் பேரில் ஏக வெறுப்பாக இருப்பார்கள். அவர் என்றைக்காவது லீவு போட்டிருந்தால், 'அப்பப்பா! அந்த அறுவை வாத்தியாரிடமிருந்து இன்றைக்குத் தப்பித்தோம்!' என்று ரொம்பவும் சந்தோஷப்படுவார்கள்.

காரணம் என்ன? அந்தக் கணக்கு வாத்தியார் என்ன ஏமாற்றுப் பேர்வழியா? இந்த மாணவர்களை அப்படியென்ன ஏமாற்றி விட்டார் அவர்?

விஷயம் ரொம்ப சிம்பிள். இந்த மாணவர்களுக்குக் கணக்கு அவ்வளவாக வராது. சில மாணவர்கள் நூற்றுக்கு நூறு வாங்குகிற அதே கணக்குப் பாடம் நமக்கு மாத்திரம் இப்படி வந்து கழுத்தறுக்கிறதே... சனியன் புரியவே மாட்டேங்கிறதே... என்கிற ஏமாற்றம். அது வாத்தியார் மீது வெறுப்பாக வெளிப்படுகிறது!

இந்த வெறுப்பை எப்படித் தவிர்ப்பது? இது சாத்தியம்தானா? சாத்தியம்தான். சொல்லப் போனால் வெறுப்பை வெல்லுவது ரொம்பவும் சுலபம் கூட!

அதாவது, எல்லாவற்றையுமே நம் கோணத்திலிருந்தே சிந்தித்துப் பார்க்கக் கூடாது. பிறருடைய கோணத்திலிருந்தும் சிந்தித்துப் பார்த்து, அந்தப் பக்கத்து நியாயங்களையும் உணர்ந்து விட்டால் பிரச்னையே இல்லை.

நமக்கு இந்த சம்பந்தத்தில் ஆர்வம் ஏற்படுவதற்கு எத்தனை காரணங்கள் இருந்ததோ, அதே போல் அவர்களுக்கு இதில் ஆர்வம் இல்லாமல் போனதற்கும் காரணங்கள் இருக்காதா என்ன! தரகர் கொண்டு வந்த எல்லாப் பையன்களையுமா பெண் பார்க்க வரச் சொன்னோம்! இல்லையே! அதில் பார்த்துப் பார்த்து செலக்ட் பண்ணித்தானே வரச் சொன்னோம்! அரை குறையான திருப்தியோடு கல்யாணம் நடத்து, பிறகு கஷ்டப்படுவதற்குப் பதில், இப்போதே முறிந்து போனது நல்லதுதானே!

அதே போல்தான் நண்பரும். அவர் நமது வேலையைத் தான் எடுத்துப் போட்டுக் கொண்டு செய்து தருவதாகச் சொன்னது, சால்ஜாப்பு சொல்வதற்காகவா இருக்க முடியும்? நம்மீதுள்ள பிரியத்தினாலேயே அப்படிச் சொன்னார். நிஜமாகவே முதலில் மறந்து விட்டார். பிறகும் நிஜமாகவே டூர் போயிருக்கிறார். அதனால்தான் அவர் செய்து தரவில்லையே தவிர, நம்மை ஏமாற்றும் நோக்கத்தோடு அல்ல. அப்படிச் செய்யக் கூடியவரா அவர்? இல்லையே!

கணக்குப் பாட விஷயமும் இப்படித்தான். மற்றப் பாடங்களை மனப்பாடம் செய்து கூட பரீட்சை எழுதி மார்க் வாங்கிவிட முடியும். கணக்குப் பாடத்தில் அது முடியுமா? யோசித்து யோசித்துச் செய்ய வேண்டும். நிறையக் கணக்குகளைப் போட்டுப் போட்டுப் பழக வேண்டும். அப்போதுதான் கணக்கு நம் வசப்படும். புரிபடும். மற்ற பாடங்களைவிட இதற்குக் கொஞ்சம் அதிக நேரம் எடுத்துக் கொண்டு பழகினால் இதுவும் சுலபம்தான்.

ஆக, எதிர்ப்பக்கத்து நியாயங்களை அமைதியாக உட்கார்ந்து யோசித்தால், யார் மீதும் எதன் மீதும் வெறுப்பு வரவே வராது. ■



சிங்கப்பூர் போகிறார் டயானா!

தொடர்ந்து பேச்சுப் போட்டியில் எட்டாண்டுகள் முதல் பரிசு பெற்றார் டயானா என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இல்லை? மறைந்த இளவரசி டயானா அல்ல. செயின்ட் ரபேல் மேல் நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் ரெய்ச்செல் டயானா.

இவரது தந்தை மதன் கேப்ரியல் திரைப்படக் கல்லூரியில் நடிப்புத்துறை தலைவர்.

பள்ளி வளாகத்தில் நடந்த பேச்சுப் போட்டியில் பெற்ற சான்றிதழ்கள் மட்டும் கத்தையாகக் கிடக்கின்றன. நடனம், நடிப்பு, ஒப்புவிக்கும் போட்டியில் எல்லாம் வகுவாக பரிசுகளைத் தட்டியுள்ளவர். 1995ல் பாரதியார் பிறந்த நாளுக்கு தமிழ்நாடு முழுக்க மண்டலம் மண்டலமாக 'ராம் காஷ்யப் குருப்' பேச்சுப் போட்டி நடத்தியது. இறுதிச் சுற்றில் முதல் பரிசு வென்றார் டயானா. எட்டயபுரத்திலே பரிசுத் தொகை 3000 பெற்றதில் 1000 ரூபாய்க்குப் புத்தகங்களாக வாங்கி நெஞ்சில் அணைத்துக் கொண்டவர். பாண்டிச்சேரி இன்னர் வீல் கிளப், மைலாப்பூர் அகாடமி... இப்படி ரயில் தொடர் மாதிரி இவருக்குப் பரிசளித்த நிறுவனங்கள் வருகின்றன.

கலைஞரின் கையால் இரண்டு முறை பரிசு பெற்று வாழ்த்துப் பெற்றவர். பன்னிரண்டாவது மாணவர் புத்தக விழா மேடை இவருக்கு முக்கியமான இடமாக அமைந்து விட்டது. தமிழ் பண்பாட்டுக் கழகம் நடத்திய பேச்சுப் போட்டியில் முதல் பரிசை வென்று சிங்கப்பூர் செல்ல விருக்கிறார்.

உடன் படிப்பவர்கள் இப்படிப் பரிசு மழை ஒருத்திக்கேவா விழணும் என்று சோகமாகத்தான் பார்க்கிறார்கள். என்ன செய்வது? இவரைச் சுற்றிப் புயல் மையம் கொண்டு விட்டது!


ஈரோடு தமிழன்பனோடு நடுவராக இருந்தவர் எழுத்தாளர் சிவசங்கரி. டயானாவின் கனல் தெரிக்கும் பேச்சை 'இதோ எதிர்காலத்தில் ஓர் ஆக்ரோஷமான தலைவி' என்று பாராட்டியிருக்கிறார் சிவசங்கரி. ஏர்-இந்தியா சிங்கப்பூர் டிக்கெட் கொடுத்து கௌரவித்திருக்கிறது.

வீட்டுக்குள் நுழைந்தபோது தந்தையிடம் ''எப்படியப்பா எழுதுறது'' என்று கொஞ்சிக் கொண்டிருந்தார். நாம் நுழைந்ததும் கையில் வைத்திருந்த புத்தகத்தை ஒளித்து வைத்தார். பேச்சின் இடையில் அது பற்றி எதுவும் கேட்கவில்லை. கிளம்பும் போது மதன் கேப்ரியலிடம் 'நாங்க நுழைஞ்ச போது உங்க பொண்ணு ஏதோ கேட்டிட்டிருந் துச்சே' என்றோம். பதில் சற்று ஆச்சரியமாகத் தான் இருந்தது.

வெ. இறையன்பு எழுதிய 'ஐ.ஏ.எஸ் தேர்வும் அணுகுமுறையும்' புத்தகத்தைப் படித்திருக்கிறாள். அவருக்கு ஒரு கடிதம் எழுதத் தணியாத ஆசை.

எந்த ஐடியாவும் சொல்லாமல் ''என்ன தோணுதோ அதை எழுது'' என்ற மதன் கேப்ரியலின் தப்பித்தல் வாக்குமூலம்தான் நமக்குக் காதில் விழுந்தது!

— வேணுஜி



"பிரச்னைகள் பலவிதம்; சால்ஜாப்பு ஒரேவிதம்!"

— சென்ற இதழில் வெளியான சேலம் — மதுரை நகர அவல நிலை பற்றிய ரிப்போர்ட்டின் தொடர்ச்சி இது.

"கடவுளே வேலைபார்த்தாலும் கார்ப்பரேஷன் ஊழல்

தூத்துக்குடி


உள்ளாட்சி அமைப்பின் செயல்பாடு குறித்து விசாரிக்கவே நாம் கிளம்பியிருந்தாலும், தூத்துக்குடியில் எல்லோருமே குறிப்பிட்ட முதல் புகார் - ஸ்டெர்லைட் ஆலை பற்றித்தான். "முதலில் உடலில் உயிர் தங்கினால்தானே அடுத்த வசதிகள் தேவை?! உயிருக்கே உலை வைக்கும் அந்த உருக்காலை பற்றி எழுதுங்கள்" என்று கூறியவர்களே அதிகம்.

ஆலையும், தமிழக அரசும் எவ்வளவோ பாதுகாப்பு உத்தரவாதங்கள் அளித்தும் மக்கள் அவற்றைத் துளியும் நம்புவதாய்த் தெரியவில்லை. மீனவர் அமைப்புகளும், கத்தோலிக்க கிறிஸ்தவ அமைப்புகளும், ம.தி.மு.க.வும் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாய் மூடுவதில் மிகவும் தீவிரமாக உள்ளன. விஷவாயு கசிவு சம்பவமும், உலை வெடிப்பு சம்பவமும் தூத்துக்குடி மக்களை மெகா திகிலில் ஆழ்த்தியுள்ளன.


ஸ்டெர்லைட்டுக்கு அடுத்த, தலையாய பிரச்னை குடிநீர். கடந்த நாலைந்து மாதங்களாகவே தூத்துக்குடியில் குடிநீர் தட்டுப்பாடு தலை விரித்து ஆடுகிறது. "முன்பிருந்த அளவுக்கு இப்போது தட்டுப்பாடு இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்பெல்லாம் உப்புத் தண்ணீரைத்தான் கொதிக்க வைத்து குடித்துக் கொண்டிருந்தோம். இப்போது ஓரளவு அலைந்தால் ஒரு குடம் குடிநீர் கிடைத்து விடுகிறது" என்றார் கருணாகரன் என்ற இளைஞர்.

நகராட்சியின் பல பகுதிகளுக்குக் குடிநீர் இணைப்புகளே கிடையாது. லாரிகளில்தான் குடிநீர் விநியோகம்...! லாரி வரும் நாளோ நேரமோ நிர்ணயம் செய்யப்படாததால் எந்த நேரமும் காலிக் குடங்களோடு வீட்டு வாசல்





• அண்ணாநகர் பன்றிகள்



• ஸ்டெர்லைட் ஆலை

களில் பெண்கள் காத்துக் கிடக்கிறார்கள். "குடி நீர் மட்டும் பிரச்னையில்லை. குளிப்பதற்குக்கூட எங்களுக்கு தண்ணீர் கிடையாது. வோட்டு கேட்டு வந்த சேர்மனிடம் கிணறு அல்லது போர்வெல் அமைத்துத் தர வேண்டும் என்று நிபந்தனை வைத்தோம். உறுதிமொழி கொடுத்துத் தான் வோட்டு வாங்கிப் போனார். ஆனால், ஜெயித்த பிறகு எட்டிப் பார்க்கவே வில்லை" - என்று புலம்புகிறார்கள் தெரஸ்புரத்தைச் சேர்ந்த பெண்கள்.

ஒழியாது!"



• தேங்கி நிற்கும் கால்வாய்

தெரஸ்புரம் - சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கும் மீனவர் குடியிருப்பு. இப்பகுதியில் வீட்டுப் புழக்கத்திற்குக் கூட தண்ணீர் கிடைக்க வழியில்லை. "குளிப்பதற்கு தண்ணீர் எடுக்கக் கூட மைல் கணக்கில் நடக்க வேண்டிய கொடுமையை என்னவென்பது?!" என்று பொருமுகிறார் ஜோஸ்ஃபின் என்ற 'தெரசம்மாள் மகளிர் மன்றப் பெண்மணி.

"ஒரு நகராட்சி எல்லைக்குள் இவ்வளவு மக்கள் வசிக்கும் பகுதியில் ஒரு ஆழ் குழாய் கிணறுகூட இல்லாதது எவ்வளவு கேவலமான விஷயம்?" என்று நம்மிடம் கேள்வி கேட்டார் ம.தி.மு.க.வின் மீனவரணி துணை அமைப்பாளர் பி. தர்மன். "இந்த வருஷம் எதிர்பார்த்த அளவு மழை இல்லை. ஸ்டெர்லைட் ஆலை காற்றில் ஏற்படுத்தும் மாசுதான் அதற்குக் காரணம்" என்றும் கூறினார்.

(சமீபத்திய மழைக்கு முந்தைய நிலவரம் இது.)


"தூத்துக்குடியில் தொழிற்சாலைகள் நிறைய இருப்பதால் பெருவாரியான குடிநீர் அங்கே செலவாகி விடுகிறது" என்ற குற்றச்சாட்டும் நம் முன்வைக்கப்பட்டது.




• சம்பத்குமார்



• பி. தர்மன்



• கருணாகரன்



• ஜோஸ்ஃபின்



• ஹென்றி



* பஸ் போகும் மண்பாதை

தூத்துக்குடியின் சாலைகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவையெல்லாம் தார் பார்த்ததற்கான அறிகுறிகளே தெரியவில்லை.

''தூத்துக்குடியின் சாலைகளைப் போல மோசமான சாலைகளை வேறு எந்த நகரத்திலும் நீங்கள் பார்க்க முடியாது. அதேபோல் பல பகுதிகளில் சாக்கடை வசதி என்பதே இடையாது. எல்லார் வீட்டு சாக்கடைகளும் தெருவில்தான் சங்கமிக்கின்றன. இதனால் தெருக்களில் சாக்கடையும், பன்றிகளும்தான் இருக்கின்றன'' என்று கூறிய ம.தி.மு.க. மாவட்டச் செயலர் டி.எஸ்.எம். சம்பத்குமார், நம்மை அண்ணாநகர், ப்ரெயின் நகர் போன்ற பகுதிகளுக்கு அழைத்துச் சென்று காட்டினார். எங்கு பார்த்தாலும் சாக்கடை நீர்த் தேக்கம்... அவற்றில் கொசுக்களின் இனப் பெருக்க முயற்சிகள்...! கொசுக்களின் சுகமான உறக்கங்களை அடிக்கடி கலைத்து கலக்கல் செய்யும் பன்றிகள்.

"இந்தக் கொசுக்களோடும், பன்றிகளோடும் தான் நாங்கள் தினமும் போராட்ட வாழ்க்கை நடத்துகிறோம். எங்கள் பகுதியில் குப்பைத் தொட்டிகளோ, குப்பை வண்டிகளோ எட்டிப் பார்த்ததே இல்லை. தெருவில் குப்பையை குவித்து அதன் மீதேதான் நடந்து செல்ல வேண்டும் நாங்கள்..." என்று புலம்பினார்கள் அப்பகுதி மக்கள்.

கீழ்த்தட்டு மக்கள் வசிக்கும் தெரஸ்புரம், அண்ணாநகருக்கு தான் இந்தக் கதி என்றில்லை. மேல்தட்டு மக்கள் வசிக்கும் சிதம்பர நகரும் இதே அவல நிலையில்தான் காணப்படுகிறது.

''ஸ்டெர்லைட் பகுதியிலிருந்து புறப்பட்டு நகரின் பல குடியிருப்புப் பகுதிகளிடையே புகுந்து கடலில் கலக்கும் இந்தக் கால்வாயை வந்து பாருங்கள்...'' என்று நம்மை அழைத்துச் சென்று காட்டினார் ஓர் அரசு ஊழியர். "ஏராளமான சாக்கடைகள் கலக்கும் இந்தக் கால்வாய், தூர் வாரப்படாமல் கிடக்கிறது. இதனால் நீர் ஓடாமல், தேங்கி நின்று கொசுக்களையும், பலவித நோய்க் கிருமிகளையும் உற்பத்தி செய்து அனுப்பிக் கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

நம்மிடம் கூறப்பட்ட குறைகளை எல்லாம் தூத்துக்குடி சேர்மன் ஹென்றியிடம் சமர்ப்பித்தோம்.

"**தூ**த்துக்குடி மக்கள் படும் அவதியெல்லாம் நான் அறியாததல்ல. இதே சாலைகளில் தானே நானும் பயணப்படுகிறேன்?! தற்போது சாலைகளுக்கு அறுபது லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் துவங்கியுள்ளன. விரைவில் முக்கிய சாலைகளெல்லாம் தரமான சாலைகளாக உருவெடுத்துவிடும். தற்போது மூன்று குப்பை லாரிகள் நகராட்சி சார்பில் வாங்கப்பட்டுள்ளன. எல்லாப் பகுதிகளிலும் குப்பைகள் தினசரி அள்ளுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. தெருவிளக்கு பற்றி யாருமே உங்களிடம் குறை கூறியிருக்க மாட்டார்கள். கவனித்தீர்களா? அந்த அளவுக்கு தெருவிளக்கு விஷயத்தில் தீவிர அக்கறை காட்டி எல்லாப் பகுதியையும் இருட்டிலிருந்து மீட்டுள்ளோம். பழுதுகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரி பார்க்கப்படுகின்றன. சாக்கடைகள், குப்பைத் தொட்டிகள், போர் வெல்கள் போன்றவையெல்லாம் அத்தியாவசியத் தேவைகள்தாம். பணப் பற்றாக்குறையால் தான் அவற்றையெல்லாம் உடனே தீர்க்க முடியவில்லை. கோடிக்கணக்கில் வரி பாக்கி வசூலிக்கப்படாமல் நிற்கிறது. அவை வசூலானாலே தூத்துக்குடியின் முக்கால்வாசி தேவைகளை பூர்த்தி செய்து விடலாம். அந்த வசூலைத் தற்

போது தீவிரப்படுத்தியுள்ளோம். விரைவில் ஆக்கப் பணிகளும் தீவிரப்படுத்தப்படும்" என்றார் ஹென்ரி.

கோவை...

நகராட்சியாக இருந்த கோவை, மாநகராட்சியாக மாறின பிறகு என்னென்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன..? அல்லது ஏற்படவில்லை...? நகராட்சி, மாநகராட்சி என இரண்டு சுகமும் நுகர்ந்த சிலரை அணுகி வினவினோம்.

செங்காளியப்பன் (முன்னாள் எம்.எல்.ஏ)

கடந்த 15 வருடத்தில் நகர வளர்ச்சி, ராட்சச வளர்ச்சி என்று சொல்லலாம். ஆனால் தொழிலாளர்களிடம் பழைய ஒழுங்குமுறை, ஒற்றுமையுணர்வு இல்லை. தொழில் வளர்ச்சி மிகவும் பின்தங்கி விட்டது என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். கடந்த கால அதிகாரிகள் பெரியதாக ஏதும் சாதிக்கவில்லை. மேயர்தான் நிறைய செய்துள்ளார். இங்கே அவரவர் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளவே நேரம் சரியாயிருக்கிறது, தொழிலை எங்கே கவனிக்க..? மேயரைப் பொறுத்தவரை சுத்தமானவர். முழுமையான காமராசர் விரும்பி.

சிங்கை எஸ். பாலன் (அ.தி.மு.க - மேயரை எதிர்த்துப் போட்டியிட்டவர்)

பொதுப்பணித்துறை, அரசு, மாநகராட்சி என மூன்றும் சேர்ந்து செய்ய வேண்டிய ஆக்கிரமிப்பு அகற்றத்தை இந்த மாநகர மேயர் தன்னிச்சையாகச் செய்திருக்கிறார்; செய்கிறார். இது முறையில்லை. கோவையை சிங்கப்பூராக மாற்றுவேன் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்த மேயர், கோவையை கோவையாகவே நிலை நிறுத்தவில்லை. சுதந்தரப் பொன்விழாவை முன்னிட்டு ரூ.30 லட்சம் செலவில் 5 மின் விளக்குகள் அவசியமேயில்லை. வருடத்தில் 6 மாதத்திற்கு தண்ணீரே இருக்காத குளங்களில் 'போட் ஹவுஸ்' என்பது வேடிக்கையாயிருக்கிறது. கடந்த 15 வருடங்களாக (எம்.ஜி.ஆர், ஜெ ஆட்சியில்) அடிப்படை வசதிகள் நடந்தன. இந்த 9 மாதங்களாக ஆடம்பரச் செலவுகள்தான் நடக்கின்றன.

ஹரன் (மெக்கானிக்கல் இன்ஜினியர்):

'அதோ; இதோ...' என்றார்கள் இன்னும் ரேஷன் கார்டுதான் காணோம். என்னதான் நவீனம், நாகரீகம் என்று பேசிக் கொண்டாலும் சாலையோரத்தை கழிப்பிடமாக்குபவர்களை மாநகராட்சி ஏதாவது செய்தால் தேவலாம்.

கோவை செல்வம் (த.மா.கா. - மாவட்டச் செயலாளர்)

இங்கே படிப்பறிவு பெரிதாய் இல்லை. காசு சம்பாதிப்பதே யாருக்கும் குறி. சின்னியம்பாளையம் - செட்டிபாளையம் 'பைபாஸ்' சாலை திட்டம் நிறை



• ராஜேஸ்குமார்

வேறினாலே நம் மாநகரப் போக்குவரத்து முழுதும் கட்டுப்படுத்தப்பட்டுவிடும். மாமன்றத்தைப் பொறுத்தவரை கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து முதல் மாணவருக்கு பரிசுகள் கொடுப்பது அற்புத விஷயம்.

ராஜேஷ்குமார் (நாவலாசிரியர்)

பழைய ட்ரைனேஜை புதுப்பித்தது பெரிய சாதனை. இன்னமும் பிக்பாக்கெட்டுகளும், கேடிகளும் பழைய ஆரோக்யத்துடன் 'சிட்டி'யில் வலம் வருகின்றனர். மேம்பாலத்திற்குக் கீழே பகலிலேயே அடிக்கடி நகை, பணம் பறிப்பு சம்பவங்கள் நடப்பது அதற்கு உதாரணம். வருடா வருடம் வேனிற் காலத்தில் ஒய்யாரமாய் நடந்து வரும் குடிநீர் தட்டுப்பாடு இவ்வருடம் அறவேயில்லை. நகரை சுத்தப்படுத்தியதில் மேயர் ஒரு 'மிஸ்டர் க்ளீன்...!'

ஆனந்தலட்சுமி (தி.மு.க., 10-வது டிவிஷன் கவுன்சிலர்)

உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்னரே நகர வளர்ச்சி அசுர வேகத்தில் நடந்துள்ளது. 'கூட் ரோட்டில்' கூட 60 'சோடியம் வேப்பர் லேம்ப்' பொருத்தப்பட்டது எங்கள் டிவிஷனில்தான். 72 மாமன்ற உறுப்பினர்களும் கூடி விவாதித்து மாநகர தொழில் வளர்ச்சியின் மேம்பாட்டுக்கு அரசிடம் திட்டம் வகுத்துக் கொடுக்க வேண்டும். த.மா.கா.க்காரர் மேயர் என்றாலும் தி.மு.க. கவுன்சிலரான என்னால் இங்கு நிறைய சாதிக்க முடிந்திருக்கிறது.



• மேயர் கோபால கிருஷ்ணன்



• அனந்தலட்சுமி

மூ. ஆனந்தன் (வழக்குரைஞர்):

ஆக்கிரமிப்பு அகற்றத்தில் மேயரின் துணிச்சலுக்கு எந்த சம்பந்தமும் கிடையாது. சட்ட ரீதியாக இப்போது அதற்கு யாரும் 'ஸ்டே ஆர்டர்' வாங்க முடியாது. ஏன் ஆக்கிரமிப்பு அகற்றத்தைக் காட்டி வழக்குகூட கோர்ட்டில் தொடுக்க முடியாதபடி சட்டத் திருத்தம் வந்து ஒரு வருடத்திற்குள்தான் இருக்கும். இத் திருத்தம் வந்த நேரமும், மேயர் பொறுப்பேற்ற நேரமும் ஒரே சமயத்தில் அமைந்து விடவே பொதுவான கண்ணோட்டம் மறைக்கப்பட்டு விட்டது.

C. பத்மனாபன் (இ. கம்யூ (CPIM) கவுன்சிலர், பீளமேடு)

டெண்டர்களுக்கு ஒரு ஷெட்யூல்டு (Sheduled Rate) ரேட் வைத்திருக்கும் அரசு, சிமெண்டுக்கு மட்டும் மார்க்கெட் விலை கொடுத்து விடுகிறது. கூலிக்காரனுக்கு மட்டும் உள்ளதில் (market value) பாதிதான். இதனால் தான் மாநகராட்சியின் 'டெண்டர்' வேலைகள் தரமற்று இருக்கின்றன. அதனால் கடவுளே கார்ப்பரேஷன் வேலை பார்த்தாலும் ஊழலை ஒழிக்க முடியாத நிலை உள்ளது. அதிகாரிகள் அலுவலர்களிடம் சேவை மனப்பான்மை என்பதே அருகிவிட்டது. 'யாரிடம் என்ன கிடைக்கும்' என்கிற எதிர்பார்ப்பே அவர்களின் இயல்பாய் ஆகிப் போனது போல் தோன்றுகிறது. மேயர், கவுன்சிலர்களிடம் 'யெஸ் ஆர் நோ...' மட்டுமே எதிர்பார்க்கிறார்.

லோகநாதன் (உரிமம் ஆய்வாளர் - கோவை மாநகராட்சி)

கவுன்சிலர்களுக்கு அடிப்படை விஷயமே தெரிவதில்லை. மாநகர ஊழியர்கள், அதிகாரிகள் பணி வரையறுக்கப்பட்டது என்ற உணர்வு கூட இல்லாது உடனுக்குடன் காரியமாற்ற வேண்டும் என்பது போல் ஆலாய்ப் பறக்கிறார்கள். மாநகராட்சியின் தொழில் வரியை யாருமே கட்டுவதில்லை. ஆனால் எங்களைப் போன்ற அரசு ஊழியர்களிடம் மட்டும் அது பிடித்தம் செய்யப்படுகிறது.

A.A. கக்கூர் (முந்நாள் முனிசிபல் சேர்மன்)

முன்னேற்றங்கள் ஏற்படக்கூடிய அளவில் எந்தக் காரியமும் இன்னும் அடையாளம் காட்டப்படவில்லை. தேர்தலுக்கு முன் தனி அதிகாரிகள் மனசில் வந்த திட்டங்களை அறிவித்தனர். ஆனால் நடைமுறைப்படுத்தப் படவில்லை. நிர்வாகத்தைக் கட்டுக்குள் வைத்த அதிகாரி ஒருவர் உண்டென்றால் அது நிரஞ்சன் மார்ட்டின் ஒருவர்தான். கோவை மாநகராட்சியில் டெண்டர்கள் குறைவு. இதற்குள் ஏதோ



• கோவை செல்வம்



• பத்மநாபன்

'அடிப்படைக் கோளாறு' இருக்கிறது.

தொழிலைப் பொறுத்தவரை புதிய டெக்ஸிக்கோடு தொழில் நகர் தவிர்த்து பல்லடம், அவினாசி, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம் என்று விரிவு - பரவலாக்கப்பட்டதால் சரிவு போல் தோன்றுகிறது. மற்றபடி சரிவல்ல...! மாநகராட்சிக்கு அரசு தரக்கூடிய இப்போதைய நிதி ஒதுக்கீடுகள் அதிகம். அதிகாரமும் அதிகம்.

இவர்களெல்லாம் மாறி மாறி 'குட்டும் ஷொட்டுமாய்' நகர முன்னேற்றம் பற்றி கொடுக்க, இதற்கெல்லாம் விடை காண கேள்விகளைச் சுமந்து கொண்டு கோவை மேயர் கோபாலகிருஷ்ணனைச் சந்தித்தோம்.

"பதவியேற்றவுடன் அதி வேகமாக நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகள் அகற்றப் பட்டது. அது தங்களின் தீவிர செயல்பாட்டின் காரணம் என்று சொல்லிக் கொண்டாலும் இதில் உங்கள் முயற்சி ஒன்றுமில்லை. இது முழுக்க முழுக்க PWDயின் வேலை எனவும், ஆக்கிரமிப்பு அகற்றத்திற்கு 'ஸ்டே வாங்கும்' சட்டம் முற்றிலுமாக கடந்த வருடம் நீக்கப் பட்டு விட்டது எனவும், அதன் பின்னணியில் தான் காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதையாக இந்த இடிப்பு சம்பவமும், தங்களின் பதவியேற்பின் சூழலும் அமைந்து விட்டது எனவும் கூறுகிறார்களே..?"

"அப்படியொன்றும் இல்லைங்க. இப்பவும் அவங்க நினைச்சா 'ஸ்டே' வாங்க முடியும். அரசும், PWDயும் கோடி காட்ட எங்களால் துரிதமாக இயங்க முடிந்தது. இதற்கு எப்படிப் பட்ட எதிர்ப்புகள்.... ம்.... அது அவஸ்தைப்பட்டவர்களுக்குத்தான் தெரியும்."

"புறம்போக்கு வீடுகள் இடிப்பு, அப்புறப் படுத்துதல் என பயமுறுத்துகிறார்களே...? வீடிழக்கும் ஏழைகளுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்..?"

"இதை உடனடியாக செய்யப் போவதில்லை. தேவைப்படும் புறம்போக்குகளை அகற்றுவதற்கு முன் வேறு இடத்தை ஏற்பாடு செய்து அவர்களைக் குடியேறச் செய்து விட்டுத்தான் இந்த நடவடிக்கையே எடுப்போம். மேலும் ஆற்றுப்



• சுக்கூர்



• செங்காளியப்பன்

புறம்போக்கு, பள்ளப் புறம்போக்கு என குடியிருக்கும் ஏழைகளுக்கு எந்த நேரமும் ஆபத்துள்ளதே. அதை அவர்களுக்கு உணர்த்திக் கொண்டும், நகர்த்திக் கொண்டும்தான் இருக்கிறோம். ஆனால் இதுவே பல வருஷங்களாக, அரசு இடத்தை ஆக்கிரமித்து, வியாபாரம் செய்து கொழுத்து அரசையே எதிர்க்கும் மனிதர்களுக்குக் கருணை காட்டலாமா... நீங்களே சொல்லுங்கள்...!"

"Tower Lamps 30 லட்ச ரூபாயில் 5 அவசியந்தானா?"

"சுழலும் கோபுர விளக்குகள்" என்று சொல்லுங்கள். சென்னையில் பீச் பக்கம் இரண்டு வைத்துள்ளார்கள். இங்கு நகரின் முக்கிய பகுதிகளில் 5 வைத்துள்ளோம்.

"அது அப்படியொன்றும் பிரமாதமில்லை. சோடியம் வேப்பரை விட ஒளி கொஞ்சம் கூடுதல்... அவ்வளவுதான் என்று சொல்லப் படுகிறதே...!"

"என்னங்க இது... என்னமோ 'காஸ்மோபாலிடன் சிட்டி' பாம்பே மாதிரி ஆக்கணும், சிங்கப்பூர் போல் உருமாற்றணும்ன்னெல்லாம் வாய் வலிக்கப் பேசறாங்க... இதை அதுக்கு ஒரு ஆரம்பமா எடுத்துக்காம...! சரி சோடியம் வேப்பர்கள் எரிந்து கொண்டிருக்க, இந்த டவர் விளக்கை மட்டும் அணைத்துப் பாருங்கள். சொன்னவர்களே இருண்டு போய் விடுவார்கள்."

"இண்டஸ்ட்ரீஸ் படுத்து விட்டது... பஞ்சாலைகளில் உற்பத்தித் தேக்கம்... பவுண்டரிகள் மூடல்...!" – தொழிலதிபர் என்ற முறையில் கருத்து சொல்லலாமே...?"

'Working capital' இல்ல சார்...! வங்கிகளிடம் நிறைய பணம் இருக்கிறது. ஆனால் கடந்த காலங்களைப் போல் ரிலீஸ் பண்ண மறுக்கிறது. பிடிவாதம் பிடிக்கிறது. வங்கிகளில் பணத்தை தேக்கி வைத்து, தொழில் வளர்ச்சிக்கும் ரிலீஸ் செய்யாது இருந்தால் தொழில் முடங்கத்தானே செய்யும். இதைத் தவிர வேறு வலுவான காரணம் இருப்பதாக எனக்குப் படவில்லை."

"பாதாளச் சாக்கடை பழைய நகராட்சிப் பகுதிகளில் சரி... மாநகராட்சியோடு இணைக்கப்பட்டவைக்கு எப்போது...?"

"திட்டம் இருக்கிறது. கூடிய விரைவில் உருவம் பெறும். நகரைப் பொறுத்தவரை ரூ. 1000/– கட்டி விட்டால் உடனடியாக 'செப்டிக் டாங்கை' பாதாளச் சாக்கடையில் இணைத்து விடுகிறோம். இந்தக் கழிவுச் சாக்கடையெல்லாம் கொண்டு போய் விட வெள்ளலூரில் புதிதாக ஒரு கழிவு நீர்ப் பண்ணை 750 ஏக்கரில் ஏற்படுத்தியுள்ளோம். அதில் 50,000 மரக்கன்றுகள் நடப்படும், கால்நடைத் தீவனங்கள் பயிரிட்டும் பராமரிக்கிறோம்."

"திருச்சி சாலை – புறநகர் பஸ் நிறுத்தம் என்னவாயிற்று...?"

"கவலைப் படாதீர்கள் 8 அல்லது 9 மாதத்தில் வந்து விடும்."

"மாநகராட்சி வேலைகளுக்கு டெண்டர்கள் குறைவு, எங்கோ குளறுபடி நடக்கிறது என தகவல்...?"

"ரேட் குறைவு, பில் பாஸாவதில்லை என்கிற நிறைய குறைபாடுகளினால் யாரும் டெண்டர் கோர முன் வருவதில்லை. அந்தக் குறைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு, இப்போது இவ் விஷயம் ஒரு சீர் நிலைக்கு வந்துள்ளது."

"படகுத் துறை ஓர் அவசரக் குடுக்கை வேலை. PWD ஒப்புதல் அளிக்கவில்லை என ஒரு நம்பகத் தகவல்...?"

"அதெல்லாம் இல்லை. பணி நடை பெறுகிறது. அதுவும் அமைச்சர் 'பொங்கலூர் பழனிச்சாமி' அவர்களின் நேரடிப் பார்வையில் 'Navy' கம்பெனியின் 'போட்டல் டிஸைன்' அது...!"

"மேயர் கவுன்சிலர்களிடம் Yes or No மட்டுமே கேட்கிறார். அவர்களின் கருத்துக்களை ஒரு பொருட்டாகவே..."

ஆமாம். முடியும், முடியாது என்று சொல்லத்தான் நானிருக்கிறேனே...! வீணாக ஏன் ஏகமாய்ப் பேசி நேரத்தை வீணாக்க வேண்டும்? எந்த ஒரு விஷயத்திலும் நான் முடியாது என்று சொன்னது...ம்... ரொம்ப... ரொம்ப ரேர்...!"

"அந்தந்த கவுன்சிலர்களுக்குக் கூடத் தெரியாது அவர்களின் டிவிஷனுக்குள் சென்று விடுகிறீர்களாமே... குறை கேட்டு மனுவும் வாங்கிக் கொள்கிறீர்களாமே...?"

"அதிலென்ன தப்பு...? ஒரு கவுன்சிலர் சரியாக மக்களுக்குப் பணியாற்றுகிறாரா...? இல்லையா...? என்று பார்க்க ஒரு மேயர் திடீர் விசிட் செய்வதில் இவர்களுக்கென்ன பிரச்னை...? மக்களுக்குப் பணியாற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்களா...? நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ற வேலைகள் நடந்துள்ளனவா?" என்று ஒரு சர்ப்ரைஸ் விசிட் மேயர் செய்ய வேண்டாமா...? ■

தூத்துக்குடி ரிப்போர்ட்: **கிரண் நியூஸ்**

கோவை: **கா.சு. வேலாயுதம்**

புகைப்படங்கள்: **இருகூர் முத்து**

15

பந்துலுன்னு ஒரு பெரியவர். தயாரிப்பாளர், இயக்குநர், நல்ல நடிகர், கதை எழுதத் தெரிந்தவர் – இப்படிப் பல திறமைகளும் குடி கொண்ட ஒரு நல்ல மனுஷன். அவரை நான் 1935லேயே பார்த்திருக்கேன்.

அப்ப அவங்க நாடகம் – 'சம்சார நௌஹா'ன்னு பேரு. பெங்களூர்ல போட்டுகிட்டிருந்தாங்க. எங்க ராஜமாணிக்கம் கம்பெனி அப்ப பம்பாய்ல இருந்து பெங்களூருக்கு வந்து இருந்தது. புதன்கிழமைகள்ல எங்களுக்கு நாடகம் கிடையாது. அப்போ நாங்க அவங்க நாடகத்தைப் பார்க்கப் போவோம். எங்களுக்கெல்லாம் கூல் ட்ரிங்ஸ் வாங்கிக் கொடுக்கவே அவங்க டிராமாவுக்கு ஆவற கலெக்ஷன் பத்தாது. இத்தினிக்கும் அது அவங்க சொந்த ஊர். நாங்க வெளியில இருந்து போயி நாடகம் போட்டவங்க. ஆனா எங்க டிராமாவுக்குதான் அதிகமா வசூல் ஆவும்.

அப்புறமா பந்துலு மெட்ராஸ் வந்தார். நாம் இருவர்ல ஆக்ட் பண்ணார். அப்படி அப்படியே பல துறைகள்லேயும் பிரமாதமா முன்னுக்கு வந்தார். ஒரு சில ஹீரோக்கள் அவரைப் பயன்படுத்தி தங்களோட ஆசையை நிறைவேத்திக்கிட்டாங்க. அந்தப் படத்தை எடுங்க, இந்தப் படத்தை எடுங்கன்னு அவரைக் கேப்பாங்க. இவரும் எடுப்பாரு.

ஆயிரத்தில் ஒருவன் படத்தில நான் நடிச்சேன். அப்ப எனக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்ட கருவாட்டு குழம்பு விஷயங்களைத்தான் நான் ஏற்கனவே சொல்லியிருக்கேனே!

ஒரு தரம் நான் நெப்ட்யூன் ஸ்டுடியோவில வேற ஒரு படத்துக்கு மேக்கப் போட்டுக்கிட்டு வெளியே வந்தப்போ பந்துலு எதிர்ல வந்தார்.

'நமஸ்காரம்'ன்னார்.

'ஒண்ணும் தேவையில்லைய்யா' என்று நான் ரொம்ப கோவமா உரக்கப் பதில் சொன்னேன்.

நான் அப்படிச் சொல்றவன் இல்ல. ஏன்னா நான் பந்துலுவை ரொம்ப மதிக்கிறவன். வேணும்னுதான் அப்படிக் கத்திப் பேசினேன். கொஞ்ச தூரத்தில் எம்.ஜி.ஆர் உட்கார்ந்து ஏதோ புஸ்தகம் படிச்சிட்டிருந்தார். அவருக்குக் கேக்கணும்னுதான் குரலை உயர்த்திப் பேசினேன்.


'ஏன் இப்படிக் கத்தறீங்க?'ன்னு பந்துலு கேட்டார்.

'ஏன்யா, நான் எத்தனை தரம் சொன்னேன், என் பேரை தனியா டைட்டில்ல காமிக்காதீங்கன்னு... 'மற்றும் பலர்'ல போட்டாலும் எனக்கு ஆட்சேபணையில்ல. அட, பேரே போடாட்டாலும் எனக்குக் கவலையில்ல. என் பொழப்பை கெடுக்காதீங்கன்னு எவ்வளவோ சொன்னேன். நீங்க என்ன சொன்னீங்க... 'நான்தான் படத்தோட டைரக்டர். உங்களை எங்கே போடணும்னு எனக்குத் தெரியும்'னு சொல்லி தனியா கார்டு போட்டீங்க. என்ன ஆச்சு? உங்களோட அடுத்த படத்தில நான் இல்லே...'

இதைக் கேட்டதும் தூரத்தில இருந்த எம்.ஜி.ஆர். திரும்பி உட்கார்ந்துட்டார்.

இப்படி நிறைய விஷயங்கள் சொல்லி'டே

நான் வில்லன்



இருக்கலாம்.

'ரொம்ப ஆசைங்க வாழ்க்கையில கூடாது. அப்படி ஆசைங்க இருந்தா நெஞ்சு வேகாது'ன்னு பெரியவங்க சொல்வாங்க. ஏன் இப்படிச் சொல்றாங்கன்னு எனக்குச் சரியா புரியறதில்ல. இது உண்மையா இருந்தா எனக்கு நெஞ்சு மட்டும் இல்லே – உடம்பே

வேகாதுன்னுதான் சொல்லணும். எனக்கு அவ்வளவு ஆசைகள் இருக்கு. அதையெல்லாம் உங்ககிட்ட சொல்லப் போறேன். அதுக்கு முன்னாடி இப்ப ஒரு மாசமா எனக்கு புதுசா ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய ஆசையை முதல்ல சொல்லிடறேன்.

சமீபத்தில அமெரிக்க விஞ்ஞானிகள் ஒரு புதிய நட்சத்திரத்தைக் கண்டு பிடிச்சிருக்காங்கன்னு பேப்பர்ல படிச்சேன்.



சூரிய ஒளியை விட ஒரு கோடி மடங்கு அதிகமான ஒளி உள்ள கிரகமாம் அது. 110 டிகிரி வெயில் வந்தாலே நம்மால தாங்க முடியாம உஸ்ஸ்... புஸ்ஸுங்கறோம். அப்படின்னா அங்கே எப்படி இருக்கும்? எனக்கு அந்தப் புதிய நட்சத் திரத்துக்குப் போகணும்னு ஆசை. பெரிய விஷயமில்ல. வினாடிக்கு மூணு லட்சம்

எம்.என். நம்பியார்

மைல் ஸ்பீடுல போனா, இருபத்தையாயிரம் வருஷங்கள்ல அங்கே போய்ச் சேர்ந்துடலாம். நம்ம ஆசை எப்படி?

இது இல்லாம ஏற்கனவே எனக்குள்ள இருக்கற பழைய ஆசைகளைக் கேக்கறீங்களா? எதுவும் துர் ஆசைகள் இல்ல. பிறருக்கு இடைஞ்சல் இல்லாத ஆசைகள்தாம்.

பிலிப்பைன்ஸ் பக்கத்தில் பசிபிக் கடல் நாற்பதாயிரம் அடி ஆழம். அங்கே போவணும்.

ஆசியாவும் அமெரிக்காவும் சேர்ற இடத்தில இருக்கிற கடலுக்கு பேரிங் ஸ்ட்ரெய்ட்னு பேரு. அதுல போய் வட துருவத்தில் ஐஸ்லாண்ட்ல எறங்கணும். சாதாரணமா போக முடியாது. 1916ல் அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல் ஒண்ணு ட்ரை பண்ணி பெயில் ஆயிடுச்சி. அப்புறமா அணு சக்தியில இயங்கிற நீர் மூழ்கிக் கப்பல்ல போய் இறங்கினாங்க. அது மாதிரி போவணும்.

உலகத்திலேயே ரொம்ப நீளமான மலைத் தொடர் 'ஆண்டிஸ் மவுன்டென்'. தென் அமெரிக்காவில இருக்கு. கிட்டத்தட்ட வெனிசுலாவில ஆரம்பிச்சி கொலம்பியா வழியா போயி பெருவுக்கும் பிரேஸிலுக்கும் மத்தியில போயி— இப்படி போய்கிட்டே இருக்கு. 6400 கி.மீ. நீளம். நம்ம ஹிமாலயன் ரேஞ்சை விட்டா அடுத்து உலகத்திலேயே உயரமான மலைப் பகுதி இங்கே தான். 26000 அடிக்கு மேல். அந்த மலைத் தொடர்ல இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கம் வரை போவணும்னு ஆசை. இந்த மலையில் இருந்து அமேஸான்கிற பிரம்மாண்டமான நதி உற்பத்தி ஆகி, போவுது. அதன் பிரம்மாண்டத்தைப் பத்தி நீங்க படிச்சிருப்பீங்க. அட்லாண்டிக்கில் ஒரு சின்னக் கப்பல்ல மேற்கு நோக்கிப் போயி பெருவில இறங்கணும்னு ஆசை.

இதுக்கெல்லாம் நிறைய ஆயுசு வேணும்.

அந்தக் காலத்தில சன்னியாசிங்க ஆயிரம் வருஷங்கள்ளாம் வாழ்ந்தாங்கன்னு சொல்றதுண்டு. உங்கள்ல பல பேர் இதை நம்ப மாட்டீங்கன்னு தெரியும். ஆனா அப்படி நீண்ட

ஆயுள் வாழ முடியும்னுதான் நான் நம்பறேன்.

மூச்சுப் பயிற்சி முக்கியம்.

இப்ப நாம என்ன பண்றோம், மூச்சை உள்ளுக்கு இழுக்கறோம்... வெளியே அப்படியே விட்டுடறோம்.

ஆனா பெரிய பெரிய சன்னியாசிங்க, ரிஷிங்க அப்படியில்ல. ஒவ்வொரு மூச்சிலும் கொஞ்சம் கொஞ்சம் சேர்த்து வச்சிப்பாங்க. மூச்சு எக்ஸர்ஸைஸ் பண்றது பத்தி தெரிஞ்சவங்களுக்குதான் நான் சொல்றது புரியும்.

அதுவுமில்லாம அவங்க அந்தக் காலத்தில நல்ல காத்தில வாழ்ந்து வந்தாங்க. நம்மைப் போல பொல்யூட்டட் காத்து இல்ல.

அவங்க புளி சாப்பிடல. மிளகாய் சாப்பிடல. விஷயம் தெரியுமா? புளி நம்ம ஊர் சரக்கே இல்ல. அரேபியாக்காரங்க ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால இங்கே கொண்டு வந்ததுதான் புளி. அதே போல போர்ச்சுகீஸ்காரங்க கொண்டு வந்ததுதான் மிளகாயும், முந்திரிப் பருப்பும். இதெல்லாம் நம்ம சாப்பாட்ல சேர்ந்து நம்ம உடம்பைக் கெடுத்து வருது.

நம்ம, பெரியவங்க காரத்துக்கு மிளகு, இஞ்சி தான் யூஸ் பண்ணி வந்தாங்க.

இதெல்லாம் சில டிப்ஸ். உடம்பு மேல எனக்கு அக்கறை உண்டு. அதனாலதான் எனக்குத் தெரிஞ்ச சில விஷயங்களை உங்களோட பகிர்ந்துக்கிறேன்.

அதே போலத்தான் மனுஷனோட உயரமும். ஆதி காலத்து மனுஷன் 15 அடி, 16 அடி, ஏன் 20 அடிகூட உயரமா இருந்தான்னு சொல்றாங்க. ராட்சசர்கள் இருந்திருக்காங்க. சாத்தியம் இருக்கு. இதைப் பத்தி ரொம்ப ஆழமா ஆராய்ந்த விஞ்ஞானிகள் சொல்ற சில உண்மைகளையும் நாம புரிஞ்சிக்கணும். இது பத்தி ஒரு விஞ்ஞானி எழுதினதை நான் நாப்பது வருஷத்துக்கு முன்னே படிச்சது ஞாபகம் வருது. ஆதி காலத்தில மனுஷனும் மிருகமும் ஒண்ணாதான் வாழ்ந்தாங்க. அப்ப ராத்திரியில மிருகங்க தூங்கின பிறகுதான் மனுஷன் இரை தேடப் போவானாம். தங்களை மிருகங்கிட்ட இருந்து பாதுகாத்துக்கிறதுக்காக பகல் பூராவும் குகையில ஒளிஞ்சிக்கிட்டிருந்தான். குகைன்னா எப்படி தெரியுமா! வெளியில இருந்து ஒரு இருபது அடி உள்ளுக்குள்ளே. அதுவரைக்கும் சுவர் மேல சுவருன்னு அடுக்கி கும்மிருட்டில தான் மனுஷனோட வாசம்.

இங்கேதான் விஞ்ஞானிகள் ஒரு விஷயம் சொல்றாங்க. சூரியன்கிட்ட இருந்து 'அகண்டார ஒளி'ன்னு ஒரு ஒளி நமக்குக் கிடைக்குது.

நாம பகல்ல பெரும்பாலும் வெயில்லே இருக்கோம். அகண்டார ஒளியால நம்ம உயர வளர்ச்சி பாதிக்கப்படுது. ஆனா அப்ப குகைக்குள்ள மனுஷன் பகலெல்லாம் இருந்தப்போ அவன் இந்த ஒளியால் பாதிக்கப்படாம ரொம்ப சேஃபா இருந்தான். அதுதான் பன்னிரண்டு அடிக்கு மேல வளர்ச்சி.

எனக்குக்கூட 'நாம இன்னும் ஒரு ரெண்டு மூணு இஞ்ச் உயரமா இருந்திருக்கலாம்'னு அப்பப்ப தோணும். என்ன பண்றது?

உடல் உயரம் குறைவா இருந்தால்கூட பரவாயில்லை... ஆனா மனசு கொஞ்சம் கொஞ்சமா உயரமான இடத்தைத் தேடிப் போகணுமா இல்லையா..? அதுக்கு ஒவ்வொரு மனுஷனும் முயற்சி பண்ணணும். சபரிமலைக்கு மாலை போட்டுக்கிறதும் அந்த முயற்சிகள்லே ஒண்ணு.

இதை நான் செய்யறதோட என்னால முடிஞ்சவரை மத்தவங்களையும் ஒழுங்கா செய்ய வைக்கிறேன். சினிமா எத்தனைக்கெத்தனை கற்பனை உலகமோ ஆன்மீகம் அத்தனைக்கத்தனை நிஜ உலகம். இதைப் புரிஞ்சுக்கற பக்குவத்தை எனக்குக் கொடுத்த அந்த சாஸ்தாவுக்குத்தான் நன்றி சொல்லணும்.

இந்த முறை சபரிமலை போகும்போது எல்லா கல்கி வாசகர்களுக்கும் சேர்த்து வேண்டிக்கு வேண்ட வரட்டுமா..? ■

(முற்றும்)



எங்களுடைய 6 வயது மகன் ஸ்ரீராமுக்கு நமது விஞ்ஞானிகளே வடிவமைத்து இயக்கிய ராக்கெட் பற்றி விளக்கிச் சொன்னேன். அவனும் கதை கேட்பது போல் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டான்

தீபாவளிக்கு மறுநாள் சரியான மழை — மின்னல் இடியுடன்! நான் ஆபீசிலிருந்து வந்தவுடன் ராக்கெட்டில் விண்வெளிக்குச் சென்ற நமது விஞ்ஞானிகள் இன்றுதான் பட்டாசு கொளுத்தி தீபாவளி கொண்டாடுகிறார்கள்'' என்றான், இடியை வெடியாக பாவித்து! அதைக் கேட்ட எங்களுக்கெல்லாம் வெடிச்சிரிப்புதான்!

— சீர்காழி வி. ரேவதி

அண்டார்டிகா போகிறார் நம்மாளு!



இந்த வருடத்து நேஷனல் அட்வெஞ்சர் அவார்டு, மேஜர் ஹரீஷ் கோஹ்லிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

எவரெஸ்ட் சிகரத்தை எட்டும் சாதனையைவிட சாகசமானதைச் சாதிக்க நினைத்த ஹரீஷ் கோஹ்லி, 82ல் இமாலயத்தை நடந்து கடந்தார். 1995ல் இமாலயத்தில் பனிச்சறுக்கு செய்தார்.

இப்போது தேசிய சாகச சாதனைப் பரிசு பெற்றுக் கொண்டவுடன், பரிசுப் பணத்தை வைத்துக் கொண்டு அன்டார்டிகாவுக்கு பயணம் மேற்கொள்ளப் போகிறாராம்!

"எதற்கு அன்டார்டிகாவுக்கு?"

"இளைஞர்களின் மனத்தில் சாகச உணர்ச்சியைத் தூண்டிவிடத்தான்... இமாலயத்தில் நடைப் பயணம் செய்த போது, நிறைய டிராவல் ஏஜெண்டுகள், அந்தப் பகுதியில் குறிப்பிட்ட இடங்கள் வரை சிறு சிறு நடைப்பயண ஏற்பாடுகள் செய்து, டூரிஸ வளர்ச்சிக்கு வித்திட்டார்கள். நான் நினைத்ததும் அதுதான். இளைஞர்களிடம் ஸ்பிரிட் ஆஃப் அட்வெஞ்சர் தோன்றி, நாட்டுக்கு அவர்கள் சிறப்புச் சேர்க்க வேண்டும்!"

ஹரீஷைப் பொறுத்தவரை எவரெஸ்ட் சிகரத்தை எட்டுவது 'அட்வெஞ்சர்' அல்ல. "யாரோ சுமையைத் தூக்கிவர, ஷெர்ப்பாக்கள் வழிகாட்டி உதவ, அங்கே உள்ள சுத்தமான இடங்களை அசுத்தப்படுத்திவிட்டு வருவது சாகசமா என்ன?" என்று கேட்கிறார். அவர் மலை ஏறும்போது, தமது சுமையைத் தாமே தூக்கிக் கொள்ளுகிறார். "பிறர் தமது சுமையைத் தூக்கிக் கொண்டு வர, தாம் மலை ஏறுவது என்பது எஜமானத் தனம்; அது சாதனை இல்லை!"

"நாங்கள் இமாலயத்தில் பனிச்சறுக்கு செய்தபோது போனபோது, 3000 கிலோ மீட்டர்களை 97 நாட்களில் கடந்தோம். அதில் 18000 அடிக்கு மேற்பட்ட சிகரங்களே கிட்டத்தட்ட இருபது இருந்தன. நாங்கள் எட்டே பேர்கள்தாம். போர்ட்டர்களும் கிடையாது, ஷெர்ப்பாக்களும் கிடையாது! இமாலயத்தில் நடந்து கடந்தபோதும் நாங்கள் நாலே பேர்தான். பனிக்காற்றும், எலும்பை உறைய வைக்கும் குளிரும் இருந்தாலும், யாரும் இதுவரை போகாத பகுதிகளுக்கு எங்களால் போக முடிந்தது. இமாலய 'மேப்'பையே சரிசெய்ய முடிந்தது!" என்கிறார் மேஜர் ஹரீஷ் கோஹ்லி.

"இமாலயப் பகுதி, சுற்றுலாவைப் பொறுத்தவரை அதிகக் கவனம் ஈர்த்ததில்லை. ஆனால் நிறைய வாய்ப்புக்கள் இங்கே இருக்கின்றன. நான் எழுதப் போகும் புத்தகத்தில் இவற்றைப் பற்றி நிறையக் குறிப்பிடுவேன்!" என்கிறார்.

இமாலயப் பகுதியில் பனிச்சறுக்கு செய்தது, தமது அன்ட்டார்டிகா பயணத்துக்கு மிகவும் உதவும் என்கிறார். ஒரு ஸ்வீடிஷ்காரர் இதற்கு முன்பு இந்தச் சாதனையைச் செய்திருந்தாலும், ஆசியாவிலிருந்து ஒருவர் அன்ட்டார்டிகா பயணம் மேற்கொள்ளுவது இதுவே முதல் முறை. இதற்காக 86 லட்ச ரூபாய் வரை சேமித்து விட்டார் கோஹ்லி. (தனி விமானத்தில், ஒரு குறிப்பிட்ட பகுதி வரை செல்ல வேண்டும்.) இமாலய எக்ஸ்பெடிஷன்களுக்கு இந்திய ராணுவமே பண உதவி செய்ததாம்.

"எனக்கு அநுபவம் இருக்கிறது. பனியையும் குளிரையும் சமாளிக்கும் மன உறுதி இருக்கிறது. அன்ட்டார்டிகாவில் நடந்து என் நாட்டுக்குத் தனிப் புகழ் தேடித் தருவேன்!" என்கிறார் கோஹ்லி.

— **சித்தார்த்**

படம்/நன்றி : **சன்டே மிட்-டே**



• ப்ரீதி வரைந்த தஞ்சை ஓவியம்



• ப்ரீதி

ஓவிய சிநேகிதி;

பிறந்தது வங்காளத்தில், வளர்ந்தது தமிழ்நாட்டில், கல்யாணம் பண்ணிக் கொண்டது விசாகப்பட்டினத்துக்காரரை. வீட்டில் பேசுவது பெங்காலி. ஆனாலும் ஆச்சர்யம், அதிக சரளம் தமிழில்தான்! கணவர் சிவகுமார் உபயத்தில் கொஞ்சம் தெலுங்கு. 'என்ன ஒரு தேசிய ஒருமைப்பாடு!' என்று வியந்து போனோம்!

ப்ரீதி ஒரு ஓவியர். குறிப்பாகத் தஞ்சாவூர் ஓவியங்களில் வெளுத்து வாங்குகிறார்.

பள்ளியில் படிக்கும்போதே பலவித கலைகளில் ஆர்வம். வீட்டிலும் ஊக்கம். ரங்கோலி, மெஹந்தி போட்டிகளில் தவறாமல் கலந்து கொண்டு, தவறாமல் பரிசு பெற்றவர்.

சமீபத்தில் வரைந்த படைப்பு ஒன்றைக் காட்டினார் ப்ரீதி. 24 X 18 அளவில் உருவான தஞ்சாவூர் ஓவியம். அலங்காரமும் கலைநுணுக்கமும் நிறைவாக இருந்தன.

"பொதுவாக இந்த மாதிரி ஓவியங்களில் குழந்தை கிருஷ்ணரைத்தான் உருவாக்குவார்கள். எனக்கு விநாயகரை ரொம்பப் பிடிக்கும் என்பதால் அவரை வரைந்திருக்கிறேன்'' என்றார்.

ஓர் 'ஒருமைப்பாடு' போட்டி!

வங்காளத்தில் பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து, ஆந்திராக்காரரை மணம் புரிந்து சின்ன அளவில் ஒரு தேசிய ஒருமைப்பாட்டை நடத்திக் காட்டியிருக்கும் ஒரு ப்ரீதிதான் நம் கண்ணில் பட்டார்.

ஊரில் எத்தனை எத்தனை ப்ரீதிகளோ, 'ப்ரீதர்'களோ இருக்கலாம்!

இப்படித் தம் நடவடிக்கைகளால் மாநிலங்களுக்கு 'ஓவர் பிரிட்ஜ்' போட்டவர்கள் உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது உண்டா?

கல்வி, கலை, காதல் என்று எந்தக் காரணமாகவும் இருக்கலாம்! ஏதாவது ஒன்றின் பொருட்டு 'மாநில இணைப்பு' நடத்தியவர்களைப் பற்றி இருபது வரிகளுக்கு மிகாமல் எழுதி அனுப்புங்கள். புகைப்படங்கள் மிக முக்கியம்.

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கட்டுரையும் ரூ. 100 பரிசு பெறும். கடைசி தேதி 8.12.97.

மாடலிங் காதலி!

இந்த ஓவியத்தை உருவாக்குவதற்கு தேவைப்பட்ட முயற்சிகளை ப்ரீதி விவரித்தார். ப்ளைவுட் வாங்குவது. அதில் உருவத்தை அவுட்லைனாக வரைவது. குறிப்பிட்ட துணியை அதன் மேல் ஒட்டுவது. (எந்தவித சுருக்கமும் இல்லாமல்). ஜெய்ப்பூரிலிருந்து வரும் சின்னச் சின்ன 'கெம்ப்' கற்களை ஒட்டுவது. சின்ன கூம்பு வடிவ உருளையில் சாக் கலவையை நிரப்பி மெஹந்தி இடுவதுபோல் நுணுக்கமாக 'மக்கிங்' செய்வது. (லேசான விரிசல் விழுந்தாலும் மொத்த உழைப்பும் போச்சு). பல மணி நேர உழைப்பு தேவைப்படும்.

பானைகளில் டிசைனிங் செய்வதும் இவருக்குக் கை வந்த கலையாக இருக்கிறது. விரிசல் இல்லாத உலர்ந்த மண் பாண்டத்தின் மீது கருப்பு ஆயில் பெயின்டை அடித்து, அதன் மீது வெள்ளை சிமெண்டினால் வெகு நுணுக்கமாகச் செய்யும் வேலைப்பாடு, இவற்றையும் விவரித்தார்.

இவற்றையெல்லாம் உருவாக்க கற்பனைத் திறன் வேண்டும். அதைவிட முக்கியமாகப் பொறுமை.

"கலைப் பொருளை உருவாக்கும் போது மட்டுமா? அல்லது பொதுவாகவே பொறுமைசாலியா?" என்று கேட்டோம்.

"கோபமே வராது. எதையுமே கூலாக எடுத்துக் கொள்வதுதான் பழக்கம்" என்று சட்டென்று வந்த பதிலை நம்பத் தோன்றியது. காரணம், அப்படிக் கூறியது அவரது அம்மாவும், காதல் கணவரும்.

பலவித கலை வெளிப்பாடுகளில் (பூ அலங்காரம் உட்பட) சிறுவயதிலிருந்தே ஆர்வம் காட்டினார் என்றாலும் தஞ்சாவூர் ஓவியத்தில் தேர்ச்சி பெற்றது சமீபத்தில் தானாம். "திருமணமான பிறகு நிறைய ஓய்வு நேரம் கிடைத்தது(!). கொட்டு கொட்டென்று உட்கார்ந்திருப்பானேன் என்று எங்கள் ஏரியாவிலேயே (மேற்கு அண்ணாநகர்) உள்ள பாலாஜி மாஸ்டரிடம் இந்தக் கலையைக் கற்றுக் கொண்டேன்."

மனத்திருப்திக்குதான் இவர் கைவினைப் பொருட்களைச் செய்யத் தொடங்கினார் என்றாலும், இவற்றிற்குப் பரவலான டிமாண்ட் இருப்பதால் சில கடைகளின் மூலமாக இவற்றை விற்கவும் செய்கிறார்.

"பத்து மாதப் பெண் குழந்தைக்கு அம்மாவாக இருப்பதால் முன்பளவு நேரம் கிடைப்பதில்லை. என்றாலும் கலை ஆர்வம் காரணமாக தினமும் சில மணி நேரங்களாவது என் க்ரியேடிவிடிக்கு ஒதுக்குகிறேன்."

திருமணமாகும் வரை ஒவ்வொரு வாரமும் தவறாமல் மாங்காடு கோவிலுக்குச் செல்வாராம். அதே போல் தூய ஆண்டனி சர்ச்சுக்கும் வாராந்திர விசிட் உண்டு. (அட, மத ஒருமைப்பாடும் வந்தாச்!)

ப்ரீதியின் அடுத்தக்கட்ட நடவடிக்கை, விளம்பர உலகைக் கலக்குவது. மாடலிங்கை மிகவும் காதலிக்கிறார். ■

— குல்லூ

அட்டை வண்ணப்படம், படங்கள் : **ப்ரவீண்குமார்**

இளமைப் போட்டி முடிவு

பன்னிரண்டு வார இளமைப் போட்டிக் கேள்விகளுக்கு நூற்றுக்கணக்கான வாசகர்கள் சரியான பதில் எழுதி அசத்திவிட்டார்கள்! ஆகவே பரிசுக்குரியவரைக் குலுக்கலில் தேர்ந்தெடுக்க வேண்டியதாகிவிட்டது!

தேர்வான அந்த அதிர்ஷ்டசாலி :

கே. முருகன், 454, சிவராஜ் தெரு, கதிர்வேடு, புழல், சென்னை - 66.


நாம் முன்பே அறிவித்திருந்தபடி ரூ. 5000/- பரிசு பெறுகிற அதிர்ஷ்டசாலி ஆணாக இருப்பதால், ஆறுதல் பரிசுக்கு ஒரு பெண் அதிர்ஷ்டசாலியை, அதே குலுக்கல் முறை மூலமே தேர்ந்தெடுத்தோம். அவர் :

திருமதி அ. செல்வக்குமாரி அழகிரிசாமி, 'கிருஷ் நிவாஸ்', 4AK/41, நேதாஜி தெரு, அழகாபுரம் காட்டூர், சேலம் - 16.

இவர் ஓர் அழகான ஹேண்ட்-பாக் பரிசாகப் பெறுகிறார்.

இனி சரியான விடைகள்:

1. மார்க்கண்டேயன், 2. கீர்த்தி ரெட்டி, 3. மணிரத்னம், 4. பிசிராந்தையார், 5. சிக்மன்பிராய்ட், 6. தளபதி, 7. பிரமிளா, 8. God of small things, 9. ராஜாஜி, பெரியார், 10. சசிகலா, 11. பிரபு, 12. குஷ்வந்த் சிங்.



ரட்சகன்

அநியாயம் கண்டு பொங்குபவர் நாகார்ஜுன். (மணிக்கட்டிலிருந்து கழுத்து வரை நரம்பு ஃபாஸ்ட் பார்வர்டில், கிராபிக்ஸ் உபயத்தில் புடைக்கிறது!). இவரைத் துரத்திக் காதலிக்கும் முன்னாள் பிரபஞ்ச அழகி சுஷ்மிதா சென் இந்நாளிலும் தோற்றத்திலும், காஸ்ட்யூம் தேர்விலும் அசத்துகிறார். நடிப்பிலும் தேறுகிறார்.

கிரீஷ் கர்னார்ட் - ரகுவரன் சகோதரப் பகையைப் பனிச்சென்று இரண்டே காட்சிகளில் பதியவைத்ததற்குப் பாராட்டு.

அண்ணன் சதியால் சிறைக்குப் போன ரகுவரன் (புதிய பரிணாமம் காட்டிவிடவில்லையென்றாலும் கச்சித நடிப்பு) தன் அடியாட்கள் மூலம் அண்ணனின் தொழில் சாம்ராஜ்யத்தைக் கலகலக்கச் செய்கிறார். இவர்களையும், மகளின் காதலனையும் மோதவிட்டு ஒழிக்கக் களம் அமைக்கிறார் அண்ணன். முடிவு தெரிந்ததே - நல்லோர் டூயட் பாட, அல்லோர் மடிகின்றனர்.

மலைச்சரிவு, இடிந்த கோட்டை, கடலலைகளில் ஜீப்பின் மீது நாயகி, இரவில் பூங்கா அனைத்தையும் அற்புத லைட்டிங்கில் 'ரிச்'சாக அள்ளிக் கொண்டு வருகிறது காமிரா (அஜயன் வின்சென்ட்).

காதல் என்பதன் 'உடுப்பி, முனியாண்டி விலாஸ் வகைகளை அலசும்' பாடலும், நிலவில் கால்வைத்தது சத்தியமாக ஆம்ஸ்ட்ராங் இல்லை எனும் பாடலும், மலரைத் தூக்கிச் செல்வது சந்தோஷமே என்பதை அறிவிக்கும் பாடலும் ரெஹ்மான் இசையில், ஸ்ரீநி, சாதனா, ஹரிணியின் ஜில் குரல்களில் சொக்க வைக்கின்றன.

மெழுகுவர்த்திகளை ஊதி 'எரியவிடுவது', நீர்க்குமிழிக்குள் நாகார்ஜுன், நாயகனைக் கண்ணுக்குள் சிறைப்பிடிக்கும் நாயகி, கோபக்கார ஹீரோ கிழித்து விடக்கூடாதென்று சின்தெடிக் பேப்பரில் கதை எழுதும் ஹீரோயின் - கலையான சின்னச் சின்னக் கற்பனைகள் இயக்குனர் பிரவீண் காந்திக்கு நிறைய இருக்கின்றன.

ஆனால் பிரும்மாண்டத்துக்காக நிறைய செலவு செய்தவர்கள் கதைக்காகவும் கொஞ்சம் மூளையைச் செலவழித்திருக்கலாமே என்ற ஆதங்கமும் பிரம்மாண்டமாகவே எழுகிறது. ■

— ஜி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 208/-; Overseas : Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 104/-; Overseas : Rs. 600/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

L.R.SWAMI / P.P.